மலர் - 04 இதழ் - 12 ஜூன் 2026

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவுநர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ரவீந்தர்வரி

சோழ மன்னன் செய்த ஆணவக்கொலை
முனைவர் தேமொழி

இரவின் முழங்கிய மங்குல் மாமழை
பாமயன்

"பராசக்தியும் மொழிப்போரும்" - 4
முனைவர் சிவ இளங்கோ

தமிழகத்தின் நவ கைலாயங்கள்
பொதிகை குடும்பன் சண்முகக் குமார்

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor
Dr. C. Rajeswari

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 04 இதழ் - 12
ஜூன் 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்

செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. **சோழ மன்னன் செய்த ஆணவக்கொலை** — 3
முனைவர் தேமொழி

2. **மரபின் வேர்கள் - 6** — 6
டாக்டர் புதேரி தானப்பன்

3. **இரவின் முழங்கிய மங்குல் மாமழை** — 12
பாமயன்

4. **திராவிட மன்னர்கள் அசுரர்களா?** — 16
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

5. **கொட்டைக்கரந்தை: நரை திரை மாற்றி காய சித்தியளிக்கும் காயகற்ப மூலிகை** — 22
டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்,

6. **குற்றாலம் 'சன்னியாசிப் புடவு' கல்வெட்டு படிக்கப்பட்டது.** — 28

7. **"பராசக்தியும் மொழிப்போரும்" - 4** — 31
முனைவர் சிவ இளங்கோ

8. **புகழேந்திப் புலவர்** — 39
பரிதிமாற் கலைஞர்

9. **'நீ' என இறைவனை விளித்துப் பாடிய பக்திப் பாடல்கள்** — 56
மு. பழநிச்சாமி

10. **தமிழகத்தின் நவ கைலாயங்கள் (Nava Kailasams of Tamil Nadu)** — 71
பொதிகை குடும்பன் சண்முகக் குமார்

11. **அம்மன் கோயில்களில் பௌத்தத் தடயங்கள்** — 84
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

12. **எளிய முறையில் யாப்பறிவோம்** — 89
நெருப்பலையார்.இராம இளங்கோவன்

13. *TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor* — 91
Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

சோழ மன்னன் செய்த ஆணவக்கொலை

முனைவர் தேமொழி

சான் பிரான்சிஸ்கோ

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழகத்தில் நிலவிய சோதனை மற்றும் சித்திரவதை நடைமுறைகள்; ஒரு வரலாற்றுப் பார்வை என்ற தலைப்பில் மதுரை டோக் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் முனைவர் தெ.துர்க்காதேவி; சோதனை, சித்ரவதை ஆகிய இரு முறையில் தீர்ப்பளிக்கும் முன்னர் விசாரணைக்கு உள்ளாகும் கைதி எதிர்கொள்ளும் கொடுமைகளையும் துன்புறுத்தல்களையும் (தமிழ் மரபு அறக்கட்டளை - திசைக்கூடல், மே 2026) விவரித்து இருந்தார். விசாரணைக்கு உள்ளானவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டால் அவருக்குக் கொடுக்கப்படும் தண்டனைகளை விசாரணைக்கு உள்ளாகும் பொழுதே கைதிகள் அனுபவிப்பதும் உண்டு.

தமிழ் இலக்கியங்கள் வழியாக சுண்ணாம்புக் காளவாயில் போடுதல், கல்லைக் கட்டி கடலில் மூழ்கடித்தல், கழுவில் ஏற்றல், மாறுகால் மாறுகை வாங்கல், யானையின் காலால் இடறப்படுதல், கசையடி, பிரம்படி, நாடுகடத்தல், தூக்கிலிடுதல் போன்ற பற்பல தண்டனைகளை நாம் அறிந்துள்ளோம். சிற்பங்களாக தொல்லியல் தரவுகளாகவும் அவை கிடைத்து வருகின்றன. தண்டனைகள் எப்படிப்பட்டவை என்பதற்கு சாக்ரடீசுக்கு நஞ்சு அருந்துமாறு கொடுக்கப்பட்ட தண்டனை, உலகம் உருண்டை என்று சொன்னதற்காக உயிருடன் எரிக்கப்பட்ட புரூனோ என்று வரலாறு முழுவதும் உலகம் முழுவதும் மனிதக் குலத்தில் பலகாலமாகக் கொடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டது பதிவாகியுள்ளது.

சான்றுகள் இல்லை என்றே கூறப்பட்டாலும் மக்களிடையே பலகாலம் வழங்கப்படும் கதை அம்பிகாபதி அமராவதி காதல் கதை. இக்கதையை அக்காலத்தில் நிலவிய ஆணவக் கொலை என்று கருதப்பட வேண்டிய நிகழ்ச்சி எனலாம். வரலாற்றில் அறியப்படும் கதை மாந்தர்களை ஒட்டி வழங்கும் இக்கதையின் காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. சோழப்பேரரசன் மகள் இளவரசி அமராவதியும், கவிச் சக்கரவர்த்தி கம்பரின் மகன் புலவர் அம்பிகாபதியும் காதலிக்கிறார்கள். இவர்கள் காதலை ஏற்காத சோழ மன்னன்

அம்பிகாபதிக்கு மரணதண்டனை கொடுக்கிறான். காதலன் மறைந்ததை அறிந்த அமராவதியும் உயிர் நீக்கினாள் என்பது இக்காதல் காப்பியத்தின் முடிவு.

அம்பிகாபதி-அமராவதி காதல் நாம் நன்கு அறியும் கதையாக, பாடலாக (கவிஞர் சே.ர.குமாரசாமி) , காப்பியமாக (பேராசிரியர் சுந்தர சண்முகனார்), நாடகமாக (மறைமலை அடிகள்), திரைப்படமாக (இளங்கோவன்) ஆகியோர்களால் பல்வேறு வடிவங்களில் உயிர் பெற்றுள்ளது. இவற்றில் 'அமரன் அம்பிகாபதி' என்ற தலைப்பில் கவிஞர் சே.ர.குமாரசாமி பி. ஏ. (தேவி பதிப்பகம், 1956) எழுதியுள்ள நூலில் அம்பிகாபதியைக் குற்றவாளி என்று கூறிக் கொதித்து எழும் குலோத்துங்கச் சோழனின் ஆணையைப் பின்வரும் வரிகளில் குமாரசாமி விவரிக்கிறார்.

"நடத்தையிலே தீயநெறி நச்சரவா யானான்!
கடத்திச் சென்றேகுங்கள் ! காவலர்காள் ! ஓய்ந்திருக்கும்
வாட்கு விருந்தாய் வழங்குங்கள்! போர்க்களிற்றின்
தாட்கிடையே இன்னவனைத் தந்து நசுக்குங்கள்! (70)
தீங்கு புரிந்தென் திருவைக் கவர்ந்தவனை
ஏங்குங் கடலுள் எறியுங்கள்! பண்புலவாக்
கொச்சை வாழ்வேற்ற கொடியவனைக் கொண்டேகி

உச்சிமலை நின்று உருட்டியுயிர் வாங்குங்கள் !
தீராப் பசியுடைய தீய விலங்குகட்குச்
சேரா விருந்தாய்ச் செலுத்துங்கள்! என்னாவி
கண்டு தவழும் கரைகாணாப் பேருவகைக்
கொண்டு மகிழ குறையெல்லாம் தான்விலகச்
செய்க இவற்றுள் செயலொன்று!" என்றரசன்
மெய்கனலே கொண்டெரிய மேவும் சினங்குமுற (80)
ஆங்கு கொதித்தெழுந்து ஆர்த்தான்! ...
[அமரன் அம்பிகாபதி, சே.ர. குமாரசாமி]

ஒருவரை எப்படி எல்லாம் கொல்லலாம் என்ற பட்டியல்தான் இது. வாளால் வெட்டிக் கொல்வது, யானைக் காலால் தலையை இடறுவது, கடலில் மூழ்கடிப்பது, மலையிலிருந்து உருட்டுவது, விலங்குகளுக்கு இரையாக்குவது என்று வழக்கில் இருந்த தண்டனைகளைத் தனது பாடலில் சேர்த்துள்ளார் குமாரசாமி. குற்றம் புரிந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்குக் கொடிய தண்டனையை வழங்குவதை ஏற்காத மனித நேயம் இக்காலத்தின் வளர்ச்சி. மரண தண்டனையைப் பெரும்பாலான நாடுகள் நீக்கிவிட்டன. சித்திரவதைகளையும் கட்டுக்குள் கொண்டு வருகின்றன. விஷவாயுக் கூடத்தில் இரக்கமின்றிக் கொல்லப்பட்ட யூதர்களின் மரணத்தை இன்றைய உலகில் ஒருவர் கூட ஏற்கமாட்டார்கள்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.
[குறுந்தொகை 40]

என்ற பாடலை வியந்து வியந்து போற்றுகிறது தமிழ் உலகம். அதே வேளையில், உயிர்களிடையே இயல்பாக எழும் காதல் உணர்வுகளுக்காக ஆணவக் கொலைகள் இன்றும் தமிழ்நாட்டில், இந்தியாவில் நிகழ்த்தப்படுகின்றன என்ற உண்மை நாம் எந்த அளவு மனித நேயத்தில் முன்னேறி உள்ளோம் என்று காட்டுகிறது.

மரபின் வேர்கள் - 6

டாக்டர் புதேரி தானப்பன்
டில்லி

திறனாய்வாளர் : டாக்டர் புதேரி தானப்பன்
நூல் பெயர்: மரபின் வேர்கள் (சொல்லாய்வுக் கவிதைகள்)
ஆசிரியர்: பாவலர் கருமலைத்தமிழாழன்
வசந்தா பதிப்பகம்
தொடர்பு எண்: 94434 58550

பக்கங்கள்: 160
விலை: உரூபா: 200 - 00

121) தலை என்னும் சொல்:

தலை என்னும் சொல் குறித்த மரபுத் தொடர்கள் பற்றி "தலை" என்னும் கவிதையில் பாவலர் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

"தலை தலை என்று அடித்துக் கொண்டேன்" என்றால் பலமுறை உரைத்தலாகும்.

"இவன் வந்தாலே தலைவலிதான்" என்றால் தொல்லை கொடுப்பவன் என்று பொருள்.

"தலை தப்பியது" என்றால் பெரிய ஆபத்து நீங்கியது என்று பொருள்.

"தலை போகும் காரியம்" என்றால் இன்றியமையாத பணி என்று பொருள்.

"தலைமேல் காத்துள்ளது" என்றால் தலையான பணி உள்ளது என்று பொருள்.

"தலையைக் கொடுத்தேனும்" என்றால் எவ்வளவு இன்னல் வந்தாலும் என்று பொருள்.

"தலையில் அடித்துச் சொல்" என்றால் சத்தியம் செய்து சொல் என்று பொருள்.

"தலை காட்டி வந்துவிட்டேன்" என்றால் சிறிது நேரம் மட்டும் இருந்ததாகப் பொருள்.

"தலைக்கு நூறு உரூபாய்" என்றால் ஒவ்வொருவருக்கும் நூறு உரூபாய் என்று பொருள்.

"தலை முழுகிவிட்டேன்" என்றால் உறவு முறிந்தது என்று பொருள்.

"தலைக்கனம்" என்று சொன்னால் ஆணவம் என்று பொருள்.

"தலைக்கு மேலே வெள்ளம்" என்றால் எல்லை மீறிப் போய் விட்டது என்று பொருள்.

என்றெல்லாம் சொல்லுகிறார். இவர் சொல்லாத தொடர்களும் உள்ளன.

தலையாலே அடித்துக் கொண்டேன்

தலை தலைக்குப் பெருந்தனம்

தலையாலே தண்ணீர் குடித்தான்

உன் தலையில் ஏதாவது இருக்கா இல்லையா?

உன் தலையில் என்ன களிமண்ணா இருக்கிறது?

தலைப்பிரட்டை என்று முழு உருவம் பெறாத தவளைக் குஞ்சுக்குச் சொல்வார்கள்.

தாய்க்குத் தலைப்பிள்ளை இவன்தான்.

தலைக்காவிரி.

தலைக்கால்வாய்.

தலை முதல் கால் வரை.

தலைப் பிரசவம் .

தலைவாசல்.

உனக்கு எதுக்கு இந்தத் தலைஇரட்டை வேலை?

தலை வளைப்பு ஓட்டு.

தலை சரியாக இருந்தால் வால் சரியாக இருக்கும்.

தலைகால் தெரியாமல் ஆடுகிறான் .

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று.

தலைக்கு மேல் வேலை உள்ளது என்றால் ஏராளமான பணிகள் உள்ளன என்று பொருள்.

தலையெழுத்து நான் என்ன செய்ய?

அது என் தலைவிதி.

மூத்த மகனை அல்லது மூத்த மகளை தலைச்சன் என்பார்கள். தலைக்கட்டு என்றால் குடும்பத்தில் மூத்த உறுப்பினர் என்று பொருள். என இப்படிப் பல தொடர்கள் உள்ளன.

122) கண் என்னும் சொல்:

கண் என்னும் சொல் பயன்படும் விதங்களைப் பற்றிப் பார்ப்போம்.

"கண்ணே" என்று அழைத்தால் அது அன்பின் மிகுதியாகும்.

அவன் மீது "ஒரு கண் வை" என்றால் அவனது நடத்தை ஐயத்துக்கு உரியதாகும்.

"கண்ணாரக் கண்டேன்" என்றால் மனம் நிறைந்து மகிழ்வுடன் முழுவதுமாகப் பார்த்தல் ஆகும்.

"கண்ணாகக் கவனிக்க வேண்டும்" என்றால் அக்கறையுடன் கவனிக்க வேண்டும் என்பதாகும்.

"கண்மூடித்தனமாக நடத்தல்" என்றால் மூட நம்பிக்கையுடன் செய்தல் ஆகும்.

"கண் உறுத்துகிறது" என்றால் பொறாமைப் படுகிறான் என்று பொருள்.

"என் கண்ணைத் திறந்தான்" என்றால் வழிகாட்டி உதவினான் என்று பொருள்.

இப்படி இன்னும் பல சொற்கள் உள்ளன.

123) கை என்னும் சொல்:

கை தொடர்பான சொற்களைக் காண்போம்.
கையூட்டு வாங்குபவன்.
கையாலாகாதவன்.
எச்சில் கையால் காக்கா ஓட்டாதவன்.
கைராசி இல்லாதவன் என்றெல்லாம் சொல்லுவார்கள்.
கைகலப்பு என்றால் அடிதடி என்று பொருள்.
கைமாற்று என்றால் ஒரு பொருள் கொடுத்து, வேறு ஒரு பொருள் வாங்குதல்.
கைநாட்டு என்றால் படிக்காதவன் என்று பொருள்.
கையெடுத்துக் கும்பிடுதல் பணிவைக் குறிக்கும்.
கைகோர்த்துச் செல்லல் அன்பைக் குறிக்கும்.
கையைக் கடிக்கிறது என்று சொன்னால் போதவில்லை என்று பொருள்.
கைகொடுத்தான் என்று சொன்னால் உதவி செய்தான் என்று பொருள்.
கைதேர்ந்தவன் என்று சொன்னால் திறமையானவன் என்று பொருள்.
கையடித்துக் கொடுத்தல் என்றால் சத்தியம் செய்தல் என்று பொருள்.
கைதூக்கி விடுதல் என்றால் உடனிருந்து உயர்வுக்கு உதவி செய்தல் என்று பொருள்.
கைபிடித்தான் என்றால் மணம் செய்தான் என்று பொருள்.
கைவிட்டான் என்றால் உறவை முறித்துக் கொண்டான் என்று பொருள்.
கைம்பெண் என்றால் கணவனை இழந்தவள் என்று பொருள்.
கையேந்தல் என்றால் பிச்சை எடுத்தல் என்று பொருள்.
கையகப்படுத்தல் என்றால் அரசு மக்கள் நலனுக்காய் எடுத்துக் கொள்ளுதல் ஆகும்.
கைநழுவிப் போய்விட்டது என்றால் வாய்ப்பு தவறிவிட்டது என்று பொருள்.
கையாடல் என்றால் திருடுவது என்று பொருள்.
கையாள் என்றால் தன்னைக் காப்போன் என்று பொருள்.
கறைபடியாக் கைகள் என்றால் திருடாத கைகள் என்று பொருள்.
கை ஓங்கி உள்ளது என்றால் செல்வாக்கு மிக்கவன் என்று பொருள்.
கைகூடி வருதல் என்றால் நினைத்தது நடக்கிறது என்று பொருள்.
கைமேல் பலன் என்றால் உடனடி நன்மை என்று பொருள்.
கை நீளம் என்றால் திருடுபவன் என்று பொருள்.
வெறுங் கையால் முழம் போடுதல் என்றால் வாய்ச் சவடால் என்று பொருள்.
கை கழுவி விட்டான் என்றால் நட்பினை விட்டான் என்று பொருள்.
கைபிடித்தல் என்றால் கடைபிடித்தல் என்று பொருள்.

இவ்வாறு கை தொடர்பான ஏராளமான சொற்கள் புழங்குவதை பாவலர் நமக்கு நினைவூட்டுகிறார்.

124) வாழ்க வளமுடன் - வாழ்க வளத்துடன் என்னும் சொற்கள்:

பிறந்த நாள், மண நாள், விழா நாள் போன்ற நாள்களில் நாம் வாழ்த்தும்போது, "வாழ்க வளமுடன்" என்றுதான் பொதுவாக எல்லோருமே வாழ்த்துவது வழக்கம். ஆனால் சில பல

ஆண்டுகளாக இது தவறு; இப்படி வாழ்த்தக் கூடாது என்று ஆன்றோர் பெருமக்கள் கூறி வருகின்றனர். இப்படி வாழ்த்துவது எப்படித் தவறாகும் என்று பாவலர் இங்கே விளக்குகிறார்.

அதாவது, குடம் + உடன் = குடத்துடன்; பணம் + உடன் = பணத்துடன் என்று அத்து சாரியை வரவேண்டும். வளமுடன் என்று சொல்லும்போது 'முடன்' என்னும் சொல் முடக்குதலைக் குறிக்கிறது என்கிறார் பாவலர். அதனால் அது வாழ்த்துதலைக் குறிக்காது என்றும் இதனை அறியாமல் நாம் எல்லோருமே தவறாக வாழ்த்துகிறோம் என்றும் கூறுகிறார். அதனால் இனி நாம் எல்லோரும் வாழ்க வளத்துடன் என்றுதான் வாழ்த்த வேண்டும். அதுவே சரியாகும்.

125) மீசை என்னும் சொல்:

மீசை என்னும் சொல்லைப் பற்றிப் பாவலர் கீழ் வருமாறு உரைக்கிறார்.

பெண்களுக்குக் கார் கூந்தல் அழகைத் தருவதுபோல ஆண்களுக்குக் கரும் மீசை அழகைத் தருகிறது.

மீசையில் பல வகை உள்ளன. அரிவாள் மீசை; இட்லர் மீசை; வீரப்பன் மீசை; பட்லர் மீசை; சார்லி சாப்ளின் மீசை; புதர் மீசை; கட்டான மீசை இப்படிப் பல விதங்கள் உள்ளன.

பந்தயத்தில் தோற்பவர்கள் பாதி மீசையை மழிப்பார்கள்; மீசை நரைத்தாலும் ஆசை நினைக்கவில்லை என்பார்கள்; "மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை" என்னும் பழமொழியும் உண்டு. மீசையில்தான் எத்தனை வகை! அவரவர் ஆசைக்கு ஏற்ப மீசையை வைத்து அழகு பார்க்கிறார்கள்.

126) மறைந்துபோன மரபுகள்:

ஒவ்வோர் இனத்துக்கும் ஒவ்வொரு மரபுவழி வழக்கங்கள் உள்ளன. அந்த மரபுவழி வழக்கங்கள்தான் ஓரினத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாக உள்ளன. அந்த வகையில் நமது தமிழ்நாட்டில் மறைந்து போன மரபுகளைப் பற்றிப் பாவலர் இங்கே அடுக்குகிறார்.

ஆங்கிலக் கல்வி பரவலாக இல்லாதபோது எல்லாக் குழந்தைகளும் தமது அம்மாவை அம்மா என்றுதான் அழைத்தன. ஆனால் ஆங்கிலக் கல்வி பரவலாக ஆகிவிட்ட நிலையில் ஆங்கிலம் பயிலும் குழந்தைகள் பெரும்பாலும் தத்தம் அம்மாவை மம்மி என்றுதான் அழைக்கிறார்கள். மம்மி என்றால் பதப்படுத்தப்பட்ட பிணம் என்று பொருள்.

நிலாவைக் காட்டி தாய்மார்கள் குழந்தைகளுக்குச் சோறு ஊட்டிய காலம் போய் இப்பொழுது தொலைக்காட்சிப் பெட்டியையும் அலைபேசியையும் காட்டிச் சோறூட்டுகிறார்கள்.

தாலாட்டுப் பாடல்களைப் பாடிக் குழந்தைகளைத் தூங்க வைத்தார்கள் அந்தக்காலத் தாய்மார்கள். ஆனால் இப்போதுள்ள தாய்மார்கள் அலைபேசியைக் கையில் கொடுத்துத் தூங்க வைக்கிறார்கள்.

பசுஞ் சாணமிட்டு வீட்டை மெழுகினார்கள் அக்காலத்தில். அதனால் நோய்க் கிருமிகள் தடுக்கப்பட்டன. இப்பொழுது அழகான சிமிட்டித் தரையும் வழவழப்பான சலவைக் கற்களாலும் மொசைக் கற்களாலும் டைல்ஸ் கற்களாலும் ஆனதரைகள் உள்ளதால் சாணத்திற்கு இடமில்லாமல் போய்விட்டது.

மின் விசிறி இல்லாத அந்தக் காலத்தில் பனை ஓலையால் செய்யப்பட்ட விசிறிகளைக் கொண்டு வெப்பத்தைத் தணித்துக் கொண்டார்கள். அந்த இடத்தை இப்பொழுது மின்விசிறிகளும் குளுருட்டிகளும் பிடித்துக் கொண்டன.

அந்தக் காலத்தில் பெயரன், பெயர்த்திகள் தாத்தா பாட்டிகளின் பக்கத்தில் உட்கார்ந்து கதை கேட்பார்கள். இப்பொழுது எந்தப் பெயரனும் பெயர்த்தியும் தாத்தா பாட்டிகளின் பக்கத்தில்கூடப் போவதில்லை.

குழந்தைகள் நடைபயில அந்தக்காலத்தில் பெரும்பாலான வீடுகளில் நடைவண்டி இருந்தது. இப்பொழுது அந்த இடத்தைக் குட்டிக் குட்டி மிதிவண்டிகளும் மின் வண்டிகளும் பிடித்துக் கொண்டன.

காலையில் எழுந்ததும் காலாற நடந்து போய் ஆலங்குச்சி, வேலங்குச்சி, வேப்பங் குச்சியால் பல் துலக்கிக் காலைக்கடனை முடித்துக் கிணறு, கால்வாய், ஓடை, ஆறு இப்படி ஏதோ ஒன்றில் நீச்சலடித்துக் குளித்துவிட்டு வருவார்கள். இப்போது சிற்றூர்களிலும் குச்சிக்கு மாற்றாக செயற்கை புருஸ் வந்துவிட்டது. காலைக்கடன்கள் முழுவதும் வீட்டுக்குள்ளேயே அடங்கிவிட்டது.

பெண்களின் முகத்தில் மஞ்சளும் குங்குமமும் விலகியோட, அங்கே செயற்கைப் பூச்சும் செயற்கைப் பொட்டும் வந்துவிட்டன.

உள்ளத்தில் கள்ளம் கபடு இன்றிப் பால் போன்ற தூய மனத்துடன் அக்கால மனிதர்கள் பழகி வந்தார்கள்.அந்தப் பழைய மரபுகள் யாவும் இப்பொழுது மாறிவிட்டது என்பது பாவலரின் ஏக்கமாக வெளிப்படுகிறது.

127) வாழ்த்துகள் என்னும் சொல்:

"வாழ்த்துகள்" என்னும் சொல்லில், 'க்' என்னும் ககர ஒற்றைச் சேர்த்து இந்நாளில் பலர் "வாழ்த்துக்கள்" என்று சொல்லவும் எழுதவும் செய்கிறார்கள். இப்படி எழுதுவதும் பேசுவதும் பிழையானது என்று பாவலர் தனது கடைசிக் கவிதையில் தெளிவுபடுத்துகிறார்.

'கள்' என்னும் சொல் பெயர்ச் சொல்லாகவும் விகுதியாகவும் விளங்குகிறது. பனங்கள், தென்னங்கள், ஈச்சங்கள் என்னும் சொற்களில் உள்ள 'கள்' என்னும் சொல் பெயர்ச்சொல்லாக இருக்கிறது. ஆனால் மரங்கள், மாடுகள், மீன்கள், முட்கள், மூடர்கள், மேடுகள் என்னும் சொற்களில் உள்ள 'கள்' என்னும் சொல் பன்மையைக் குறிக்கும் 'கள்' விகுதியாகும்.

அப்படியானால் வாழ்த்துக்கள் என்னும் சொல்லில் உள்ள 'கள்' என்பது பெயர்ச்சொல்லா அன்றி 'கள்' விகுதியா என்னும் வினா எழுகிறது. இது பெயர்ச் சொல்லும் அல்ல; 'கள்' விகுதியும் அல்ல. இது தவறான சொல். ஆகவே வாழ்த்துக்கள் என்று ககர ஒற்றுடன், அதாவது 'க்' சேர்த்து எழுதுவது தவறு; வாழ்த்துகள் என்று 'க்' போடாமல் எழுதுவதுதான் சரி என்கிறார் பாவலர்.

இவ்வாறு நூற்று இருபத்து ஏழு சொற்களை எடுத்துக்கொண்டு அவற்றை யாரும் செய்யாத கவிதை வடிவில் ஆய்வு செய்து ஒரு மிகப் பெரிய விழிப்புணர்வை நமக்கு ஏற்படுத்தி இருக்கிறார்.

இது ஓர் அருமையான நூல். நன்குக் கற்றவரும் சொற்களைப் பற்றிச் சிந்திக்காமல் இளமையிருந்து வரும் பழக்கத்தினால் பல சொற்களைத் தவறாகப் பேசியும் எழுதியும் வருகிறோம் என்று நினைக்கும் போது நமக்கு வெட்கமாக இருக்கிறது. இந்த நூலில் உள்ள சொற்களின் திருத்தங்களைப் பார்ப்பவர்களுக்கு இச் சொற்கள் சரி என்று தோன்றி, அவர்களும் இச் சொற்களைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

அந்த வகையில் இப்புத்தகம் நமக்கும் ஒரு வழிகாட்டியாக உள்ளது என்பதை அறிந்து பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறோம்.

இந்த நூல் மெத்தப் படித்தவர்களுக்கும் பள்ளி ஆசிரியர்களுக்கும் கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கும் கூட தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே இந்நூலை தமிழ்ப் படித்தவர்கள் அனைவரும் வாங்கிப் பயன்படுத்தித் தமிழன்னையின் மகுடத்தில் ஒளிக் கற்களைப் பதிக்க வேண்டும் என்பதே எனது அவா.

நூலாசிரியர் பாவலர் கருமலைத்தமிழாழன்

முற்றும் –

இரவின் முழங்கிய மங்குல் மாமழை

(சங்க இலக்கியத்தில் மேகங்கள் - ஓர் அறிவியல் பார்வை)

பாமயன்

மிளகுக் கொடிகள் வளர்ந்து செழிந்துள்ள அடுக்கடுக்கான மலைத் தொடர்களைக் கொண்ட கானகம். 'மங்குல்' எனப்படும் மேகம் இரவு முழுவதும் மழையைக் கொட்டிக் கொண்டே இருந்தது, விடாது முழக்கமிட்டு பெருமழையைக் கொடுத்துச் சென்றது. இதை அறியாத மயிர்களடர்ந்த உடலைக் கொண்ட குரங்கு ஒன்று பலாப் பழத்தைப் பறிக்க முயன்றது. அந்தோ மணம் பொருந்திய அந்தப் பழம் வழுக்கி இரவு கொட்டிய மழையால் மலையின் வழியாகப் பெருக்கெடுத்து வீழும் அருவியில் விழுந்து மலையடியில் இருக்கும் உணவு உண்ணும் இடத்தில் போய்ச் சேர்ந்துவிட்டது'

இப்படி குறுந்தொகையில் சேந்தன்பூதனார் என்ற புலவர் 'மங்குல்' என்ற மேகத்தைப் பதிவு செய்கிறார்.

'கறிவளர் அடுக்கத்து இரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட இழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி அருவி உண்துறைத் தரூஉம்'(குறுந்தொகை: 90)

மங்குல் என்பது முகிலின் ஒரு வகை. முகில் எனப்படும் மேகங்களை பல்வேறு வகையாகப் பண்டைத் தமிழர்கள் பிரித்தறிந்துள்ளனர். மேகம் என்ற சொல் இரண்டு சொற்களின் கூட்டாக உருவானது. மேல்+கம் அதாவது மேலே உள்ள நீர் என்று பொருள். 'கம்' என்றால் நீர் என்று பொருள் தருகிறது கழகத் தமிழ் அகராதி. சமற்கிருத மொழியில் மேகம் என்ற சொல்லும் உள்ளது. மேகத்தைப் பற்றிய பல பெயர்களைக் குறிக்க முற்படும் சூளாமணி நிகண்டு,

மங்குல், சீதம், பயோதரம், தாராதாரம், குயின், மழை, எழிலி, மஞ்சு, கொண்டல், சீமுதம், கொண்மூ, முகில், விண், விசும்பு, மால், சலதரம், செல், புயல், கனம், கந்தரம், கார், மை, மாரி ஆகிய 23 பெயர்களைக் குறிக்கின்றது.

'பயனுறு மங்குல் நீதம் பயோதரந்
தாராதாரம் குயின் மழை எழிலி

மஞ்சகொண்டல் சீமூதங் கொண்மூ
வியன் முகில் விண் விசும்பு விளையுமால்
சலதரஞ் செல் புயல் கனங்
கந்தரங் கார் போற்று மை மாரி மேகம்”

மேகங்களை உலக வான்பொருளியல் அமைவகம் *(World Meteorological Organisation)* மூன்று பெரும் இனவகையாகப் பிரிக்கின்றது. குறிப்பாக இதன் வடிவம், உயரம், இயங்கும் தன்மை இவற்றைக் கொண்டு இப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது.

குவிந்து அடர்த்தியாக உள்ள மேகத்தை குமுலஸ் *(cumulus or heap clouds)* என்றும், அடுக்கடுக்கான தட்டங்களாக உள்ள மேகத்தை ஸ்ட்ராடஸ் *stratus or sheet clouds)* என்றும், இழைகளாக உள்ள மேகத்தை சிர்ரஸ் *(cirrus or fubrous clouds)* என்றும் பகுக்கின்றது. இவை மேலும் பத்துப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

மங்குல்: *(Stratus)*

தட்டு வடிவில் அடுக்கடுக்கான ‘ஸ்டிரேடஸ்’3 மேகம் சாம்பல் நிறத்தில் இருந்து வெள்ளையான நிறத்தில் அதாவது புகை வண்ணத்தில் இருக்கும் என்று இன்றைய அறிவியல் உலகம் கூறுகிறது. இதை ‘மங்குல்’ என்று அழைக்கலாம். இவை நீரைக் கடலில் இருந்து கொண்டு வருகின்றன, இவ்வாறு வந்த கனமற்ற நீர்த் திவலைகள் பின்னர் கனத்து நீர்த்துளிகளாக மாறி மழையாகின்றன.

இதற்குரிய விளக்கத்தை புறநானூறு கூறுகின்றது,

முனைசுட வெழுந்த
மங்குல் மாப்புகை *(புறநானூறு. 103)*
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும் *(புறநானூறு. 329)*
பொங்குபிதிர்த் துவலையொடு மங்குல் *(குறுந்தொகை. 55)*

ஆகவே புகை வண்ணமான நீர்த் துவலைகளைச் சுமந்து வரும் மங்குல் மேகம் மழையைக் கொண்டு வரும் தூதனாக விளங்குகிறது.

கொண்மூ: *(Cumulus)*

உருண்டு திரண்டு குவிந்து இருக்கும் மேகத்தை குமுலசு4 என்று விளக்குகின்றனர். இலத்தீன் மொழியில் குமுலசு என்றால் குவியல் என்று பொருள். அது மட்டுமல்லாது இம்மேகம் அடர்த்தியாக, தனியாக, உப்பியதாக, குவியலாக, கருமையாகக் காணப்படும்.6

பெரும் மழையைக் கொட்டும் மேகம் போலவும், கருப்பாகவும், மலையைப் போலவும், யானையைப் போலவும் ‘கொண்மூ’ இருக்கும் என்று சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. கொண்மூ முகிலைப் பற்றிய குறிப்புகள் பின்வரும் குறிப்புகள் அதன் அமைப்பை விளக்குகின்றன.

‘மாமலையணைந்த கொண்மூ’(பட்டினப்பாலை: 95)
(பெரும் மலையைப் போன்றது)
நிரைசெலனிவப்பிற் கொண்மூ மயங்கி (குறிஞ்சிப்பாட்டு: 50)

(அடுக்காகவும் உயர்ந்தும் காணப்படும்)
களிறு நிரைத்தவைபோல் கொண்மூ (கலித்தொகை: 82)
(யானைவரிசையைப் போல)
கருங்கை யானை கொண்மூவாக (புறநானூறு: 369)
(கருத்த கையுடைய யானையைப் போல)
செருநவில் வேழம் கொண்மூ ஆக (புறநானூறு. 373)
(போர் யானையைப் போல)

இடியுடன் கூடிய நீர் நிறையப் பெற்ற இந்த மேகம் மழையை உடனே தரவல்லது.

கொண்மூ முகலைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் யானையோ அல்லது மலையோ உவமையாகச் சொல்லப்படுகிறது. ஆகவே உருண்டு திரண்ட கரிய மேகத்தையே கொண்மூ என்று பண்டைத் தமிழ் மக்கள் குறித்தனர். இது குமுலசு வகை மேகம் எனக் குறிப்பிடலாம்.

மஞ்சு: (cirrus)

சங்க இலக்கியங்களில் 11 இடங்களில் மட்டுமே இம்மேகத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது. மஞ்சு மேகம் மிக மென்மையான தன்மையோடு அடர்த்தி இன்றிக் காணப்படும்.

'புகைமுறை அம்மஞ்சு ஊர' என்ற இடத்தில் புகையைப் போன்றது என்ற குறிப்பு கிடைக்கின்றது.

சிர்ரஸ் எனப்படும் மேகம் சுருள் சுருளாக புகை போன்று காணப்படும் என்று அறிவியல் விளக்குகிறது. இது 20000 அடி உயரத்தில் காணப்படும்.

'பாடுவார் பாணிச் சீரும்,
ஆடுவார் அரங்கத் தாளமும்,
மஞ்சு ஆடு மலை முழக்கும் (பரிபாடல்: 8)

என்று இசையின் கூறுகளான பாணி, சீர், தாளம் ஆகியவை பற்றிக் கூறி கூடவே மஞ்சு மேகத்தின்அசைவையும் புலவர் கூறுகிறார்.

'மஞ்சு இவர் அடுக்கம் போழ்ந்து' (கலித்தொகை: 49)

மஞ்சு மேகம் உயர்ந்து செல்லும் (இவர்தல் என்றால் உயர்தல் என்று பொருள்) மலைத் தொடர்.

'இணர்ததை புதுப்பூ நிரைத்த பொங்கர்ப்
புகைபுரை அம்மஞ்சு ஊர' (அகநானூறு. 97)

இப்படியாக மற்ற மேகங்களை விட மலையின் உயரத்தில் காணப்படும் இந்த மஞ்சு உடனடி மழையைத் தருவதில்லை.

இந்த மூன்று பெரும் பிரிவுகள் தவிர மேலும் ஏழு பிரிவுகள் உள்ளன.

சிர்ரோகுமுலஸ்6 (cirrocumulus) என்ற மேகத்தை 'மஞ்சுகொண்மூ' என்று குறிக்கலாம். இதன் தன்மையைக் கொண்டு அதாவது சற்றே பெரிய நீர்துளிகளைக் கொண்டும் ஆனால்

கருத்த மேகமாக இல்லாமல் பஞ்சுபோல் இருப்பதாலும் இது மழையைக் கொடுக்கும் அடுத்த நிலைக்கு மாற்றமடைகிறது.

சிர்ரோஸ்ட்ராடஸ் *(cirrostratus)* என்ற 'மஞ்சுமங்குல்' நல்ல வெள்ளை நிறம் கொண்டது, இதில் பனிகட்டிகள் காணப்படும், ஈரத்தன்மை அதிகமாக இருக்கும். இம்மேகம் தோன்றி ஒரு நாளைக்குள் மழை பெய்யும் வாய்ப்பு இருக்கும்.

ஆட்டோகுமுலஸ் *(altocumulus)* எனப்படும் மேகம் அடர்த்தியானதாகவும், மழைத் துளிகளைக் கொண்டதாகவும் இருக்கும். இவை தொடர்ச்சியாக காற்றில் பயணம் செய்யக் கூடியவை. இது கருஞ்சாம்பல் வண்ணத்தில் காணப்படும். இதை 'விண்கொண்மூ' என்று குறிப்பிடலாம்.

ஆல்டோஸ்ட்ராடஸ் *(alstostratus)* என்ற 'விண்மங்குல்' ஒளி ஊடுருவும் தன்மை கொண்டது, சற்றே சாம்பல் நிறத்திலும் காணப்படும். ஒட்டு மொத்தமாக வாளத்தை மறைத்துக் கொள்ளும். அடர்ந்த காற்றுத் துகள்களால் இவை தோன்றுகின்றன.

நிம்போஸ்ட்ராடஸ் *(nimbostratus)* என்ற மேகம் மழைமேகமாக இருக்கும், நிம்போ என்றால் கிரேக்க மொழியில் மழை என்று பொருள் தமிழில் 'கார்' என்ற சொல்லுக்கு மழை, காலம் என்று பொருள் உள்ளது எனவே 'கார்மங்குல்' என்று இதை அழைக்கலாம்.

'கருவிக் கார்இடி இராஇய' (அகநானூறு.139)

ஸ்ட்ராடோகுமுலஸ் *(stratocumulus)* என்ற வகை மேகம் பந்து பந்தாக புகை போன்று வானத்தில் குவிந்திருக்கும். இவை தூரல் போன்ற மெல்லிய மழையையும் பனியையும் கொடுக்கக் கூடியவை. இவற்றை மங்குல்கொண்மூ என்று குறிப்பிடலாம்.

குமுலோநிம்பஸ் *(cumulonimbus)* எனப்படும் மேகம் இடியுடன் கூடிய மழையைக் கொண்டு வருவதாகும். இவ்வாறு இடியுடன் கூடிய மேகத்தை 'எழிலி' என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. எப்போதும் உருமிக் கொண்டும் ஒலி எழுப்பிக் கொண்டும் இருக்கும் இந்த மேகம் நல்ல மழையைக் கொடுக்கும். உயரமானதும், அடர்த்தியானதும் இடியுடன் கூடிய புயலைக் கொண்டு வரும் இயல்பு கொண்டவை என்று அறிவியல் கூறுகிறது. – *(The Concise Oxford dictionary of Ecology - Michael Allaby)*

'பறைக்குரல் எழிலி'(அகநானூறு.23)
பறையோசையை ஒத்த குரல் தரும் மேகம்.
பெரும் பெயல் பொழிந்த தொழில் எழிலி (நற்றிணை. 5)
பெருமளவு மழையைப் பொழியும் மேகம்
பெருங்கலி எழிலி (நற்றிணை:139)
அதிர் குரல் எழிலி. (நற்றிணை: 228)
பெரும் சத்தமிடும் மேகம்

மழையும் மழையைக் கொணரும் முகிலும் தமிழ் மக்கள் வாழ்வியலில் பிரிக்க முடியாதவை.

கற்றதும் பெற்றதும்

திராவிட மன்னர்கள் அசுரர்களா?

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

மலையாள நூல் - எதிர்க் கடவுளின் சொந்த தேசம்

ஆசிரியர் - ஏ.வி. சந்திரன்

தமிழில் -சா. தேவதாஸ்

வெளியீடு - எதிர், கோவை

திராவிட நாட்டு பூர்வகுடி மன்னர்களை அசுரர்கள் என்று ஆரிய பிரமணர்கள் பெயர் மாற்றி விட்டனர். அதற்கான கதைகளையும் கட்டினர். மலையாள தேசத்தில் மாவலி என்பவன் மக்கள் நேசம் கொண்ட, மிகுந்த வலிமை உடைய ஓர் அரசனாக இருந்து வந்தான். அரசனாக இருந்து வந்தான். திரு காக்கரப்பன் என்று இவனை இன்றும் வணங்குகின்றனர். திரிகாக்கரப்பன் என்றால் கீழே சதுரமும் மேலே கூம்பு வடிவமும் ஆகும். இவ் வடிவத்தில் இவனை வணங்குகின்றனர். மா வலி என்பதை ஆரியர் மகாபலி என்று சமஸ்கிருத மயமாக்கினர். அவனிடமிருந்து ஓர் அந்தணன் குள்ளன் வாமனன் அவனது நாட்டை வஞ்சனையால் பறித்துக் கொண்டான். இந்த வாமனன் மிகவும் சக்தி வாய்ந்தவன் என்பதைக் குறிக்கும் வகையில் அவன் ஆயிரம் ஆண்டுகள் அவன் தாய் அதிதியின் கர்ப்பத்தில் அவன் ஆயிரம் ஆண்டுகள் இருந்ததாக ஒரு கதை கட்டினர். இந்த அதிதி தான் தேவர்கள் அனைவருக்கும் தாயாவாள்.

வாமணன் மகாபலியை தலையில் மிதித்துப் பாதாளத்திற்குள் இறக்கினான். அங்கு அவனுக்கு சேவை செய்யும் பணியில் கிருஷ்ணன் நியமிக்கப்பட்டான். தேவர்களின் நித்திய எதிரியாக அல்லது ஆரியர்களின் எதிரியாக இருந்த இவனைத் தேடி இந்திரன் பாதாள லோகத்திற்கு சென்றான். அவனுடன் பிரம்மாவும் சென்றார். அங்கு மகாபலி ஒரு கழுதையாகத் திரிந்து கொண்டிருந்தான். அதைப் பார்த்து இந்திரன் கேலி செய்தான். ஆனால் மகாபலி அவனைக் கண்டு ஆத்திரப்படவில்லை. அவனை கேலி செய்வது கூடாது என்று பிரம்மன் இந்திரனை கண்டித்தார். இப்படி ஒரு கதை நிலவுகின்றது. அங்கு வயநாட்டிலும் வட கேரளத்திலும் ஓணப்பாட்டிலும் மகாபலி சக்கரவர்த்தியை மிக நல்ல மன்னன் என்றே குறிக்கின்றனர்.

ஓணத்தின் போது மண்ணால் செய்யப்பட்ட திரி காக்கரப்பங்களை மேல் பகுதியை அலங்காரம் செய்து வைப்பார்கள். ஓணம் என்பது இங்கு வாழும் வேளாண் குடிமக்களின் அறுவடைத் திருவிழாவாகும். வலியோன் என்று சங்கத்தமிழ் இலக்கியங்கள்

பலராமனைக் குறிப்பிடுகின்றன. அவன் கலப்பையை ஏந்தி இருக்கும் வேளாண் குடியின்ரின் கடவுள் ஆவான். இங்கு புலையர்களுக்கு தேவேந்திரன் காட்சியளித்து நெல் விதையை கொடுத்ததாக ஒரு கதை நிலவுகின்றது. இதே கதை தமிழ்நாட்டில், மருத நில மள்ளர்களுக்கு தேவேந்திரன் நெல், வாழை, கரும்பு, காளை மாடு, சாவி ஆகியவற்றைக் கொடுத்ததாக வழங்குகிறது. மருத நிலத்தின் அல்லது வேளாண் குடி மக்களின் தெய்வம் வேந்தன் அல்லது இந்திரன் என்று பண்டையத் தமிழ் இலக்கண நூல்களும் தெரிவிக்கின்றன. மள்ளர் என்று அழைக்கப்படும் வேளாண் குடி மக்களை தேவேந்திர குலத்தார் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் குறிப்பிட்டுள்ளன.

காசர்கோட்டிலும் வட கேரளத்தின் சில பகுதிகளிலும் மாவலி பண்ணையின் தெய்வமாக வேளாண் தெய்வமாக மதிக்கப்படுகின்றான். இங்கு ஓணம் நிறைவேறி இரண்டு மாதங்களுக்குப் பின்பு தீபாவளியன்று மாவலிக்கு வரவேற்பு அளிக்கப்படுகின்றது. இவனை பொலிச் சந்திரன் என்கின்றனர். முழு நிலா என்று பொருள். மலையாள ஓவியர்கள் கவிஞர்கள் எழுத்தாளர்கள் போன்றோர் போன பண்டிகையை வாமனன் கதைக்கு முரணான பூர்வ குடி மன்னனின் சிறப்பை விளக்கும் பண்டிகையாகவே கருதுகின்றனர். இத்தகைய ஆரிய எதிர்ப்பில் உறுதியான கருத்து உடையவராக தங்களுடைய படைப்புகளை படைத்துள்ளனர் என்று எதிர் கடவுளின் சொந்த தேசம் நூலை எழுதிய ஏ வி சக்திதரன் குறிப்பிடுகின்றார். அந்த அளவிற்கு மாவலி கதை அங்குள்ள இலக்கிய உலகில் மிக முக்கிய கருப்பொருளாக விளங்கி வருகின்றது.

அசுரர், ராட்ஷசன், ராட்சசியர் கந்தர்வர் எல்லோரும் சாதாரண மக்களே என்கிறார் பி. ஆர். அம்பேத்கர். அவர்களை நாகரீகம் அற்றவர்களாகவும் பண்பாடு அற்றவர்களாகவும் மாற்றிக் காட்டியதுதான் ஆரிய பிராமணர்களின் கதை உத்தியும் தந்திரமும் ஆகும். எட்டாம் நூற்றாண்டு முதல் இத்தகைய மாற்றங்கள் இந்தியா எங்கும் பரவலாக ஏற்பட்டன. வைதீக மதத்தை எதிர்த்த பூர்வீக குடியினரரின் மன்னர்களை, தம் மண்ணையும் மக்களையும் காப்பாற்றியவர்களை ராட்சதர்கள் என்று ஆரிய பிராமணர்கள் தமது தலபுராணங்களில் எழுதி வைத்ததாக JNU பேராசிரியர் ரோமில்லா தாபர் அவர்களும் குறிப்பிடுகின்றார்.

எட்டாம் நூற்றாண்டு முதல் அசுரரின் உருவமைப்பு கொடூரமானவனாக சித்தரிக்கப்பட்டது. அவன் குருதி வடிக்கப்பட்டு கொல்லப்பட்டபோதெல்லாம் ஆரியரின் புராணக் கதைகளில் தேவர்கள் அகமகிழ்ந்து மலர் மாரி பொழிந்தனர் இதுவே ஆரியபிராமண தந்திரத்தின் வெற்றியாகும். ரட்சகன் என்பதன் ஆரியத் திரிபே ராட்சசன் ஆகும்.

வைதீக சமயத்தை எதிர்த்த பௌத்தர் சமனார் போன்றவர்கள் ஆரியராக இருப்பினும் அவர்கள் இந்த கதைகளை நம்பவில்லை. பரப்பவில்லை. அவர்கள் ஆரியர்களின் கதைகளை, யாக வேள்விகளை, உயிர்ப்பலியை எதிர்த்தனர். அசுரனின் இறப்பை குறிக்கும் எந்த பண்டிகையையும் பௌத்தர்கள் கொண்டாடல்லை.

பகுத்தறிவைப் போதித்த பௌத்தர்களையும் சமணர்களையும் வைதீக சமயத்தினர் தமது புராணக் கதைகளில் தொடர்ந்து எதிர்த்தனர் போனவாரம் சிவன் கோவில்களில்

சமணர் கழுவேற்ற நிகழ்ச்சி நடந்தது. தாருகாவனத்து ரிஷி பத்தினிகளின் நிறை அழிக்க சிவன் பிச்சாடனார் உருவில் செம்பொன் சிலை வடிவில் உற்சவ மூர்த்தியாக வலம் வந்தார்.சில கோவில்களில் இவர் அலங்கார ரூபனாகவும் வந்தார். இந் நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் பிராமணர் எதிர்ப்பை சைவ சமயம் ஆதரிக்காது என்பதை உறுதி செய்கின்றன.

முளைப்பாரி போல் தோற்றமளிக்கும் திருக்காகரப்பன் எகிப்தின் பிரமிடுகளைப் போல் காட்சி தருகின்றன. இவை அசிரியர்களின் தெய்வங்களை ஒத்துள்ளன என்பதால் அசிரியர் என்பவரையே அசுரர் என்ற பெயரால் ஆரியர் அழைத்தனர் என்றும் ஹெச் எம் சாண்ட்விக் 1924இல் குறிப்பிட்டுள்ளார்.

மாவலி சக்கரவர்த்தி கதை மராட்டியத்திலும் நிலவுகின்றது இதுதான் பெரிய அதிசயம். மகாராஷ்டிராவில் வாழ்ந்த பூர்வகுடி மக்களின் மன்னன் மாவலி ஆவான். அவனும் பண்ணைத் தெய்வமாவான்.

ராவணன்

பத்துத் தலை அரசனான ராவணன் தமிழ் மண்ணின் மன்னன் ஆவான். அவன் மிகச்சிறந்த மருத்துவன் என்பதை இராவணன் சிந்தாமணி என்ற நூலின் மூலம் அறியலாம். ராவண சிந்தாமணி என்ற நூலில் இருந்து தான் சித்த மருத்துவர்கள் தம் மருத்துவ நூல்களை எழுதினர். சித்த மருத்துவமாக மாற்றினர் என்று ஆதாரப்பூர்வமாக கருத்து தெரிவிக்கின்ற மருத்துவர்கள் இன்றைக்கும் கன்னியாகுமரி நாகர்கோவில் கேரள பகுதிகளில் உள்ளனர். ராவணன் மன்னன் என்ற புகழ் கேரளாவிலும் பரவி இருந்தது.

ஜோத்பூரில் உள்ள மாண்டோர் என்ற ஊர் மண்டோதரியின் சொந்த ஊர் என்பதும் அங்குதான் ராவணன் வேட்டையாட வந்த போது மண்டோதரியை கண்டு காதலித்து திருமணம் செய்தான் என்றபதும் அங்கு வாழும் மக்களின் அசைக்க இயலாத நம்பிக்கை ஆகும். மண்டோரின் மக்கள் அசுர வம்சா வழியைச் சேர்ந்தவர்களாகத் தங்களை கருதுகின்றனர். 2005 இல் மாண்டோரில் ராவணனுக்குப் பெரிய சிலை ஒன்று நிறுவப்பட்டது. ராவணன் சிவ பக்தனாக இருந்தான். இசைக் கலைஞனாக இருந்தான். அவன் கண்டுபிடித்த ராவணன் ஹத்த வீணை, இராவண ஹஸ்தம் என்று அழைக்கப்படுகின்றது. இது ஒரு மூங்கில் குச்சியும் சிரட்டையும் கொண்டது என்பர். ராவண வைத்தியம் இராவண வீணை ராவண பக்தி போன்றவற்றால் அவன் சிறந்த மன்னனாக கருதப்படுகின்றான். அவன் அசுரர்களுக்கு கண்ணியத்தையும் தன்னம்பிக்கையும் அளித்தவன் ஆவான்.

ராவண தகனம்

பூர்வகுடித் திராவிடர்களை ஆரிய இளவரசன் தோற்கடித்த கதையே ராமாயணம் ஆகும். 1956-ல் ராமனுக்கு உதவிய குரங்குகளும் கரடிகளும் தான் திராவிடர்கள் என்று சிலர் கூறியதைக் கேட்டு சென்னை கடற்கரையில் ராமாயணத்தை திராவிடக் கழகத்தினர்

எரித்தனர். புலவர் குழந்தை இராவண காவியம் இயற்றினார். அ.ச. ஞானசம்பந்தன் ராவணன் மாட்சியும் வீழ்ச்சியும் எழுதினார். ராவணன் தி கிரேட் கிங் ஆப் லங்கா என்ற நூலை எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை எழுதினார் இவ்வாறான நூல்கள் திராவிட இயக்கத்தாரின் ஆதரவுடன் மிகச் சிறப்பான வரவேற்பைப் பெற்றன. கலைவாணர் ராமாயணம் என்ற கதையை கீமாயணம் என்று மாற்றி மேடைகளில் நிகழ்த்தினார். கவிஞர் பாரதிதாசன் இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்று ஒரு நாடகத்தை எழுதிய 1934 அரங்கேற்றினார்.

மைசூர் பல்கலைக்கழகத்தில் செய்தி தொடர்பு இதழியல் துறை பேராசிரியராக இருந்த மகேஷ் சந்திரகுரு என்பவர் ராமாயண நாயகனை இழிவான மொழியில் விவரித்தார் என்பதற்காக சிறையில் அடைக்கப்பட்டார். அவர் ராவண லீலையின் போது ராவணனுடைய உருவ பொம்மை எரிக்கப்படுவதால் ஏற்படும் மாசு காரணமாக இச்சடங்கினை நிறுத்த வேண்டும். இது பேரிரைச்சல் மிக்க சடங்கு என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து இருந்தார். ராவண எரிப்பை கண்டித்த காரணத்தினாலேயே அவருக்கு சிறைத் தண்டனை கிடைத்தது.

திராவிட இனத்தின் பழங்குடியான மத்திய இந்தியாவின் கோண்டு மக்கள் மனங்களில் ராவணதகனம் என்பது மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சியாகவே இருக்கின்றது. கோண்டு இனத்தவர்கள் தங்கள் மன்னராக ராவணனைக் கருதுகின்றனர். மத்தியப் பிரதேசத்தின் அமர்கண்டக் பகுதியில் வாழும் கோண்ட் மக்கள் லங்கா என்றால் குன்று சார்ந்த பகுதி என்று பொருள் கொள்கின்றனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக பிரம்மதேவன் ராவணனைப் படைத்ததாக அவர்கள் நம்பி ராவணனைத் தங்கள் தெய்வமாக வணங்கிப் போற்றுகின்றனர்.

பிராமணர்கள் நடத்திய யாகங்களில் பசு குதிரை போன்ற விலங்குகள் பலி கொடுக்கப்பட்டன. அதனை எதிர்த்த மண்ணின் மன்னர்கள்யும் மக்களையும் பிராமணர்கள் தங்கள் எதிரியாக கருதி அசுரர் என்று அழைத்தனர்.

இமாச்சலப் பிரதேசத்தில் ராவண தகனத்தை யாரும் ஆதரிப்பதில்லை. அங்கு இருக்கும் பழைய சிவாலயம் ராவணனால் நிறுவப்பட்டது ஆகும். இங்கு மக்கள் தசரா கொண்டாடுவது கிடையாது. 1970களில் நாக்பூரில் உள்ள கோண்டி மொழி அறிஞர் மோதி ராம் கங்காளே என்பவர் ராவண தகனத்திற்கு முடிவு கட்டுமாறு ஒரு இயக்கத்தை தொடங்கி நடத்தினார். ஆனால் அவருடைய எண்ணமும் நோக்கமும் நிறைவேறவில்லை இதனால் இவர்கள் அந்த ராவண தகனம் நடக்கும் வேளையில் வெளியே வருவது கிடையாது. காலம் காலமாக கோண்டுகள் இராவணனை வழிபட்டு வருகின்றனர். ஆனால் ராவண உருவ பொம்மை எரிப்பு 1833 தான் நாக்பூரில் ராஜபட்சி மைதானத்தில் தொடங்கியது.

உத்திரபிரதேசத்தில் தீவிர தலித் இயக்கத்தை தொடங்கிய இளைஞர் தன்னை சந்திரசேகர ஆசாத் ராவணா என்று அழைத்துக் கொண்டார். பகுஜன் சமாஜ் தலைவி மாயாவதி சூர்ப்பனகை என்றும் முலாயம் சிங் யாதவை இராவணன் என்றும் ஓர் உ.பி. அமைச்சர் வர்ணித்தபோது இவர் மக்களிடையே பெரும் கிளர்ச்சியை தூண்டிவிட்டார்.

ராவணனும் சூர்ப்பனகையும் நல்லவர்கள் அவர்களை வில்லன் வில்லி போல் பேசாதீர்கள் என்று மிகப் பெரிய கலவரம் அங்கே ஏற்பட்டது.

125 ஆண்டு பழைய சிவன் கோவில் ஒன்று கான்பூரில் உள்ளது. அங்கு ராவணன் வழிபடப்படுகின்றான்.

சைவ வைணவப் பூசல் இருக்கும் இடங்களில் வைணவர்கள் ராவண தகனத்தை ஆதரிக்கின்றனர். சைவர்கள் அதனை எதிர்க்கின்றனர்.

ராவண மகோத்சவம் மகாராஷ்டிராவின் கோண்டியா, சந்திராபூர் பண்டாரா, அமராவதி என்று பல மாவட்டங்களில் கொண்டாடப்படுகின்றது. கோண்டுகளின் தமது பத்தாவது தர்ம குருவாக ராவணனனை வழங்குகின்றனர். அவனுடைய சிலையை யானை மீது எடுத்துக் கொண்டு வந்து ஜெய் இராவணராஜா என்று முழக்கங்கள் எழுப்புகின்றனர்.

மத்திய பிரதேசத்தில் ஆதிவாசிகள்

இராவணனை வணங்குகின்றனர். அங்கு வாழும் கன்னியாகுப்ஜ பிராமணரம் ராவணனை வழிபடுகின்றனர். இவர்கள் ராவணன் பிராமண உட்பிரிவைச் சேர்ந்தவன் என்று நம்புவதால் தங்களின் பிரதிநிதியாகக் கருதி அவனை வழிபடுகின்றனர். இந்த ராவணன் கிராமத்தில் நடைபெறும் ஒவ்வொரு நல்ல நிகழ்ச்சியின்போதும் ராவணனின் ஆசி வேண்டப்படுகின்றது.

300 ராமாயணங்களைத் தொகுத்த ஏ.கே. ராமானுஜன் இராவணன் ஓர் உன்னத வீரன் என்ற உணர்வையே சமணப் பிரதிகள் தருகின்றன என்கிறார். ஹேமச்சந்திரரின் சமண ராமாயணம் பன்னிரண்டாம் நூற்றாண்டு ராவணனை பெரும் ஒழுக்க சீலனாகக் காட்டுகின்றது. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த லங்கா அவதார சூத்திரம் இலங்கையின் பொறுப்பு மிக்க மன்னன் புத்தன் பேருரையைக் கவனமாக கேட்டுத் தன் தீவுக்கு வருமாறு அழைப்பதாக விவரிக்கின்றது. இந்த மன்னன் ராவணன் என்று நம்பப்படுகின்றது.

மகிஷாசுரன்

மகிஷாசுரனைத் தங்கள் மன்னனாக உத்தரப்பிரதேசத்திலும் வங்காளத்திலும் ஜார்க்கண்ட் பீஹார் ஒரிசா கர்நாடகா போன்ற மாநிலங்களிலும் வாழும் பழங்குடி மக்கள் நம்புகின்றனர். இவன் நெறி தவறாத ஆட்சி நடத்தியவன் சமத்துவம் மற்றும் நீதியின் உருவமாகத் திகழ்கின்றான். போரின் போது இவன் பெண்கள், முதியவர் மற்றும் பலவீனமானவர்களை ஆயுதங்கள் ஏந்தி அழிக்க மாட்டான். எனவே தான் இவனை அழிக்க துர்க்கையை ஆரியர்கள் அனுப்பினர். இவன் அவளை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போரிடவில்லை. அதனால் துர்க்கை இவனை அழித்துக் கொன்று விட்டாள். எருமை இவனது குல மரபுச் சின்னம் என்பதால் இவனை எருமைத் தலையனாகக் காட்டினர்.

மேலும் மகிஷாசுரனை பௌத்த மன்னன் என்றும் பலர் கருதுகின்றனர். மனித விழுமியங்களை மிகவும் ஆதரித்த ஆராய்ச்சி மாணவர் ஒருவர் ஜே என் யு பல்கலைக்கழகத்தில் இவனைக் கொன்ற பெண் தெய்வத்தின் மீது சில சந்தேகங்களை

எழுப்பி பிரசுரங்கள் விநியோகித்தார். மேலும் மேற்கு வங்காளம், உ.பி., ஜார்கண்ட் மற்றும் பல வட இந்திய மாநிலங்களில் வாழும் மாணவர்கள் மகிஷாசுரனை ஆதரித்தனர். துர்க்கையை எதிர்த்தனர். இவ்விரு தரப்பினர்க்கிடையே 2014 இல் பெரும் மோதல் இப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டது. மகிஷாசுரனுக்கு ஆதரவு தெரிவிக்கும் மகிஷாசுரனுக்கு பிரார்த்தனைகள் நடத்தினர். அதற்கு எதிராக சங் பரிவார் அமைப்பின் பத்திரிகையான பஞ்ச ஜன்யா கடுமையான கண்டனத்தை வெளியிட்டது.

சந்தால் பழங்குடிகளின் தலைவனாகவும் மகிஷாசுரன் போற்றப்படுகின்றான்.

தசராவின் போது 8,000 வேளாண் குடியினர் ஆண்களும் பெண்களும் துர்கா பூஜை பந்தலின் அருகில் கூட போக மாட்டார்கள். தங்கள் வீட்டை விட்டு அவர்கள் வெளியில் வருவதே கிடையாது. துர்கா பூஜை நடக்கும் ஐந்து நாட்களும் சந்தாளிகள் தங்கள் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பார்கள். உத்தரப் பிரதேசத்தில் இது ஒரு அரிய நிகழ்வாகும்.

ஜார்கண்ட் மாநிலத்தின் அசுர் எனப்படும் பழங்குடியினர் மகிஷாசுரனை தம் குலமுதல்வராகக் கருதுகின்றனர். அவரிடம் இருந்தே தம் இனம் தோன்றியதாக நம்புகின்றனர். இவன் புராண கால பாத்திரம் அல்ல. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் ஆரியரை எதிர்த்த வரலாற்று வீரன் என்று மேற்கு வங்காளம், ஒடிசா, ஜார்கண்ட் போன்ற பகுதிகளில் வாழும் ஆதிவாசிகள் நம்புகின்றனர்.

மைசூர் பல்கலைக்கழக பேராசிரியர் மகிஷாசுரனை மகிஷா மண்டலத்தின் பௌத்த மன்னன் என்றே குறிப்பிடுகின்றார். நாட்டார் வரலாற்றில் நிபுணரான காலகவுடா நாகவரா என்பவர்தன் ஆய்வுக் கட்டுரையில் மைசூரை ஆண்ட மகிஷாசுரன் நல்ல நிர்வாகி என்கிறார். இதனால் சிக்கதேவராய உடையார் காலத்தில் மைசூரின் சாமுண்டி மலை நுழைவாயிலில் மகிஷாசுரனுக்கு பிரம்மாண்ட சிலை நிறுவப்பட்டது.

நரகாசுரன்

ஆந்திராவின் உஸ்மானிய, காகதீயப் பல்கலைக்கழக மாணவர்கள் தங்களை ஆட்சி செய்து உயர்த்தியாகம் செய்த திராவிடச் சக்கரவர்த்தியாக நரகாசுரனைக் கருதி அவனை புகழ்ந்து பாடல்களைப் பாடுகின்றனர். ஆதிவாசி மாணவர்களும் தீபாவளியின் போது நரகாசுரனின் மரணம் கொண்டாடப்படுவதற்காக மிகுந்த வருத்தம் தெரிவித்துள்ளனர். கரீம் நகர், கம்மம் மாவட்ட ஆதிவாசிகளும் நரகாசுரனை வழிபட்டு வருகின்றனர். கிருஷ்ணரால் அவன் கொல்லப்பட்டான் என்ற கதையை அவன் சூதினால் கொல்லப்பட்டதாகவே கருதுகின்றனர்.

கொட்டைக்கரந்தை: நரை திரை மாற்றி காய சித்தியளிக்கும் காயகற்ப மூலிகை

டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்,
சித்தரியல் ஆராய்ச்சியாளர், புதுவை

வெள்ளை மயிரும் காகத்தின் இறகு போலக் கருகருவென மாறும்! சித்தர்கள் காட்டிய கொட்டைக்கரந்தையின் காயகற்ப ரகசியம்!"

இளநரை, நரம்புத் தளர்ச்சியை வேரறுக்கும் 'கொட்டைக்கரந்தை' பற்றி உங்களுக்குத் தெரியுமா?"

சித்த மருத்துவத்தின் ஆகச்சிறந்த பிரிவுகளில் ஒன்று காயகற்ப மரபாகும். மனித உடலை அழியாமல் காத்து, நரை, திரை, மூப்பு ஆகியவற்றைப் போக்கும் பேராற்றல் கொண்ட சில மூலிகைகளைச் சித்தர்கள் 'கற்ப மூலிகைகள்' என வகைப்படுத்தினர். அவற்றுள், ஆன்மீக ஞானத்தையும், உடலுக்குப் பொன் போன்ற ஒளியையும், ரசவாத வித்தைகளையும் ஒருங்கே தரக்கூடிய மகத்தான ஒரு மூலிகை 'கொட்டைக்கரந்தை' (Sphaeranthus hirtus).

சிவபெருமான் தன் சடையில் சூடிய பெருமைமிக்க இந்த மூலிகையின் மருத்துவ மாண்புகளையும், அதன் காயகற்ப ரகசியங்களையும் 20 ஆண்டுகால எனது மருத்துவ அனுபவப் பின்னணியில், நம் முன்னோர்களின் பாடல்களின் வழி நின்று இங்கு விரிவாக ஆராய்வோம்.

- கரந்தையின் வகைகளும் அதன் பொதுக்குணமும்

கரந்தைச் செடிகளில் சிவகரந்தை, கொட்டைக்கரந்தை, செங்கரந்தை, வெண்கரந்தை, கருங்கரந்தை எனப் பல வகைகள் உண்டு. நாம் இங்கே காணவிருப்பது நறுமணமிக்க 'கொட்டைக்கரந்தை' ஆகும்.

இது பற்களுள்ள, நறுமணமுடைய இலைகளை மாற்றடுக்கில் கொண்ட மிகச்சிறு செடியாகும். சிறிய பந்து போன்ற உருண்டையான செந்நிறப் பூங்கொத்தினை உடைய இதன் சமூலமே (செடி முழுமையும்) மருத்துவப் பண்புகள் நிறைந்தது.

- கரந்தையின் காயகற்பப் பயன்கள்: மாத வாரியான அற்புதங்கள்

கரந்தையை முறைப்படி கற்ப மருந்தாக உட்கொள்ளும் போது, உடலில் மாதம் மாதம் என்னென்ன மாற்றங்கள் நிகழும் என்பதை அகத்தியர் பெருமான் தனது பாடலில் மிகத் தெளிவாகப் பட்டியலிடுகிறார்:

‘‘காணவே நாறுகின்ற கரந்தை தன்னைக்
கலங்காமல் சமூலந்தான் பிடுங்கி வந்து
ஊணவே நிழலுலர்த்தா யுலர்த்திக் கொண்டு
உகந்துமே யிடித்து நன்றாய்ச் சூரணமே செய்து
பாணவே பால் நெய்யில் தேனிற் கொள்ள
பாங்கான திங்கள்ஒன்றில் சடநாற்றம் போம்
வாணவே திங்களிரண்டில் வாதம் போம்
மருவுகின்ற மூன்று திங்கள் பித்தம் போம்."
‘‘போகுமே நான்கு திங்கள் குட்டமெல்லாம்
புகழான ஐந்து திங்கள் வன்னி மீதும்
நாகுமே யாறுதிங்கள் ஞான மீறும்
நலமான ஏழு திங்கள் தேகம் பொன்னாம்

யேருமே எட்டுதனிற் சட்டைப் போகும்
யேற்றமா யொன்பதிலே கவனங் கொள்ளும்
பாகுமே பரமசிவன் சடையில் வைத்தார்
பாங்கை யெல்லாங் கண்டுரைத்த படிதானென்றே"

கற்ப மருந்து செய்முறையும் கால அளவும்:

பூக்காத கரந்தைச் செடிகளை வேருடன் (சமூலமாக) பிடுங்கி வந்து, தூசி நீக்கி, *நிழலில் உலர்த்திக்* கொள்ள வேண்டும். பின்னர் அதனை நன்றாக இடித்துச் சூரணமாக்கி (பொடி) வைத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சூரணத்தைப் பசும்பால், பசு நெய் அல்லது தூய்மையான தேன் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் குழைத்துத் தொடர்ந்து உட்கொண்டு வர வேண்டும்.

முதல் திங்கள் (1-ஆம் மாதம்):* உடலின் வியர்வை நாற்றம் மற்றும் தீய வாடைகள் (சடநாற்றம்) நீங்கி உடல் தூய்மையாகும்.

இரண்டாம் திங்கள் (2-ஆம் மாதம்):** உடலை வாட்டும் வாத நோய்கள் அனைத்தும் விலகும்.

மூன்றாம் திங்கள் (3-ஆம் மாதம்):** பித்த நோய்கள் அனைத்தும் குணமாகி உடல் சமநிலை பெறும்.

நான்காம் திங்கள் (4-ஆம் மாதம்):** தீராத தோல் நோய்களும் குட்ட நோய்களும் (Leprosy & Skin diseases) குணமாகும்.

ஐந்தாம் திங்கள் (5-ஆம் மாதம்):** ஜடராக்னி எனப்படும் வயிற்றுத் தீ (வன்னி) அதிகரித்து, செரிமான ஆற்றல் பெருகும்.

ஆறாம் திங்கள் (6-ஆம் மாதம்):** அறிவு தெளிவடைந்து, ஆன்மீக ஞானம் (ஞானம் மீறும்) கை கூடும்.

ஏழாம் திங்கள் (7-ஆம் மாதம்):** உடல் பொன்னிறமாக ஒளிரத் தொடங்கும் (தேகம் பொன்னாம்).

எட்டாம் திங்கள் (8-ஆம் மாதம்):** பாம்பானது தன் சட்டையைக் கழற்றுவது போல, உடலில் உள்ள பழைய செல்கள் அழிந்து புதிய இளமை செல்கள் தோன்றும் (சட்டைப் போகும்).

**ஒன்பதாம் திங்கள்(9-ஆம் மாதம்):*யோக நெறியில் மனதை ஒருமுகப்படுத்தும் கவனக் குவிகூடும் ஆற்றல் கைவரப் பெறும்.

- கரந்தை ரசவாதம்: பாதரசத்தைக் கட்டுதல்

சித்த மருத்துவத்தின் மற்றொரு உச்சகட்ட அறிவியல் 'ரசவாதம்' ஆகும். திரவ நிலையில் உள்ள பாதரசத்தைக் மூலிகைகளின் சாற்றைக் கொண்டு திண்ம நிலைக்குக் கொண்டு வரும் வித்தையைக் கரந்தைச் சாறு எளிதாகச் செய்கிறது.

“என்றான கரந்தையைத் தான் கொண்டு வந்து
யடித்துமே படிசாறு வடிகட்டிக் கொண்டு
கண்டான கரண்டிதனைத் துப்புரவாய் விளக்கிக்
களிம்பகற்றிச் சூதத்தை யதிலே போட்டு
தன்றான கரியோட்டில் வைத்து ஊதி
சாறுதான் சுருக்கிட்டு நாலு சாமம்
பன்றாகக் கட்டியது வெண்ணை யாகும்
பாங்கான வெண்ணை யெல்லாம் வாங்கிக்கொள்”

கரந்தைச் செடியை இடித்துப் பிழிந்து எடுத்த சாற்ற வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். தூய்மையான கரண்டியில் களிம்புகளை நீக்கி, அதில் பாதரசத்தை (சூதம்) இட்டு, தகுந்த நெருப்பில் வைத்து ஊத வேண்டும். அப்போது கரந்தைச் சாற்றைச் சிறுகச் சிறுகச் சுருக்கிட்டு (சாறு சேர்த்து அரைத்தல்) நான்கு சாமம் (12 மணி நேரம்) செய்ய, அந்தப் பாதரசம் வெண்ணெய் போல இறுகிக் கட்டும்.

மணி தயாரித்தலும் தங்க பற்பக் கூட்டும்

அவ்வாறு கட்டிய வெண்ணெய் போன்ற பாதரசத்தை மேலும் எப்படி நிலைநிறுத்துவது என்பதைப் பின்வரும் பாடல்கள் விளக்குகின்றன:

“வாங்கியே உருண்டை போல் வைத்துக் கொண்டு
மறுபடியும் யிலையரைத்துக் கவசங் கட்டித்
தாங்கியே பத்தெருவிற் புடத்தைப் போட்டு
தப்பாமல் மறுபடியு மிலைய ரைத்துத்
தேங்கியே பத்து விசை புடத்தைப் போடத்
திரண்டுமே மணிபோலக் கரியிலாடும்
ஓங்கியே உருண்டைதனைக் குகையிலிட்டு
உருகையிலே நாளிலொன்று தங்கம் போடே”
“தங்கத்தி னெடையொக்க நாகமே போடு
தாக்கியே கலந்தொன்றா வாங்கி
பங்கத்தின் கல்வத்தி லிதனை யிட்டு
பாங்காக பொடித்திட்டு பொடிக்குப் பாதி
லிங்கத்தைக் கூட்டியே தாளகமுங் கெந்தி
நேரான சிலையொரு கால்வாசி கூட்டி
அங்கத்தில் கரந்தை யொன்ற சாறு தன்னால்
அரத்துமே பொடியாக்கி மேருக் கேத்தே”
“ஏத்தியே பனிரெண்டு சாமந்த்தீயை
எழிலான கதிராலே கிண்டிப் பாரு
மாத்தியே மாதளம்பூ போலே நிற்கும்

மாசற்ற நவலோகம் நூற்றுக் கொன்று
கோத்தியே கொடுத்தாக்கால் கனக மாகுங்
கூர்ந்து பண விடைதன்னை கரந்தையிலே யுன்னு
தேத்தியே மண்டலந்தா னுண்டாயானால்
சிவந்தெழுந்த சூரியன் போல் முகமாந்த் தேறே"

கட்டிய பாதரசத்தை உருண்டையாக்கி, கரந்தை இலை விழுதால் கவசம் செய்து, பத்து வறட்டிகளைக் கொண்டு புடம் போட வேண்டும். இவ்வாறு பத்து முறை கரந்தை இலை கவசம் செய்து புடம் போட, அது உருகி ஓடாத 'ரச மணியாக'த் திரளும்.

அதனை உலைக்களக் குகையிலிட்டு உருகும்போது, அதனுடன் தங்கம், நாகம் (துத்தநாகம்) ஆகியவற்றைச் சம எடை சேர்த்து உருக்கி, பின்னர் கல்வத்தில் இட வேண்டும். அதனுடன் இலிங்கம், தாளகம், கெந்தகம் (கந்தகம்), மனோசிலை ஆகிய நச்சுப் பொருட்களைச் சுத்தி செய்து சேர்த்து, மீண்டும் கரந்தைச் சாற்றால் அரைத்து வாலுகா யந்திரத்தில் ஏற்றிப் பன்னிரண்டு சாமம் (36 மணி நேரம்) எரிக்க வேண்டும்.

அவ்வாறு எறித்து முடிவில் கிடைக்கும் பற்பமானது மாசற்ற செந்நிற 'மாதளம்பூ' போலத் துலங்கும். இந்த உயர்நிலை மருந்தை ஒரு பணவிடை (சுமார் 488 மில்லிகிராம்) அளவு கரந்தைச் சாற்றில் கலந்து ஒரு மண்டலம் உட்கொண்டு வர, முகமானது உதிக்கின்ற செஞ்ஞாயிறு (சூரியன்) போலத் தேஜஸுடனும் ஒளியுடனும் திகழும்.

இளமை மீளும் பேரதிசயம்: காயகற்ப உச்சம்

நரை திரை மாற்றி, உடலை என்றும் இளமையோடு வைக்கும் கரந்தையின் இறுதிப் பயனை இப்பாடல் வரிகள் பறைசாற்றுகின்றன:

''தேறியே சங்குநிற மாங்கரந்தை
தேடியே பாக்களவு பாலிலுண்ணு
மாரியே மண்டலந்தா னுண்டா யானால்
மாசற்ற சந்திரன் போல் முகமுமாமே
வீரியே வெள்ளைமயிர் காகயிறகாகும்
மேனியுமே ரசிக்கென்று சிவந்து மின்னும்
மூரியே யமிர்தந்தான் யோகத்திற் பரந்து
உத்தமனே அமிர்தத்தை உண்ணு உண்ணே."

"தேறியே சங்குநிற மாங்கரந்தை
தேடியே பாக்களவு பாலிலுண்ணு

தூய்மையான கரந்தைப் பொடியைப் பாக்களவு (சுமார் 5 கிராம்) எடுத்துப் பசுவின் பாலில் கலந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) உண்டு வர, முகமானது களங்கமற்ற முழுச் சந்திரனைப் போலப் பொலிவுறும். நரையினால் வெளுத்துப் போன வெள்ளை மயிரானது, காகத்தின் இறகைப் போலக் கருகருவென மாறும் (வெள்ளைமயிர் காகயிறகாகும்). மேனியானது செம்பவளம் போலச் சிவந்து மின்னும். யோக மார்க்கத்தில் அமிர்த நிலை சுரந்து, உடல் அழியாப் பேறு பெறும்.

அன்றாட வாழ்வில் கரந்தையின் எளிய மருத்துவப் பயன்கள்

சித்த மருத்துவர்கள் ரசவாத முறைகளுக்குக் கரந்தையைப் பயன்படுத்துவது ஒருபுறமிருக்க, சாதாரண மக்கள் தங்கள் அன்றாடப் பிணிகளை நீக்கிக் கொள்ள இந்த எளிய முறைகளைப் பின்பற்றலாம்:

1. வெள்ளை, உள்ரணம், கிராணி தீர:** பூக்காத கரந்தைச் செடியின் நிழலுலர்த்திய பொடி 5 கிராம் எடுத்து, அதனுடன் சிறிதளவு கற்கண்டுப் பொடி கலந்து காலை, மாலை சாப்பிட்டு வர பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல், குடலின் உள்ரணங்கள் (Ulcers), நாள்பட்ட வயிற்றுப்போக்கு (கிராணி) மற்றும் கரப்பான் நோய்கள் குணமாகும்.

2. இதயம், நரம்பு பலப்பட:** இச்சூரணத்தைத் தொடர்ந்து நீண்ட நாட்கள் சாப்பிட்டு வர, இதயத் தசைகளும், நரம்பு மண்டலமும் நல்ல பலம் பெறும். பதற்றம் நீங்கும்.

3. இளநரை மாற:** கரந்தைப் பொடியுடன் சம அளவு கரிசலாங்கண்ணிப் பொடி (கையான்) கலந்து, தினமும் தேனில் குழைத்துச் சாப்பிட்டு வர, இளநரை முற்றிலும் மாறி தலைமுடி இயற்கையான கருமை நிறத்தைப் பெறும்; உடல் வச்சிர உடலாகும்.

, இன்றைய தலைமுறையினரை அதிகம் வாட்டும் 'இளநரை' மற்றும் 'நரம்புத் தளர்ச்சி' போன்ற குறைபாடுகளுக்குக் கரந்தையும் கரிசலாங்கண்ணியும் சேர்ந்த கூட்டுச் சூரணத்தை கொண்டு வியக்கத்தக்க நற்பலன்களை அடைவதை கண்டிருக்கிறேன்.

அதிநவீன இரசாயனக் கூந்தல் சாயங்களை (Hair dyes) நாடி ஓடி உடலைக் கெடுத்துக் கொள்வதை விடுத்து, சித்தர்கள் அருளிய கொட்டைக்கரந்தையை முறைப்படி உள்மருந்தாக உண்டு, நரை திரை அற்ற ஆரோக்கியமான வாழ்வை வாழ்வோம்!

குற்றாலம் 'சன்னியாசிப் புடவு' கல்வெட்டு படிக்கப்பட்டது.

குற்றால மலைப்பகுதியில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாகப் படிக்கப்படாமல் இருந்த 'சன்னியாசிப் புடவு' கல்வெட்டு வாசித்து அறியப்பட்டுள்ளது. குற்றாலநாதர் கோயிலில் இருந்து பேரருவி வழியாக, சுமார் 1000 மீட்டர் உயரத்தில் கடினமான மலைப்பாதையில் 5.5 கி.மீ பயணித்தால் இந்தக் குகையை அடையலாம். செண்பகாடவி அருவி, தேனருவிக்கு மேலே யானைப்பாதைகள் நிறைந்த அடர்ந்த காட்டினுள் சுமார் 30 மீட்டர் நீளமும், 5 மீட்டர் உயரமும் கொண்ட இந்த இரண்டடுக்குக் குகை அமைந்துள்ளது.

இந்தக் குகையின் நீண்ட முன்சுவரில் தலா ஐந்து எழுத்துகள் வீதம் மூன்று வரிகளில் மொத்தம் 15 எழுத்துகள் மிகவும் நுணுக்கமாகவும் தெளிவாகவும் செதுக்கப்பட்டுள்ளன. 1917-ஆம் ஆண்டிலேயே ஆங்கில அரசு ஆவணங்களில் இக்குகையைப் பற்றிய குறிப்புகள் இருந்தபோதிலும், இந்த எழுத்துகள் எந்த மொழியைச் சேர்ந்தவை என்பதை இதுவரை முழுமையாக யாராலும் கண்டறிய முடியவில்லை.

தொல்லியலாளர்கள்இவற்றைச் சிந்துவெளி எழுத்துகளின் தொடக்க நிலை அல்லது பிராமி எழுத்துகளின் முந்து வடிவம் என்ற கருத்துகளை முன்வைத்தனர். ஜப்பானிய அறிஞர் பன்மொழி வல்லுநர் ஷு ஹிக்கசோக்கா போன்றோரும் இதன் பொருளை முழுமையாக உரைக்க முடியவில்லை.

இந்நிலையில், இரண்டரை ஆண்டுகாலத் தொடர் ஆய்விற்குப் பிறகு, திருச்சி தொல்லியல் ஆய்வறிஞர் பாலகிருஷ்ணன் (பாலா பாரதி) மற்றும் மாத்தூர் பாவேந்தன் ஆகியோர் இக்கல்வெட்டை வெற்றிகரமாக வாசித்துள்ளனர்.

இது குறித்து ஆய்வாளர் பாலா பாரதி கூறுகையில்,

"இதில் உள்ள 15 எழுத்துகளில் 14 எழுத்துகள் பிராகிருத பிராமி எழுத்துகளின் அடிப்படை வடிவத்தைக் கொண்டுள்ளன. ஆனால், வழக்கமான ஒலிக் குறிப்பான்களைப் (Diacritic marks) பயன்படுத்தாமல், ஒரு புதிய முறையைக் கையாண்டுள்ளனர். ஒலிக் குறிப்பான்களின் புதிரை கணித முறையில் தீர்த்த போது படிக்க முடிந்தது. மேலும் இக்கல்வெட்டில் உள்ள சொற்கள் தமிழ் மொழியைச் சேர்ந்தவை என்பதும் உறுதியானது. சுருக்கமாகச் சொன்னால், மாற்றியமைக்கப்பட்ட பிராமி எழுத்து வடிவத்தில் தமிழ் மொழிச் சொற்கள் இங்கே பொறிக்கப்பட்டுள்ளன"

எனத் தெரிவித்துள்ளார்.

கல்வெட்டு கூறும் செய்தி என்ன?

ஒரு நூற்றாண்டுக்கு மேல் படிக்கப்படாதிருந்த இந்தக் கல்வெட்டின் வாசகம் இதுதான்:

"உம் நெறி ஞாந வாபி எலொரே கஜம் க ஈறு"

இதன் பொருள்:

"உனது நெறி ஞானம் நிரம்பிய வாவி (நீர்நிலை); ஏழு ஊர்களில் உள்ள நீர்நிலைகளிலும் இருக்கும் பொருள் ஒன்றே."

இது குறித்த விரிவான ஆய்வுக் கட்டுரை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் இணைந்து நடத்தும், ISSN அங்கீகாரம் (ISSN: 3108-2513 (Online)) பெற்ற 'தொல்தடம்' (தொல்லியல் - கலை - பண்பாட்டு ஆய்விதழ்) இதழின் தொகுதி - 02, இதழ் 01, 05/05/2026 தேதியில் வெளியாகியுள்ளது.

ஆய்வுக் கட்டுரையைப் படிக்க:

https://tholthadam.in/article/reading-sanyasi-pudavu-inscription-at-tenkasi-district-tamil-nadu/bu07y814v7jx4k572qsy55zm

“பராசக்தியும் மொழிப்போரும்” - 4

முனைவர் சிவ இளங்கோ
புதுச்சேரி.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் - ஐந்தாம் கட்டம்

1963 ஆம் ஆண்டின் இந்திய அரசின் அலுவல் மொழிச் சட்டத்தின் வழி, இந்தி மொழி மட்டுமே ஆட்சி மொழியாகும் நாளாக, 1965 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள், அறிவிக்கப் பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், 3.8.1963 அன்று நடைபெற்ற திமுக பொதுக்குழுவின் முடிவின் படி, இந்தி எதிர்ப்பு மாநாடுகள் சேலம், தஞ்சாவூர், நெல்லை, சென்னை உள்ளிட்டப் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டன. 13.10.1963 அன்று சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில், இந்தித் திணிப்பை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின் 17 ஆவது பிரிவைத் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டமும், ஒவ்வொரு மாவட்டமாக, 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை, மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்பாக மறியல் நடத்தும் போராட்டமும் அறிவிக்கப்பட்டன. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்திற்காகக் காஞ்சிபுரத்தில் இருந்து சென்னை செல்லும் வழியில், திமுக தலைவர் அண்ணாவும், அவரோடு இருந்த சில தலைவர்களும், 16. 11. 1963 அன்று கைது செய்யப்பட்டனர்.

இதனால் மக்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. குறிப்பாக மாணவர்கள் மத்தியில் எழுச்சி மிகுந்ததால், அவர்கள் தங்களுக்குள் திட்டமிட்டு ஊர்வலங்களை நடத்தினர். துக்க நாள் அனுசரித்தனர். இந்திப் புத்தகங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். தீ பரவியது. அரசியல் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் நகலை தீ வைத்துக் கொளுத்தினர். இதனால் மாணவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. தங்கள் கோரிக்கைகளை முதலமைச்சர் இடம் தெரிவிக்க மாணவர்கள் சென்றபோது, சென்னையில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தமிழ் வாழ்க என்று கூறி முதலமைச்சர் பக்தவச்சலம் காலில் விழுந்து கதறிய ஒரு திமுக தொண்டரை, முதலமைச்சர் பைத்தியக்காரன் என்று பேசினார்.

இதனால், இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள் மாநிலம் முழுவதும் வெடித்தன. கீழப்பழுவூர் சின்னசாமி என்ற திமுக தொண்டர், 1964 ஆம் ஆண்டு சனவரி 25 ஆம் நாளன்று திருச்சி தொடருந்து (இரயில்) நிலையம் அருகே, தமிழ்

மொழியைக் காக்கத் தன் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்துக் கொண்டார். தன்னுடல் பற்றி எரியும் போதும், "தமிழ் வாழ வேண்டும், இந்தி ஒழிய வேண்டும்" என்றே முழங்கினார். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியிலேயே அவர் உயிரிழந்து, மொழிப் போராட்டத்தின் முதல் களப்பலியானார். உணர்வுபூர்வமான இச்சூழ்நிலை, தமிழர்களின் மொழிப் போராட்டத்தை, வாழ்வுரிமைப் போராட்டமாக மாற்றியது.

இந்நிலையில், ஆசிய ஜோதியாகப் புகழ்பெற்ற நேரு 27.5.1964 அன்று மறைந்தார். அடுத்து, லால் பகதூர் சாஸ்திரி இந்தியத் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார். இந்தித் திணிப்பில் தீவிரமாக இருந்த லால்பகதூர் சாஸ்திரி, 1965 ஜனவரி 26 முதல் இந்தி மொழியே இந்தியாவின் ஆட்சி மொழியாகும் என்று, அவர் உள்துறை அமைச்சராக இருந்தபோதே அறிவித்திருந்தார். தலைமை அமைச்சரான பிறகு அதில் அதி தீவிரமாக இருந்தார். இதனால் இந்தி ஆட்சி மொழியாகும் நாளை (26. 1. 1965) துக்க நாளாகக் கடைப்பிடிக்க, சென்னையில் 8.1.1965 அன்று நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் திமுக முடிவு செய்தது. திருச்சியில் 17.1.1965 அன்று நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் போராட்டத் திட்டங்கள் முடிவெடுக்கப் பட்டன. போராட்ட நாளுக்கு முன்பாகவே அண்ணா உள்ளிட்ட திமுக தலைவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டனர். **தன்னெழுச்சியான மாணவர் போராட்டம்**

1965, ஜனவரி 25 அன்று கருப்புக்கொடி ஏற்றுவதாக முடிவு செய்யப்பட்டிருந்ததை ஒட்டி, திமுக தலைவர்கள் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு வந்தனர். மொழிக்காக உடலில் தீயிட்டுத் தன்னை மாய்த்துக் கொண்ட கீழப்பழுவூர்

சின்னசாமியைத் தொடர்ந்து, சென்னை, கோடம்பாக்கத்தைச் சேர்ந்த சிவலிங்கம், விருகம்பாக்கம் ஓ. அரங்கநாதன் என்று தீக்குளிப்புகள் தொடர்ந்தன. திருச்சி அய்யம்பாளையம் வீரப்பன், கோயம்புத்தூர் சத்தியமங்கலம் முத்து. மயிலாடுதுறை சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, சிவகங்கை ராஜேந்திரன், பீளமேடு தண்டபாணி உட்படப் பலர் தீக்குளித்து மாண்டனர். ஆனால் இவர்கள் வறுமை காரணமாகத் தற்கொலை செய்து கொண்டதாக முதலமைச்சர் அறிவித்தார். இதனால் தூண்டப்பட்ட மாணவர்கள், தமிழ்நாடு எங்கும் திரண்டு பேருந்து மறியல் போராட்டங்களை நடத்தினார்கள். சிதம்பரம் அண்ணாமலை நகரில் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் ஊர்வலம் சென்றார்கள். இந்நிகழ்வில் போலீசார்துப்பாக்கி சூடு நடத்தியதில், கல்லூரி மாணவர் இராசேந்திரன் மார்பில் குண்டு பாய்ந்து அங்கேயே உயிரிழந்தார். அன்றைய நிகழ்வில் பலர் உயிரிழந்தும், அரசாங்கம் குறைவான எண்ணிக்கையையே அறிவித்தது.

நிலைமை கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்த சூழ்நிலையிலும், இந்தித் திணிப்பைத் திரும்பப் பெற முடியாது என்று 3.2.1965 அன்று லால்பகதூர் சாஸ்திரி அறிவித்தார். அதைத் தொடர்ந்து ''மாநில மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு'', 8.2.1965 அன்று மாநில சட்டக் கல்லூரியில் கூடி இரயில் நிறுத்தப் போராட்டம், அஞ்சல் நிலையங்களுக்கு முன்பு மறியல், பொது வேலை நிறுத்தப் போராட்டம் ஆகியவற்றை அறிவித்தது. இதனால் மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்து, ரயில் மறியல் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் என்று தமிழ்நாடு முழுவதும் போராட்டத் 'தீ' பரவியது.

1965, பிப்ரவரி, 8 ஆம் நாளிலிருந்தே தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமடையத் தொடங்கியது. பெரிய நகரங்களில் முழுக் கடையடைப்பு வெற்றிகரமாக நடைபெற்றது. மாணவர்களும், அவர்களுக்கு ஆதரவாகப் பொதுமக்களும் இந்தப் போராட்டங்களை நடத்தினர். ஊர்வலங்களுக்குத் தடை விதிக்கப்பட்டு இருந்தாலும் தடையை மீறி மாணவர் ஊர்வலமும், போராட்டங்களும் நடைபெற்றுக் கொண்டே இருந்தன. சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் அறிவிக்கப்படாத ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் இருந்தது. இதில் பல மாணவர்கள் முன்கூட்டியே கைது செய்யப்பட்டனர். மாணவர்கள் போராட்டம் தீவிரமான நிலையில், சென்னை கோகலே மண்டபத்தில் இராசாசி பேசும் போது, ''போராட்டத்தை மாணவர்கள் நிறுத்த வேண்டும் என்றும், ஆறு மாதங்களுக்குள் சிக்கல் தீர்க்கப்படாவிட்டால் தானே முன்நின்று போராட்டம் நடத்தத் தயார்'' என்றும் குறிப்பிட்டார் (தி மெயில், 9.2.1965). ஆனால், தமிழ்நாடு மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவின் தலைவர் எம். என். இரவிச்சந்திரன், ''அரசியல்வாதிகளின் அறிவுரைகளை மாணவர்கள் ஏற்கப் போவதில்லை என்றும், எந்த முடிவானாலும் தாங்களே எடுப்போம்'' என்று கூறினார். இதைத்தொடர்ந்து மாணவர் அமைப்புகளின் மீதான அரசாங்கத்தின் பிடி மேலும் இறுகத் தொடங்கியது.

1965, பிப்ரவரி ஒன்பதாம் நாள் மாநிலம் முழுவதிலும் உள்ள அஞ்சல் நிலையங்கள் முன்பு மாணவர்கள் மறியல் செய்தனர். சென்னை, திருச்சி, தஞ்சாவூர், ஊட்டி,

கோயம்புத்தூர், மதுரை, சேலம், விருதுநகர், காஞ்சிபுரம், தென்னார்க்காடு என்று பெரும்பாலான மாவட்டங்களில் தொடர் வண்டியை மறித்து, இந்தி எழுத்துக்களை அழித்த மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். சேலம், நாமக்கல், கோபிசெட்டிபாளையம், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் வழக்கறிஞர் சங்கங்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றன. மாணவர்கள் போராட்டம் தீவிரம் அடைந்த நிலையில், திமுக பொதுச்செயலாளர் அண்ணா, மாணவர் தலைவர்களான எல். கணேசன், என், நாவளவன் ஆகியோரை அழைத்து, போராட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு அறிவுறுத்தினார். ஆனால், அது தங்கள் கைகளில் இல்லை. தமிழ்நாடு மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுதான் அதுபற்றி முடிவெடுக்க முடியும் என்று அவர்கள் கூறிவிட்டனர். என்றாலும் அண்ணா, அறிக்கை வழி, போராட்டத்தை உடனடியாக நிறுத்தி அதனால் உருப்பெரும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்குத் தயாராகுமாறு கூறினார் (தி மெயில், 10.2.1965). ஆனாலும், தமிழ்நாடு மாணவர் இந்தி எதிர்ப்புக் குழு, திட்டமிட்டபடி போராட்டத்தைத் தொடர முடிவு செய்தது. ஒவ்வொரு நாளும் நிலைமை மோசமாகி வரவே, துப்பாக்கியால் சுடுவதற்கு காவலர்களுக்கு அனுமதி அளித்து ஆணைகள் அனுப்பப்பட்டன.

பிப்ரவரி 10 ஆம் நாள், தமிழ்நாட்டில் ராணுவம் சூழ்ந்தது. அன்றைய போராட்டத்தில் வெடித்த வன்முறை காரணமாக மொத்தம் ஏழு இடங்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. அதன் விளைவாக 25 பேர் இறந்ததாகவும், 50க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்ததாகவும் அரசாங்கம் அறிவித்தது. ஆனால் உண்மையில் இறந்தவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்று பொதுமக்கள் தரப்பில் இருந்து கூறப்பட்டது. அன்றைய இரவு, திருப்பூரில் நிலைமை மோசமானதைத் தொடர்ந்து திருப்பூரைக் கண்காணிக்கும் வேலையை ராணுவம் மேற்கொண்டது. தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை கட்டுக்குள் இல்லாததால், அனைத்துக் கல்வி நிலையங்களும் மார்ச் முதல் நாள் வரை மூடப்படுவதாக முதலமைச்சர் பக்தவச்சலம் அறிவித்தார் (தி மெயில், 11.2.1965).

பிப்ரவரி 10ஆம் நாள் தமிழக வரலாற்றில் ஒரு கருப்பு நாள் என்று தமிழ்நாடு அரசாங்கத்தின் தலைமைச் செயலாளர் குறிப்பிட்டார்.

பிப்ரவரி 11 ஆம் நாளும், மாணவர்களின் போராட்டத்தை அடக்கக் காவல்துறையும், இராணுவமும் துப்பாக்கிச் சூடு நடத்தின. ஆனாலும் மாணவர்கள் போராட்டம் தொடர்ந்தது. துப்பாக்கிச் சூட்டில் நானூறுக்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கக் கூடும் என்று அந்தந்தப் பகுதி மக்கள் கூறிய நிலையில், துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் 25 பேர் மட்டுமே என்று அரசாங்கம் கூறியது.

மாணவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டை அடுத்துத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் சி. சுப்பிரமணியம், ஓ.வி.அழகேசன் ஆகியோர் தங்கள் பதவியில் இருந்து விலகினர். இருவரின் பதவி விலகல்களையும் வரவேற்பதாக அறிஞர் அண்ணா அறிக்கை வெளியிட்டார் (தி மெயில், 12.2.1965). ராசாசியும் பதவி விலகலை

வரவேற்றார். "தமிழ்நாடு இந்தியாவிலிருந்து பிரிவதைத் தான் நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லை என்றால் உடனடியாக இந்தித் திணிப்பு முடிவை வாபஸ் பெறுங்கள்" என்று அப்போதைய குடியரசுத் தலைவர் டாக்டர் ஆர். ராதாகிருஷ்ணன், இந்தியத் தலைமை அமைச்சருக்கு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் குல்சாரிலால் நந்தா, "இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே நீடிக்கும்" என்று அறிவித்துப் போராட்டத்தை கைவிடக் கோரினார். ஆனால் அவரது உறுதி மொழியை மாணவர் அமைப்புகள் நம்பவில்லை.

பிப்ரவரி 11 ஆம் நாள், தில்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி பொதுமக்களுக்கு அன்றிரவு வானொலி மூலம் உரையாற்றினார். அந்த உரையில், தமிழ்நாடு மாணவர் அமைப்பு மற்றும் திமுக ஆகியவை முன்வைத்த முக்கிய கோரிக்கையான, நேருவின் உறுதி மொழிகளுக்குச் சட்ட உரிமை தருவது பற்றிப் பிரதமர் எதுவும் கூறவில்லை. ஆனால் இந்தி மொழி திணிக்கப்படாது என்ற வாய் மொழியை மட்டுமே உறுதியாகத் தந்தார். இது போராட்டக் காரர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. இந்நிகழ்வு குறித்துப் பின்னர், அறிஞர் அண்ணா, 4. 3.1965 அன்று, மாநிலங்களவையில் பேசும் போது, "அந்தக் காலகட்டத்தில் பிரதமர் சென்னைக்கு வரத் தவறிவிட்டார்" என்றார். மேலும், "எங்கள்மக்கள்சுட்டுக்கொல்லப்பட்டபோது, சொத்துக்கள்நாசமாக்கப்பட்ட போது, காட்டு விலங்குகளைப் போல் எங்கள் மக்கள் வேட்டையாடப்பட்ட போது, நீங்கள் கேரளாவுக்கு வந்தீர்கள். எனினும் சென்னை மாநிலத்துக்கு வர வேண்டும் என்ற பண்பாடு உங்களுக்கு இல்லை. மக்களை அமைதியாக இருக்கச் சொல்லி நீங்கள் நாட்டு மக்களிடம் வானொலியில் பேசி இருக்கலாம். ஆனால் சரியான நேரத்தில் நீங்கள் எங்களைக் கைவிட்டு விட்டீர்கள். நான் மிகுந்த வருத்தப்படுகிறேன்" என்று அண்ணா வேதனையோடு பேசினார் (இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாறு, இரண்டாம் பாகம், பக். 582 - 583). "காலத்தின் தேவைக்கேற்ப பொதுவாக எடுக்கும் நடவடிக்கைகளில் இருந்து மாறுபட்டுச் செயல்பட வேண்டிய நேரம் இது என்பதை அவர் (பிரதமர்) புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை" என்று மெயில் ஏடு எழுதியது. பிரதமரின் வானொலியுரை ஏமாற்றத்தைத் தருகிறது என்று ராசாசி குறிப்பிட்டார். பிரதமரின் வானொலி உரையில் புதிதாக எதுவும் இல்லை என்று தமிழ்நாடு மாணவர் இந்தி எதிர்ப்புக் குழு கூறியது (தி மெயில், தி இந்தியன் எக்ஸ்பிரஸ், தி இந்து, 12. 2. 1965).

பிப்ரவரி 11ஆம் நாள், திருச்சி மாவட்டத்தில் குளித்தலை அருகில் அய்யம்பாளையம் என்ற சிற்றூரில் வீரப்பன் என்னும் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தீக்குளித்தார். தொடர்ந்து அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலர் இறந்தனர். பொள்ளாச்சி அஞ்சல் நிலையத்தில் இந்தி எழுத்தை அழிக்கும் போது ஒரு மாணவர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். இதனைத் தொடர்ந்து கலவரங்கள் அதிகமாகவே, பொள்ளாச்சிக்கு இராணுவம் நடுப்பகலில் வந்து சேர்ந்தது. வந்தவுடனேயே, பொள்ளாச்சியில் ராணுவத்தினர் உடனடியாக நடவடிக்கை எடுத்துத் துப்பாக்கிச் சூடு நடத்திய போது, நான்கு வயதான பெண் குழந்தை ஒன்று

இறந்து போனது. கூட்டம் எல்லாம் சென்ற பின், அந்தக் குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் கண்ணீர் விட்டார். மாணவர் போராட்டங்களும், அவர்களுக்கு ஆதரவான பொதுமக்கள் போராட்டங்களும் உச்ச நிலையை அடைந்தன. மாநில வரலாற்றில் அன்றைய தினம் முதல்முறையாக, இந்திய இராணுவம் துப்பாக்கி சூடு நடத்திய பிறகு, பொள்ளாச்சி ஒரு பெரிய சுடுகாட்டைப் போல் காட்சியளித்தது என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழ் செய்தி வெளியிட்டது. பொள்ளாச்சி முழுவதும் ராணுவம் அணிவகுப்பு நடத்தியது. பொள்ளாச்சியின் நகரமைப்புப் படத்தை ராணுவம் வைத்துக் கொண்டு, கிட்டத்தட்ட வேட்டையாடுவது போலவே நிகழ்வுகளை நடத்தியதாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டனர். ஏறத்தாழ 12 நாட்கள் பொள்ளாச்சி நகரத்தின் காவல் இராணுவத்திடம் இருந்தது. இயந்திரத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்ட அந்த நிகழ்வுகளைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் விடுத்த அறிக்கையில், இயந்திரத் துப்பாக்கிகள் பயன்படுத்தப் பட்டதை மறுத்தார். முதலமைச்சர் பக்தவச்சலமும் அதையே வழி மொழிந்தார்.

கட்டுக்கடங்காத இறந்த உடல்களை எல்லாம் சேகரித்த ராணுவத்தினர், அதில் சிலவற்றைப் பொள்ளாச்சி - பழனி சாலையில் உள்ள சுடுகாட்டில் போட்டுத் தீ வைத்துக் கொளுத்தினர். அந்தப் பக்கம் யாரையும் செல்லவும் அனுமதிக்கவில்லை. சுடுகாட்டைத் திரும்பிப் பார்க்கக் கூடாது என்று கட்டளையும் இடப்பட்டது. பொள்ளாச்சி சுடுகாட்டில் பிணங்கள் எரிக்கப்பட்டது போக, மற்ற உடல்கள் ராணுவ வண்டிகளில் ஏற்றப்பட்டு, மதுக்கரை ராணுவ நிலையம் கொண்டு செல்லப்பட்டு எரிக்கப்பட்டன. இந்நிகழ்வுகள் குறித்துப் பொதுமக்கள் சொன்ன தகவலில் இருந்து,120 பேர் கொல்லப்பட்டு இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால்

அரசாங்க அறிக்கையில் 10 பேர் தான் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. தமிழ் நாட்டில் கடந்த 50 நாட்களாக நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், எல்லாப் பகுதிகளும் சேதமுற்றாலும், பொள்ளாச்சி மக்கள்தான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர் (பேராசிரியர் அ. இராமசாமி, பொள்ளாச்சிப் படுகொலை, பக். 578 - 594).

இந்நிலையில் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் சின்கா, சென்னை வந்து அண்ணாவைச் சந்தித்து, மாணவர்களைச் சமாதானப்படுத்திப் போராட்டத்தை நிறுத்த உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டார் (தி இந்து, 12.2.1965). மாணவர் போராட்டம் திமுகவினரின் தூண்டுதலாலோ அல்லது அண்ணாவின் தலைமையிலோ நடைபெறவில்லை என்றாலும், மாணவர்களும் அண்ணாவின் தலையீட்டைக் கோரி வந்தனர். "இழைக்கப்படும் அநீதியை உலகறியச் செய்வதில் மாணவர் போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது. நேரடி நடவடிக்கைகளை நிறுத்தி வையுங்கள்" என்று சமாதானப் படுத்தினார் அண்ணா. அதேநேரம் கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று 10. 2. 65 அன்று மத்திய, மாநில அரசாங்கங்களுக்கும் கோரிக்கை வைத்தார். அரசாங்கம் செவி சாய்க்காத நிலையில், அறிஞர் அண்ணாவின் கோரிக்கையை மாணவர்கள் ஏற்றுப் போராட்டத்தைத் தள்ளி வைத்தனர். திமுக தலைவர்களின் கைதும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

பாராளுமன்ற மாநிலங்கள் அவையில் 4.3.1965 அன்று குடியரசுத் தலைவர் உரைமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு, ஆட்சி மொழி பற்றி அறிஞர் அண்ணா பின்வருமாறு பேசினார்.....

"உங்களுக்குப் பரம்பரைச் சொத்தாக வருவது எங்களுக்குப் பள்ளிக்கூடத்து அறிவாகக் கிடைக்க வேண்டும். இதில் உங்களுடைய மொழியை நாங்கள் படித்து, உங்களோடு ஒத்த முறையில் எப்படிப் போட்டி போட முடியும்? ஒரு மொழியை – ஒரு வட்டார மொழியான இந்தியை, மற்ற எல்லா மொழிகளுக்கும் மேலாக ஆட்சி மொழியாக ஆக்க நினைப்பதில் உள்ள அநீதி உங்களுக்குப் புரியவில்லையா? எங்களுக்கு எவ்வளவு மன வேதனையை அது தருகிறது என்பதை நீங்கள் உணரவில்லையா?"

"இந்தி மொழித் திணிப்பால் தமிழ்நாட்டில் மூண்ட கொந்தளிப்பின் போது, மாநில முதலமைச்சர் பக்தவச்சலம் கற்பாறை போல் நின்றார் என்று உள்துறை அமைச்சர் நந்தா புகழ் பாடி இருக்கிறார். ஆம், பக்தவச்சலம் ஒரு கற்பாறை போலத்தான் நின்றார். ஆடாமல், அசையாமல், உணர்ச்சியற்று, இரக்கமற்று அவர் கற்பாறை போலத்தான் நின்றார்... துப்பாக்கிகள் வெடித்தன; குண்டுகள் பாய்ந்தன; பிணங்கள் விழுந்தன; அப்பொழுதும் அவர் கற்பாறை போலவே நின்றார். மகனை இழந்த மாதாவின் அழுகுரல்; கணவனை இழந்த மங்கையின் கதறல் எதுவும் அவரை அசைக்கவில்லை. அவர் இதயத்தைக் கல்லாக்கி கற்பாறை போல் நின்றார்".

"ஆறு வயதுப் பையன், ஏழு வயதுச் சிறுமி, எண்பது வயதுக் கிழவர் என்று கூடக் கண்மண் பாராமல் சுட்டு வீழ்த்தி, வீதியை இரத்தமாக்கி, வீடுகளைச் சோகமாக்கி

ஆட்சி நடத்திய பக்தவச்சலம் கற்பாறை போலத்தான் நின்றார்" என்றெல்லாம் கேட்போர் மனமுருகப் பேசிய அண்ணா, இறுதியாக, "எல்லா தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாகும் வரை ஆங்கிலம் இருக்கட்டும். பிறகு இந்திய மொழி ஒன்று வளர்ந்து தகுதி பெற்றுத் தொடர்பு மொழியாகும் வாய்ப்பைக் காலப்போக்குக்கு விட்டு விடலாம்" என்று கூறி முடித்தார்.

அண்ணாவின் இந்தக் கண்ணீர் உரை, காங்கிரஸ் பாராளுமன்றத்தையே கொஞ்சம் அசைத்து விட்டது என்றுதான் கூற வேண்டும். அப்போதைக்கு இந்தித் திணிப்பு விலக்கிக் கொள்ளப்பட்டதாகவே எண்ணுகின்ற அளவில் காரியங்கள் நடந்தேறின. கொஞ்சம் கொஞ்சமாக மாணவர் போராட்டங்களும் குறைந்து கொண்டே வந்தன. தமிழ்நாட்டில் மீண்டும் அமைதி நிலவத் தொடங்கியது.

இப்படிப்பட்ட கண்ணீர்க் காவியங்களை, மொழி காக்க உயர் துறந்த தியாக வாழ்வினை மக்கள் மறந்து விட்டார்கள் என்பதைவிட மறக்கடிக்கப் பட்டார்கள் என்று கூடச் சொல்லலாம். இவ்வரலாறு 60 ஆண்டுகளைக் கடந்து விட்ட நிலையில், அன்றிருந்த தலைமுறையிலிருந்து மூன்றாம் தலைமுறைக் காலமான இன்றைக்குத் திரைப்படமாக வந்திருக்கிறது. இத்தனை நாளும் திராவிட இயக்கங்கள் தான் தமிழ்நாட்டை ஆட்சி செய்து வந்தன. இந்த வரலாறை அவர்கள் அதிகாரத்தில் இருந்தபோதே மக்களிடம் கொண்டு வந்திருக்க வேண்டும்.

அதேபோல அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாறையும் இத்தனைக் காலத்தில் திரைப்படம் ஆக்கி இருக்க வேண்டும். அண்ணா இறந்ததும், "அண்ணா ஒரு காவியம்" என்ற தலைப்பில் சிவகங்கை சேதுராசன் குழுவினர் நாடகம் ஒன்றை நடத்தினர். அது பெரும் வரவேற்புப் பெற்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது. பிறகு அதைத் திரைப்படமாக்கும் முயற்சியும் நடைபெற்றதாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனாலும் எதுவும் நடக்கவில்லை. அதற்கான முயற்சிகள் தொடக்கக் காலத்தில் நடந்த பின்பு, அதைப் பற்றிய செய்திகள் கூட வராமல் போய்விட்டன. இந்தியாவில் மக்களுக்காக, மக்களின் செல்வாக்கை மட்டுமே நம்பி அரசியல் செய்த ஒரே தலைமகன் ஆன அண்ணாவைப் பற்றி இன்றைய தலைமுறையினர் அறியாதபடி செய்ததற்குத் திராவிட இயக்கங்களைத் தவிர வேறு யார் பொறுப்பேற்க முடியும்?

உதவிய நூல்கள்:

- இராமசாமி, அ. பேராசிரியர், இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாறு, இரண்டாம் பாகம், 2015, நக்கீரன் வெளியீடு, சென்னை.
- முத்துக்குமார், ஆர். திராவிட இயக்க வரலாறு, பாகம் 1, 2010, கிழக்கு, சென்னை.
- நிவேதிதா லூயிஸ், 1938 முதல் மொழிப்போரில் பெண்கள், 2023, ஹெர் ஸ்டோரீஸ், சென்னை.
- சிவ. இளங்கோ, முனைவர், புதுவைச் சிவம் கவிதைகளும் புரட்சிக் கோட்பாடுகளும், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 2008.

புகழேந்திப் புலவர்

பரிதிமாற் கலைஞர்

செந்தமிழ் மொழிக்கலைச் செல்வர் கூட்டுண
நளன் மடை போல வுளன்மகிழ் வுறுக்குஞ்
செம்பாக மாகவச் சீர்நளன் காதையை
வெண்பாவின் யாத்த வியத்தகு கவிஞர்,
புகழேந்திப் புலவரென்பார்,

இவர் தொண்டைநாட்டிற் செங்கற்பட்டிற் கருகிலுள்ள பொன்விளைந்த களத்தூரில், துளுவ வேளாளர்குலப் பாலாழியிற் கௌத்துவ மணியெனத் தோன்றி, இளம் பருவத்திலேயேகல்விகற்பான்புகுந்து, செந்தமிழிலக்கியஇலக்கணக்கடலினுட்டிளைத்து விளையாடிக் கவிமதஞ் சொரியுங் களிறென வுலாவா நின்றார். இத்தகைப் புலவர் பெருமான் செந்தமிழ் நாட்டிற்கேகி ஆண்டுள்ள பாவலர் தம்மொடும் பயிறல் கருதிச் சோணாடு கடந்து,

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தர பாண்டிய னெனுந்திரு நாடனுஞ்
சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கு
மங்கலப் பாண்டி வளநாடு

சென்று, அவ்வயிற் கூடலம்பதிக்கட் பாண்டிய ராசனாலாதரிக்கப்பெற்று அவன் றன் வாயில் வித்துவானா யமர்ந்தனர். இவரையாதரித்த பாண்டியனை வரகுண பாண்டிய னிரண்டாவனென்பர்.

இவ்வாறு நந்தங் கவிஞர்கோமான் பாண்டியனவைக்களத்து வித்துவானாயிருப்புழிச் சோணாட்டி லரசுரிமை யெய்தி யாண்டு கொண்டிருந்த குலோத்துங்க சோழன்[1] முதலாவனுக்குப் போதகாசிரியரும், அவன்றன் சமத்தான வித்துவானுமாகிய ஒட்டக்கூத்தப் புலவர் தமது மாணாக்கனாய சோழ ராசற்குப் பாண்டியன் மகளை வதுவைபேசி முடிப்பான் மதுரைமா நகர்க்குப் போந்தனர். போந்து மாறனிடம் மன்றல் குறித்துப் பேசிக்கொண்டிருப்புழிப் பாண்டியன் புன்முறுவல் கோட்டிப் "பைந்தமிழ் வல்லீர்! நுந்தம் மன்னவன் எந்தங் குலத்திருமகளைக் கொளத்தகுங் குணாவான்கொல்லோ?" என்று வினாயினன். என்னக் கேட்ட ஒட்டக்கூத்தர், சோழன் பெருமை தோன்றக்,

கோரத்துக் கொப்பேர் கன வட்ட மம்மானே
கூறுவதுங் காவிரிக்கு வையையோ வம்மானே
யாருக்கு வேம்புநிக ராகுமோ வம்மானே
யாதித்த னுக்குநிக ரம்புலியோ வம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ வம்மானே
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ வம்மானே
யூருக் குறந்தைநிகர் கொற்கையோ வம்மானே
யொக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே ?"

என்றதோர் பாடலைச் சொற்றனர். அங்ஙனம் அது கேட்டருகரிகிருந்த நந்தம் புகழேந்திப் புலவர் மனம் பொறாது எழுந்து, அதற்கு மாறாகப் பாண்டியன் பெருமை தோன்ற,

ஒருமுனிவ னேரியலோ வுரைதெளித்த தம்மானே
யொப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ வம்மானே
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ வம்மானே
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ வம்மானே
கரையெதிரல் காவிரியோ வையையோ வம்மானே
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ வம் மானே
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந் தனையோ வம்மானே
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே,"

என்றதோர் பாடலைப் பாடி அவர் கூற்றைக் கண்டித்தனர். அப்பொழுதே யொட்டக்கூத்தர்க்கு நம் புகழேந்திப் புலவர்மே லழுக்காறுண்டாயிற்று. பின்னர் ஒட்டக்கூத்தர், தக்கவாறு பலவற்றை யெடுத்துரைத்து, வழுதி மகளைச் சோழற்கு மணஞ்செய்தளிப்பான் நிச்சிதார்த்தஞ் செய்து போந்து, தம்மாணாக்கனாய சோழராசற்கு அச்செய்தியை யறிவுறுத்தார். உடனே சென்னியுந் தனக்குப் பிரதிநிதியாகச் சின்னாள் தான் மணவினை முடித்து வருங்காறும், அரசாளுமாறு ஒட்டக்கூத்தரைத் தன்னாட்டகத்திருத்திச் சேனைகளோடும் மதுரை சென்று ஆலவாயிற் பெருமானடிகளை வணங்கி, மாறன் மகளை மணஞ்செய்துகொண்டனன். பின்னர்ப் பாண்டியன் தன்னருந்தவச் செல்வ மகட்குத் தான் கொடுத்த பாரிபோக வரிசையுடன் நந்தம் பாவலர் தலைவர் புகழேந்திப் புலவரையும் அவளுக்கு ஏற்ற வமயங்களிற் றக்கவாறு புத்தி கூறும் பொருட்டு அனுப்பினான்.

அவ்வாறே யவர் சோணாடு போந்தமை யுணர்ந்த வொட்டக்கூத்தர் பழம் பகைமை பாராட்டி அவரை மாவித்துவானென மதித்தலின்றி யிரக்கந் துறந்து கறுக்கொண்டு, "இவன் முன்னர் நமக்குப் பெண் கொடுக்கவொட்டாது தகைத்து நுந்தங் குல முதலியவற்றைப் பாண்டியனெதிரிற் பழித்துரைத்தோன்," என்று கோட்சொல்லி யரசனை நம்புமாறு செய்து நந்தம் புகழேந்திப் புலவர் தம்பிரானைக் காவற் சிறையகஞ் செறித்தார். அவர் 'இது கர்மானுசாரம்' எனக்கருதி அச்சிறைக்க ணிருந்து கொண்டு அதனருகே தண்ணீர்க்குச் செல்லுறூஉம் மகளிர் தஞ் செவிக்கினிமையாக, இக்காலத்தில் நங்கைப் பாட்டென வழங்குறூஉம் அல்லியரசிமாலை, பவளக்கொடிமாலை, புரந்தான் களவுமாலையென்னு நூல்களை எளிதிற்பொருள் விளங்குமாறுபாடி, அவர்கட்குக்

கொடுத்து, அதுபற்றி யவர்கள் மனமகிழ்ந்து கொண்டுவந்து கொடுத்த நல்லரிசி பருப்பு முதலியவற்றைச் சாளர வழியாய்ப் பெற்றுச் சமைத்துண்டு, மிகுந்ததைச் சிறைக்காவலர்க்கீந்து அவர் தமைத் தம் வயப்படுத்திக்கொண்டு காலங் கழித்து வருவாராயினார்.

புகழேந்திப் புலவர்

இங்ஙனமிருந்து வருநாளில் ஒரு நாட் சோழராசன் தனது பட்டத் தரசுவாலின்மீது இவர்ந்து வீதியிலுலாவரும்போது காவற் சிறைக்கோட்டத்தின் மேற்றளத்தில் நின்ற புகழேந்தியாரைத் தன்னாசிரியர் ஒட்டக்கூத்தருக்குக் காட்டி, 'இவர் செந்தமிழ் மொழியிற் சிறந்த புலவரல்லரோ ?' என்று வினவலும் அவர் தம்மினுமிழிந்தார் புகழேந்தியாரென்பதுபட அவரை யிகழ்ந்து புனைவிலி புகழ்ச்சியணியாக,

மானிற்கு மோவந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோவவ் வெரியுந் தழன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தானிற்கு மோவக் கதிரோ னுதயத்திற் றர்மன் னனே

என்றதோர் பாடலைக் கூறினார், அது செவிக்கொண்ட புகழேந்தியார் 'அப் பாடலை வெட்டிப் பாடவோ ஒட்டிப்பாடவோ ?' எனச் சோழனைக் கேட்டுழி, அவன் 'ஒட்டியே பாடுதி' ரெனலும் நந்தம் ஆசுகவிவல்ல அறிஞர்,

மானவ னானந்த வாளரிவேங்கையும் வற்றிச்செத்த
கானவ னானவ் வெரியும் தழலுங் கனைகடலின்

மீனவ னானந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தானவ னானக் கதிரோ னுயமுந் தார்மன்னனே

யென்றுபாடி யொட்டக் கூத்தர் தம் ஏக்கழுத்தம் போக்கினார். சோழன் அக்கணம் புகழேந்திப் புலவரிடம் மதிப்புங் கருணையுடன் கொண்டனனேனும் தனக்கு ஒட்டக் கூத்தரிடத்திலுள்ள அபிமானத்தினா லவரைச் சிறை நீக்காது போயினான்.

இனி இது நிற்க. பாடல் பாடிக் கொண்டுவரும் பாவலர்க்குச் சோழராசன் கண்டபடியெல்லாம் பரிசிலளிப்பதை யொட்டக்கூத்தர் தடுத்துவிட்டு இராச சமஸ்தானத்தில் வெகுமதி பெறக்கருகிப் போதரும் வித்வான்களைச் சிறைக்கோட்டத்திட்டுத் தேவி கொலுவீற்றிருக்கும் நவராத்திரியுற்சவ காலத்தில் அவர் தமை யழைப்பித்துத் தாம் பல்வகைப்பட்ட கடுவினாக்களெழுப்பி, அவற்றைத் தக்கவாறிறுக்கத் தெரியாரை யவமதித்து வந்தனரேயன்றி, அந்தோ ! அவர்தமை யிவ்விருவராகக் குடுமியோடு குடுமிமுடித்து இறங்கி நிற்குமாறு தேவிமுன்னர் நிறுத்திப் பிடாரிக் கிரட்டைக்கடா வெட்டுமாறு போலச் சிறிதேனும் அருளின்றி அன்னர் தலைகளைப் பதைக்கப் பதைக்க வெட்டிப் பலிசெலுத்தும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். இத்தகைய கடுவழக்கத்தை யொட்டக்கூத்தர் மேற்கொண்டது இக்காலத்திற்போலவே யக்காலத்திலும் புல்லறிவாளர் பலர் பண்டிதர், மாபண்டிதர், கவி, கவிராயர், பாவலர், நாவலர், அட்டாவதானி, வித்துவான், வித்துவச் சிரோமணி யென்பனவாதிய பல்வகையவாய பட்டப் பெயர்களை யெவருங் கொடுக்கவேண்டிய அவசியமின்றித் தாம்சுயமாக வைத்துக்கொண்டு தாந்தோன்றிகளாய்த் திரியவொட்டாத வண்ணம் கல்வியினருமை பெருமைகளையு மேற்றத் தாழ்வுகளையும் தெரிக்குறூஉம் நல்லவழியென வுள்ளவாறே நம்பியேபோலும்! இது பற்றியன்றே,

குட்டுதற் கோபிள்ளைப் பாண்டிய னீங்கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
யெட்டின மட்டறுப்பதற்கோ வில்லி யில்லை
யிரண்டொன்றா முடிந்துதலை யிறங்கட் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ லறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே

யெனப் பிற்காலத்திருந்த காளிமுத்தம்மையுங் கழறுவாளாயினாள். இவ்வாறே பரிசு பெற வந்த பாவலர் பலரையும் வழக்கப்படி யொட்டக்கூத்தர் புகழேந்தியாரிருக்குஞ் சிறைக்கண்ணே செறித்தார். அஃதுணர்ந்த புகழேந்திப் புலவர் அவர்பால் மிகப் பரிவுகூர்ந்து அவர் தமை உய்விக்கவும் ஒட்டக்கூத்தரைப் பங்கஞ் செய்விக்கவுங் கருதி அவர்தமுன் நல்ல புத்திமான்களாய குயவன், அம்பட்டன், கொல்லன், வேளாளன், தச்சன், தட்டான் முதலிய சிலரைக் தெரிந்தெடுத்து அவர்க்கு விசேடமாகக் கல்வி கற்பித்து வைத்து, நவராத்திரி காலத்திற் சிறையகப்பட்ட வித்துவான்களை யொட்டக்கூத்தர் வரவழைப்புழி யேனைய புலவர்கள் தாம் கலைபயிற்றியவர்களினும் கல்வியிற் குறைந் தவர்களாயிருந்தமை பற்றி அவர்களை முதற்க ணனுப்பாது குயவன் முதலியோரை ஒவ்வொருவராய் ஒட்டக்கூத்த ரெதிரிற் போய்த் தைரியமாய் நின்று அவர் வினவும் வினாக்கட்குத் தக்கவாறு விடை பகர்ந்து வெற்றிகொள்ளும் படி திட்டஞ்செய்து விடுத்தனர். விடுத்தாங்கே முதற்கட் குயவன் சென்று கூத்தரெதிரிற் கும்பீடின்றி நின்றான். அதுகண்ட வொட்டக்கூத்தர் அவனை நோக்கி,

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன் வந் தெதிர்த்தவ னாரடா ?

எனலும், அச்சுறாக் குயவன் புலவரை நோக்கி,

கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானை யும்பண்ணு மங்குசப் பையல்யான்

என மற்றை யீரடிகளையும் பாடி முடித்து விடைகொடுத்தலும் ஒட்டக் கூத்தர் வெட்கி, அவனைத் தனியே வேற்றிடம் நிறீஇ மற்றொருவனை விளித்தலு மொருகண் பொட்டையான வம்பட்டன் போந்து நின்றான். அவனை நோக்கிய வொட்டக் கூத்தர்,

விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குகின் ஹய்பொட்டை யாய்புகலாய்

எனலும், சிறிதும் பின் வாங்காத மயிர்வினைஞன்,

கண்பொட்டை யாயினு மம்பட்ட நான் கவி வாணர் முன்னே
புண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவெனே,

யென்று எடுத்த பாட்டை முடித்து விடுத்தான். அதுகேட்ட புலவர் வெகுண்டனரேனும் அவனை யொன்றுஞ் செய்யக் கூடாமையா லவனை யப்புறம் நிறுத்திவிட்டு இன்னொருவனே விளித்து முன்போலக் கவி சொல்லி, வினவாமல் வாசக நடையாய் அவனை, " நீ யார்? உன் பெயர் குல வரலாறுகள் யா? சொல்" என்று கேட்ட வளவில் எதிரே நின்ற கொல்லன்,

செல்வன் புதல்வன் திருவேங் கடவன் செகத் குருவாங்
கொல்லன் கவியைக் குறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
யல்லும் பகலு மடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே

என்று பாடி விடை பகர்ந்தான். இவனையுமப்புறப்படுத்தி வேறொருவனை விளித்தலும் போந்து நின்ற வேளாளனைப்பார்த்து, 'மாவித்துவானாய நம் முன்னர் அற்பனாய நீயுமொரு புலவனாய்ப் போந்து நிற்றல் நேரிதோ?' எனக் கேட்டதற்கு, வேளாளன்,

கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர் கோக நகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேழ்
காக்கின் ற மன்ன கவியொட்டக் கூத்தரின் கட்டுரையாம்
பாக்கண்டொளிப்பர்க ளோ தமிழ்ப் பாடிய பாவலரே

என்றதோர் பாட்டி லேற்றவா றவன் கடாவையிறுந்து முன்னர் ஒட்டக்கூத்தர் பாடியிருந்த அண்டத்துப்பரணி யென்னும் நூலிலொரு பெரிய குற்றமு மெடுத்துக் காட்டினான். இவ் வாறே,

சொன்ன சந்தக்கவி யாவருஞ் சொல்லுவர் சொற்சுவைசே
ரின்னசந் தக்கவி யேதென்ற போதி லெதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த வாய்ச்சியினாற்
கன்னசந் தங்களி லிக்கவி யாப்பைக் கடாவுவெனே

யெனத் தச்சனும்,

திகிரிவட் டக்குடைச் செங்கோ லபயன் செழுஞ்சிலம்பிற்
பகுதியொட் டக்கூத்தப் பட்டனை நாணப் பணைக்கவியின்
மிகுதியொட் டத் தட்டி விட்டகை யோட்டி லுருக்கிக்குத்திப்
புகுதவொட் டத்தட்டி மேலணு கா வணம் போர் செய்வேனே

யெனத் தட்டானும் பாடி யொட்டக் கூத்தரை யவமதித்தலும்,

அவர் இவர்கள் வல்லமையைக் கண்டு கர்வபங்கப்பட்டு மற்றையோரை யழையாமலிவையனைத்தும் புகழேந்தியாரால் நிகழ்ந்தனவென்றுய்த்துணர்ந்து, அவர் மேன் முன்னினும் பதின்மடங் கதிககோபங்கொண்டு, அவரைத் தவிர்த்து ஏனையோரனைவரையுஞ் சிறைநீத்து விடுத்தார். அவர்கள் யாவரும் அரச னிடம் தக்க வெகுமதி பெற்றுப் புகழேந்திப் புலவரை வாயார வாழ்த்திக் கொண்டு சென்றார்கள்.

இவ்வாறெல்லாம் ஒட்டக் கூத்தராற் புகழேந்திப் புலவரெய்திய விடர்ப்பாடுகளனைத்தையு மொருநாட் சிலதிப் பெண்டிராற் றெரிந்துகொண்ட சோழராசன் மனைவி மிக்க மனவருத்தமுற்றுத் தன்னாயகன் ஒட்டக் கூத்தப் புலவர்கைச் சூத்திரப் பாவையாகி நியாயமுங் கருணையுமின்றித் தன் தந்தையின் சமத்தான வித்துவானாகிய புகழேந்திப் புலவரைச் சிறைக்கோட்டத்திரீஇயின னென்று கருதி யரசன் மீது கோபங்கொண்டு புகழேந்தியாரைச் சிறை நீக்க வெண்ணித் தன் தலைவன் பள்ளியறைக்குப் போதரும் போது தானுள்ளே யிருந்து கதவினைத் தாழிட்டாள். அஃதுணர்ந்த வண்ணல் அவளைப் பலவாறு வேண்டியுங் கதவு திறவாமையால் அவளது உடைறணிப்பா னொட்டக் கூத்தப் புலவரை யுய்த்தனன். அவர் சென்று,

நானே யினியுன்னை வேண்டுவ தென்கொ னளினமலர்த்
தேனே கவாடந் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய விரலி குலாதிபன் வாயில் வந்தாற்
றானே திறக்குநின் கைத்தல மாகிய தாமரையே

என்று பாடியவளவில் அது கடுமையாயிருந்தமை குறித்து, அவள் ''ஒட்டக் கூத்தர் பாட்டுக் கிரட்டைத் தாழ்ப்பாள்,' என்று மொழிந்து முன்னினும் பலமாகத் தாழிட்டாள்.

இது செவிசாத்திய சோழர்பிரான், 'புகழேந்திப் புலவரையாம் நெடுநாளாகச் சிறையகத்திட்டு வருத்தியமையால் நம் தேவிக்கு ஊடலுண்டாயிற்று, என்று உய்த்துணர்ந்துகொண்ட வக்கணமே புகழேந்திப் புலவரைச் சிறை நீக்கி யரசியின் பிணக்கந் தணிக்குமா றேவலும், அவர் அந்தப்புரஞ் சென்று பள்ளியறை யருகர் நின்று,

இழையொன் றிரண்டு வகிர் செய்த நுண்ணிடை யேந்தியபொற்
குழையொன் றிரண்டு விழியணங் கேகொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டுகைம் மானா பரணனின் வாயில் வந்தாற்
பிழையொன் றிரண்டு பொறாரோ குடியிற் பிறந்தவரே

என்று பாடலுங் கேட்ட இராசமாதேவி யுடனே மகிழ்ச்சியடைந்து ஊடலொழிந்து கதவந்திறந்தனள். அன்று தொட்டுப் புகழேந்திப் புலவர்க்கு நற்காலம் பிறந்தது; சோழராசனு மவரை யன்புடன் பாராட்டி வந்தான். ஆயினும் அவர், தம்மைக்கண்டு ஒட்டக்கூத்தருக்கு அழுக்காறு முதிர்வதனானும், அவ்வொட்டக்கூத்தர் தம் பேச்சைக் கேட்டு அவர் கூறியாங்கே யரசன் நடப்பதனாலும், அங்ஙனமே நிலையாயிருக்க விரும்புதலின்றி யரசனனுமதி பெற்று, அச்சோணாட்டையே சேர்ந்த மள்ளுவமென்னுஞ் சிற்றரசு நாட்டின் கண் முரணூரிலிருந்து அரசு செலுத்திவந்த சந்திரன் சுவர்க்கி யென் னுக் குறுநில மன்னனிடத்துச் சென்று, அவன்றன் வாயில் வித்துவானா யமர்ந்தார்.

இல்வாறவர் அமர்ந்திருக்குங் காலத்தே சமஸ்கிருத மொழியிலுள்ள நளசரித்திரத்தை வடமொழி வல்லுநர் பிரசங்கிப்பக் கேட்டுக்கொண்டு வீற்றிருந்த சந்திரன் சுவர்க்கி நந்தம் புகழேந்திப் புலவரை நோக்கி, ''நீவிரிதனைச் செந்தமிழ்ப் பாவினிற் காப்பியமாக யாக்கல் வேண்டும்,'' என்றான். வேந்த னாணையைச் சிரமேற்கொண்ட கவிஞர், புலவர்க்கு 'வெண்பாப்புலி' யெனச் சிறப்பித் தோதப்பெறும் வெண்பாயாப்பினிற் செவ்வனே புணைந்து யாத்து யாவருங் களிகூர்ந்து சிரசாகம்பஞ் செய்யுமாறு அவனவைக்களத்தே யாங்கரங்கேற்றினர்.

புகழேந்திப்புலவர் அருளிய
கள்ளழகர் ராஜன்
சண்டை
பதிப்பாளர்:
அமரர்பெ. இராஜரத்தின முதலியார்
மர்ஹும் வீரா அப்துல்காதர் பதிப்பு] 1955 [விலை ரூ 12
23, தண்டபாணிப்பிள்ளை வீதி, சென்னை-1.
இடைக்குமிடம்: சரஸ்வதி புத்தகசாலை,
175, தெப்பக்குள தெரு, மதுரை.

இது கேள்வியுற்ற குலோத்துங்க சோழன் மிக்க மரியாதையோடும் புகழேந்திப் புலவரை வரவழைத்து உபசரித்துத் தனதவைக்களத்தே யவர் பாடிய நளவெண்பாவைப் பிரசங்கித்து மீட்டு மொருமுறை யரங்கேற்றுமாறு வேண்டினன். அன்னணமே புகழேந்தியாரும் நாடோறும் பிரசங்கஞ் செய்து கொண்டு வாராநிற்புழி,

மல்லிகையே வெண்சங்க வண்டூத வான் கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப-முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது

என்னும் பாடலைச் சொல்லலும், அவை நடுவணிருந்த ஒட்டக் கூத்தப் புலவர் எழுந்து, "இதன்கண் மல்லிகை யரும்பினைச் சங்காகவும் வண்டினைச் சங்கூதுவோனாகவும் உருவகஞ் செய்துரைத்தது உசிதமே யெனினும் ஒக்குமா றன்றென்பது தேற்றம்! யாங்கன மெனிற் சங்கவாத்தியம் வாசிப்போர் அதனடியினை வாயில்வைத் தூதாநிற்பக் கண்டும் நீவிர் அதற்கு மாறாக மேற் புறத்தூதும் வண்டினை யன்னணங் குறித்தது இயற்கைப் பொருளுணர்ச்சி யின்மைக் குற்றமாம்," என்றார்.

என்னக் கேட்ட வின்றமிழ்ப் புகழேந்திப் புலவர், "கட்குடி யனுக்கு வாயென்றும் மற்றொன்றென்றும் தெரியுமா?" எனச் சாதுரியமாக மறுமொழி தந்து நின்றார். இன்னுமிது போலவே யொட்டக் கூத்தர் இடையிடையே செய்து நின்ற ஆட்சேபனைகளை யெல்லாம் புகழேந்திப் புலவர் அவ்வக்கணமே தக்கவாறு நிராகரித்துத் தம் பக்கங்களை நிறுவுவாராயினார். கம்பர் முதலிய வித்துவான்கள் நம் புகழேந்திப் புலவர்க்குச் சார்பாய் நின்று புகழ்ந்தார்கள். எனினும் ஒட்டக்கூத்தர் இவ்வாறு நாடோறும் தம் பாடலில் குறை கூறுதலைப் புகழேந்திப் புலவர் பொறுக்கவில்லை. இவ்வொட்டக் கூத்தரை யெவ் வாறேனு மொழித்து விடுதலே தக்க தென்றுளத் துன்னி, ஒரு நாளிரவு எவருமறியாதபடி புகழேந்திப் புலவர் ஒட்டக்கூத்தப் புலவர் தம் இல்லஞ் சென்று அவரை யுறங்குழிக் கல்லானெறிந்து கொன்றுவிடுமாறு அவரது பள்ளியறைக்கருக ரொளிந்திருந்தனர். அவரொளித்துக் கொண்ட சிறிது நேரத்தினுள் ஒட்டக் கூத்தர் மனைவி தனது தலைவரிடம் போந்து, 'தாங்களேனோ விவ்வாறு உணவின் மீது வேட்கையற்று மனக்கவற்சி யெய்துகின்றீர்கள்? காலந் தாழ்த்தலின்றி யின்னினியே வம்மின், என்னன்புடைத் தலைவீர்!' என்று வேண்டி நிற்புழி, ஒட்டக்கூத்தர், 'புகழேந்திப் புலவர் யாத்த நளவெண்பா வின்னமுதம் பருகிய வெனக்கு நீயிடும் தீஞ்சுவை யடிசிலின்மீதார்வம் பிறக்கவில்லை' யென்றனர். இச் சொற்கள் நம் புகழேந்தியார் செவிகளில் வீழ்ந்தவளவில் உவகை சிறந்து ஒட்டக் கூத்தரிடம் ஓடிவந்து, 'ஐய வண்டமிழ்வல்லீர்! நும் மெய்யிய லுணரப்பெறாது நும்மை யொருகணத்தினு ளுயிர்போக்கக் கருதிய பாவியேன் யான்,' என்று கூறித்தழுவித் தாங்கொணர்ந்த கல்லையுங் காட்டித் தம்மீது பொறை பாராட்டுமாறு அவரை வேண்டிக் கொண்டனர். இஃதுணர்ந்த ஒட்டக்கூத்தர் களிப்படைந்து புகழேந்தியாரோடும் உளமொத்த நட்புப் பாராட்டுவாராயினார்.

மன்னவன் குலோத்துங்கனும் மற்றைய பாவலரு மிச்செய்தி கேள்வியுற்று மகிழ்ச்சி யெய்தினார். இனியொருநாட் சோழ ராசன் திருநெய்த்தான மென்னுந் திருப்பதிக்க ணெழுந்தருளியிரா நின்ற சிவபிரான் மீது 'நெய்த்தானத்தானைச் சேவித்தே,' யென்பதனை

மகுடமாகக் கொண்டு சந்த விருத்தமொன்று ஆசு கவியாகப் பாடுமாறு சொல்லலும், ஒட்டக் கூடத்தரும், புகழேந்தியும் முறையே,

"விக்கா வுக்கர வித்தா விப்போய்
விட்டார் நட்டார் சுட்நீர் புக்கா
ரிக்கா யத்தா சைப்பா டுற்றே
யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பி
ரக்கா டப்பேய் தொக்கா டச்சூ
ழப்பா டத்தீ வெப்பா டப்பூ
ணைக்கா டக்கா னத்தா டப்போ
நெய்த்தா னத்தா னைச்சேவி த்தே,"

"தற்கோ லிப்பூ சற்பா சத்தே
தட்டா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே
முட்டா மற்சே வித்தே நிற்பீர்
வற்றா நெட்டோ டைப்பா ரைச்சேன்
மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்றா ஞற்ற லைப்பா கிற்சேர்
நெய்த்தா னத்தா னைச்சே வித்தே,''

என்ற பாடல்களைப் பாடினார்கள். இனி யிவற்றி னேற்றத் தாழ்வுக ளொருபுற மிருப்ப, இச்செய்திக்கு மாறாக ஒட்டக்கூடத்தரைப் புகழேந்திப் புலவர் வென்றனரென்று,

"நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க நொடித்துமிக்க
கோலா கலனொட்டக் கூத்தனை யன் றுதற் கோலியென்று
மேலார் கவிசொல்லி நெய்த் தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே,''
யென்ற தொண்டை மண்டல சதகச் செய்யுள் முழங்கா நிற்கும்.

இன்னுமொரு காலத்தில் திருக்குறுங்குடி யென்னுந் தலத்தினிடத்தெழுந்தருளி யிருக்குந் திருமாலின் மீது வல்லோசை மிக்க கட்டளைக் கலித்துறை யாப்பிற் பாடுமாறு கேட்டலும், ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் முறையே,

திக்குளெட் டுக்கயந் துக்கமுற் றுத்திக் கிட்டலற
மைக்கடற் குட்சரந் தைக்கவிட் டோற்கிட மாமதுர
இக்குமுற் றிக்கணுச் சற்றுவிட் டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்குமொக் கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே,''

"எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுத் தம்பரவுஞ்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வரரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே"

யென்ற பாடல்களைப் பாடினர். ஒன்றற்கொன்று உயர்விழிவுகளின்றிச் சிறந்து விளங்குறூஉம் அச்செய்யுட்களை மன்னவன் கேட்டு மகிழ்பூத்து இருவர்க்கு மொப்பச் சன்மானஞ்செய்து பாராட்டி வந்தனன்.

இஃதிவ்வாறாக, ஒரு நாள் உறையூரின்கட் சோழராசன் ஒட்டக்கூத்தரொடும் புகழேந்தியாரொடும் அரசமறுகிற் கானடையாய் உலாவிச்செல்லா நிற்புழி, ஒரு வீட்டுத்தெருத் தெற்றியில் இருதாள்களையும் நீட்டிக்கொண்டு வீற்றிருந்த ஔவையார் சோழனைக் கண்டதும் ஒரு தாளை மடக்கிக் கொண்டனர். அவவருகிற் போதரும் புகழேந்திப் புலவரைப் பார்த்தவளவின் மற்றைத் தாளையும் மடக்கிக் கொண்டனர்.

அதன்பினர் அவர்களை யடுத்துப் போந்த ஒட்டக்கூத்தரைக் கண்டவுடனே அவரைக் கர்வபங்கஞ் செய்வான் கருதி யிருதாள் களையு மொருங்கே நீட்டினர். இதுகண்ட ஒட்டக்கூத்தர் வெட்கமும் வெகுளியுமுடையராய்த் தமிழ் மூதாட்டியாரை நோக்கி, 'எம்மை இன்னணம் அவமதித்தது என் கொலோ?' என்று வினவலும், அவர் மன்னன் நாட்டுத் தலைவனாதலின் அவற்கொருதாளையும், மன்னனிற் கற்றோன் சிறப்புடையனாதலிற் பாட்டுத் தலைவராய புகழேந்திப் புலவருக்கு இருதாளை யும் மடக்கினேம். நீயோ, புலமையோ னெனிலும் புல்லியோனாய் வீண் பெருமை பாராட்டுவோனாயினை யாதலின் இருதாளையும் நீட்டினேம்', என்று கூறி, 'மெய்யாகவே நீயும் புகழேந்திப் புலவர்க்கு இணையாவையேற் சோழனையும் அவனது நாட்டையும் சிறப்பித்து மதிப்பெயரா மொருசொல்லை யொரு பாடலி னீற்றடிக்கண் மும்முறை பெய்து பாடுதி; நின்னாற்றல் காண்குதும்,' என்றேவலும், ஒட்டக்கூத்தர்,

வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதேறிக்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டிப்பேதை பெரிய மதியு மிழந்தாளே,''

என்று, பிள்ளை தாமெனவும் பேதை ஔவையாரெனவும் தம்மறிவு கண்டு ஔவையார் அறிவிழந் தாளெனவும் ஔவையாரைக் குறிப்பினிகழ்ந்து பாடினர். அஃதுணர்ந்த ஔவைப்யார் ஒட்டக்கூத்தரை நோக்கி, "ஒட்டா! ஒரு மதிகெட்டாய்!" என்று கூறி நகையாடி, உடனே புகழேந்தியாரை நோக்கி ''யான் சொற்றங்கு நீர் பாடுமின்; எனலும், புகழேந்திப் புலவர்,

பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்

தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கர்க் [2] கமரா வதியளித்த
கோவே ராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

என்று ஒரு பாட்டு, மும்முறை பிறையெனுஞ் சொல்லை யிறுதி யடியிற் பெய்து, பாடினர்; இது கேட்டு ஔவையார் புகழேந்திப் புலவரைப் பெரிதுங்கொண் டாடினர். அன்று முதல் ஒட்டக்கூத்தர் தருக்கடங்கி யுறுதிகூடி யிருந்தனர் என்றுரைக்குப.

காலம்:-

இனிப் புகழேந்திப் புலவரிருந்த காலமின்னதென வரைந்து சுட்டுவாம். ஒரு சாரார் இவர் கம்பர் காலத்தின ராதலின் "எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழன்மேல்," என்ற கம்பராமாயணச் சிறப்புப்பாயிரச் செய்யுளிற் கூறி யாங்கு இவரது காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்துப் பதினான்கு வருடங்களின் முன்ன ரென்பதாமென்ப. மற்றொரு சாரார் கம்பர் தங் காலம் சாலிவாகன சகாத்தம் 807-ஆம் யாண்டென்பது உண்மை வழியான் நோக்குமிடத்து நிலைநில்லாது; யாங்ஙன மெனில் ஆங்கில மொழியின்கண் அச்சிட்டுப் போ தரும்[3] இந்திய புராதன கலைஞன் என்னும் மாதாந்த பத்திரிகையினிடத்துக் கி. பி. 1063-ஆம் யாண்டியனிறுதியிற் பட்டத்திற்குப் போந்த இராசேந்திர சோழ னிரண்டாவனென்ற குலோத்துங்க சோழன் முதலாவனும், கி. பி. 1127-ஆம் யாண்டு அரசுரிமை யெய்திய குலோத்துங்கசோழ னிரண்டாவது மென்ற ஈரரசர் கூறப்பட்டுளர்; அவர் தம்முட் குலோத்துங்க சோழன் முதலாவன்று காலமே. நமது கம்பர் தங் காலமுமேயா மென்பது பலர்க்கு மொப்ப முடிந்ததாம்; ஆகவே கம்பரது காலம் பதினோராம் மாற்றாண்டின் பிற்பகுதி யென்பது தானே போதரும்; இதனைத் தென்னிந்திய சிலாசாதன வாராய்ச்சிப் பத்திரிகையின் நான்காவது சம்புடத்தில் 205-ஆம் பக்கத்தின் கண்ணுங் காண்க வென்பாராயினார். இனிப் பிஷப் கால்ட்வெல்[4] துரை கூறுமாறு கம்பர் காலம் குலோத்துங்க சோழனிரண்டாவன் காலமெனிற் படுமிழுக்கென்னை யென்று கூறுவ ரின்னொரு சாரார், இவை யாவற்றிலும் நடுவட் கூறியோருடைய கூற்றே ஏற்புடைத் தாம் எனக் கொள்க. என்னை ? "எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழன் மேல்", என்பது இடையிற் சேர்க்கப்பட்ட சொருகு கவியேயா மென்பது, கம்பர் காலத் திருந்த வரசன் விசயாலய னென்பவனன்றிக் குலோத்துங்க னென்பதனான் விளங்கும்.

இப்பாடலிற் குறித்த காலத்துப் பட்டமெய்தியவன் விசயாலயனேயா மென்பது சிலாசாதன வாராய்ச்சியினாற் பெற்றாம். இனிக் கம்பர் காலம் கால்ட்வெல் துரை

வரையுமாறு கொள்ளத்தக்க தன்றென்பதுஞ் சிறிது தெரிப்பாம். கம்பரொட்டக் கூத்தரது காலங்களிற் சோழராசனது தலைநகராக உறந்தை தஞ்சைகளே கூறப்படுவனவாமன்றி அவற்றினின்றும் விலகி அரசனது வாசத்தானங் காஞ்சியாயிற்றென்பது கூறப்படாமையானும் குலோத்துங்கசோழ னிரண்டாவ னிருந்தரசாண்டது காஞ்சியே யாதலானும் பிறவாற்றனும் அது புரையுடைத்தென்பது. கம்பர் ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவர் ஆகிய இம்மூவரு மொரே காலத்தினராகவே புகழேந்திப் புலவரது காலம் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியே யாமென் பது தேற்றம்.

இனி யாம் மேற்கூறிப் போந்த புகழேந்தியாரது வரலாற்றுள் இவருக்கும் ஔவையாருக்குஞ் சில சம்பாஷணை நிகழ்ந்தனவாக வருதலின் ஔவையாரு மிவர் காலத்தினரேயோ வெனின்; அற்றன்று, ஔவையார் திருவள்ளுவரது உடன் பிறந்தாரா தலானும், ஔவையாருந் திருவள்ளுவருங் கடைச்சங்கமிருந்த காலத்திருந்தவராதலானும், கடைச்சங்கத்தார் காலம் புகழேந்திப் புலவர் காலத்திற்குப் பன்னூற்றாண்டுகட்கு முற்பட்டதாதலானும், இவர் காலத்திலிருந்த ஔவை பிரசித்தி பெற்ற அந்த ஔவையாரல்லள்; ஔவையென்பது முதிய தவப் பெண்ணிற்கும் பேராமாதலின் அத்தகைய தவமுதியோள் யாரோடாவினும் புகழேந்திப்புலவர் சம்பாஷித்திருக்கவேண்டு மென்க அற்றேல், ஔவையார் அதிகமான் நெடுமானஞ்சியென்னும் அரசனிடமிருந்து அமிழ்தமய மானதொரு நெல்லிக்கனியைப் பெற்றுண்டமைபற்றி நெடுங்காலஞ் சீவித்திருந்தனரெனப் புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, திருக்குறள் பரிமேலழகருரை முதலியன வெல்லாம் முழங்கா நிற்றலிற் கடைச்சங்கத்தார் காலத்து ஔவையாரும் புகழேந்தியார் காலத்து ஔவையாரும் ஒருவரேயெனக் கோடலியலாதோ வெனின்; நன்று கூறினாய்! மக்கட்கு விதித்த நூறு வயதினும் நெல்லிக்கனி யுண்டமையாற் சிறிது அதிகமாக வாழ்ந்திருந்தனரென்று கொள்ளல் கூடுமேயன்றிக் கி. பி. முதனூற்றாண்டிலிருந்த ஔவையார் கி. பி. பதினோரா நாற்றாண்டிறுதிகாறு மிருந்தனரென்று கூறப் புகுதல் பண்டிதர் குழுவிற் பழியுண்டழியு மென் றறிக. இன்னுமிதன் விவரம் விரிப்பிற் பெருகும்.

இவரது சமயம் சைவமென்றொரு சாரார் கூறா நிற்ப, மற்றொருசாரார் வைணவ மென்பர். இன்னொரு சாரார் இவர் அரனையும் மரியையு மொப்பு நினைக்கும் அத்துவைத சமயத்தினரெனக் கூறுவர். இவர் தமது நளவெண்பாவிற் கூறும் பாயிரத்துக் கடவுள் வாழ்த்துச்செய்யுட்களையும், காண்டாதோறும் முதற்கட் கூறும் காப்புச்செய்யுட்களையும், அவை தம்முள் திருமால் துதிகளையெல்லாம் முன்னர்ப் பெய்திருத்தலையும், சுயம்வர

காண்டத்து 47 ஆஞ் செய்யுளையும், கலிதொடர் காண்டத்து 33 ஆஞ் செய்யுளையும், திருநெய்த்தானத்துச் சிவபெருமானைப் பாடியபோது சிவபெருமானெனச் சுட்டாது 'நெய்த்தானத்தா' னெனப் பொதுப்படக் கூறியும், குறுங்குடித் திருமாலைப் பாடியபோது விசேடப் பற்றுக்காட்டு மாற்றலுள்ள சொற்களை யுபயோகித்துப் பாடியிருத்தலையும், தொண்டை மண்டல சதகமுடையார் இவரைக் கூறுமிடத்து, "மாலார் களந்தைப் புகழேந்தியும்" எனக் கூறியிருத்தலையு முற்றுநோக்குமிடத்து இவர் சிவநிந்தை செய்யாத வைணவரெனலேற் புடைத்தாமென்பது சிவநிந்தை செய்யாத வைணவரிலிராலோ வெனின் அற்றன்று. சிவநிந்தை செய்யாத வைணவர் சிலரை யிக்காலத்தும் யாம் கண்கூடாகக் காண்கின்றாமாக மதவாத மிகுந்திலா வக்காலத்திற் காண்டற்கென்னையென விடுக்க. அன் றியுமவர் அத்தகையராயிருப்பிற் சிவத்துதி செய்யவே மாட்டாரென்க.

இஃதிவ்வண்ணமிருப்பச் சிலர், நம் புகழேந்திப் புலவர் வைணவருள் வைணவராயிருந்தமை பற்றிச் சைவனாய பாண்டியன் அவரைத் தன் மகட்குத் தானமளித்த சீதன வரிசைகளுடன் அனுப்பிவிட்டனன்; அல்லாக்கால் அத்தகைய சிறந்த பாவலரை விட்டுப் பிரிதலை விரும்பமாட்டா னென்றும், ஒட்டக்கூத்தப் புலவருஞ் சோழராசனுஞ் சைவர்களாயினமையாலும், அவ் வொட்டக்கூத்தரோடிவர் முரணினமையானும், இவர் காவற் சிறையகத்திருந்தனரென்றும், இவரது வைணவ வியல்பே யிவரைச் சோழராசனிடத்தினின்றும் பிரித்துச் சந்திரன் சுவர்க்கியினிடத் துய்த்ததென்றும், அன்றே விவரைச் சோழனுங் கைவிட்டிருக்கமாட்டானென்றும், தம்மைச் சில காலம் ஆதரித்த பாண்டிய சோழ ராசர்களை மகிழ்விக்குமாறுந் தம்மோடதுகாறும் பகைத்திறம் பூண்டிருந்த ஒட்டக்கூத்தர் சமயவேறுபட்டா லேதேனுங் குறை கூறாதிருக்குமாறும் உன்னியே தமது நளவெண்பாவிற் சிவத்துதிகளை யிடையே செறித்தனரென்றுங் கூறாநிற்பர். இதனானே நம் புகழேந்திப் புலவர் பட்ட பாட்டிற்கெல்லாம் காரணம் அவரது சமய வேறுபாடே யென்பது போ தருமாதலின் அது பொருந்து மா றன்றென்ப துணர்க.

இனி யிவர் பட்ட பாட்டிற்குக் காரண மிவரது குணனேயென்க. இலர் சிறிது முன் வெகுளி யுடையரே யன்றிப் பிறரியல் பறிந்து அவ்வவற்றிற்குத் தகவொழுகும் திறமில்லாதவருமா யிருந்தார். இவ்விரண்டுமே யிவர்க்கு ஒட்டக் கூத்தரது பகைமையினையும், அதன் மூலமாகச் சிறைச்சாலை வாழ்க்கையினையும் விளைத்தன. இவைபற்றி யன்றே அவர் முரணூர்க் காவலன்பாற் சென் றதூஉ மென்க. தமிழிலக்கண விலக்கியக் கடற் கரை கண்ட புலவரொருவர் தாம் ஒரு நாட்டுச் சமத்தான வித்துவானைப் பகைத்துக் கோட லாகா தென்ற சிறு விஷயத்தை யறிந்து கொள்ளாமற் போனது மிகவும் பரிதபிக்கத்தக்க விஷயமே.

[1] பின்வந்த ஆராய்ச்சியாளர் இவனைக் குலோத்துங்க சோழன் இரண்டாவன். என்ப,
[2] கொங்கைக்" என்பது உம் பாடம்
[3] The Indian Antiquary, Pages 296-299, October 1894
[4] Bishop Caldwell.

நூல்: தலைப்பு தமிழ்ப்புலவர் சரித்திரம்
ஆசிரியர்: பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி)

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின்
நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை *(Rs.)*
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	*200*
	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்	
2.	உன்னோடு உரையாடுதல்	*100*
3.	காதல் மொழி	*80*
4.	பார்வையில் பூத்த நிலா	*100*
5.	தேனடையும் வரலாறு	*100*
6.	நுண்கலை மருத்துவன்	*200*
7.	தொடரும் புழுதிக்கால்கள்	*100*
	முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்	
1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	*200*
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	*200*
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	*200*
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	*200*
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	*200*
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	*200*
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	*200*
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	*200*
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – *I*	*200*
10.	நீங்க நல்லா இருக்கணும் *[எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]*	*200*
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். *[எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]*	*200*
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	*200*
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	*200*
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	*200*
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	*200*
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	*200*
17.	*Unique Fandom of MGR*	*200*
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	*200*
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – *I*	*200*
20.	எங்க வீட்டுப்பிள்ளை	*200*
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	*200*

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	*தலைமை பொறுப்பேற்கலாம்*	*120*
2.	*இணையத் தமிழ்*	*150*
3.	*ஊடகச் சட்டங்கள்*	*250*
4.	*ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்*	*200*
5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*100*
6.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	*50*

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	*பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்*	*300*
11	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*300*

சமய விளக்க நூல்கள்

1	*சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)*	*300*
2	*விரதங்களின் விளக்கம்*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*பயணக் கவிதைகள்*	*100*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக் கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
7.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
8.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)*	*300*
9.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*
10.	*Translating Tamil poetry*	*300*

சிறு கதை நூல்

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*120*
2.	*ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)*	*100*
3.	*மகிழ் பேரின்பம் (poems)*	*200*
4.	*பொன் வேலி (poems) நூல்கள்*	*200*
5.	*திருக்குறள் கதைகள் - பகை மாட்சி*	*100*

தே.ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	*300*
2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	*300*
3	*One line guidelines in Tamil*	*200*

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	*200*
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	*200*

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	*200*

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	*300*

ஜோதிட நூல்கள்

1.	மேஷ ராசி சூட்சும ரகசியம்
2	ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்
3	நவரத்தினமும் உபரத்தினமும்
4	மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

‘நீ’ என இறைவனை விளித்துப் பாடிய பக்திப் பாடல்கள்

மு. பழநிச்சாமி

நூலக அதிகாரி– பணி ஓய்வு
நாகமலை, மதுரை –19

ஊழி முதல்வனாய், ஆதியாய், அமலனாய், நிற்கும் இறைவனை, பக்தியில் அழுந்தி ஆழங்காற்பட்ட ஞானியர், தாம் வேறு இறைவன் வேறு என்று வேறு பிரித்துப் பார்க்காது, நீயும் நானும் ஒன்று என்ற ‘இரண்டற்ற நிலையில்’’, மிக நெருக்கமாக நின்று, முன்னிலை ஒருமையாக இறைவனை ‘நீ’ என விளித்து, பாட்டாய்ப் பாடி, பேசி இன்புற்றுள்ளனர். இப்பாடல்களின் ஊடாக அவர்களின் மட்டற்ற இறை உணர்வுகள், மெல்லிய ஒளிக்கீற்றாய்ப் படிந்து வந்து மின்னிச்சுடர்விட்டு மேலோங்கித் திகழ்வதைப் பார்க்கலாம்.

அணுவாய், அண்டமாய், அகண்டமாய், கடலின் வளங்களாய், கதிராய், மதியாய், சோதிச்சுடர்ப் பிழம்பாய், ஏழுலகாய், தாயாய், தந்தையாய், மகவாய், உற்ற சுற்றமாய், குருவாய், வழித் துணையாய், மனத்திருந்த கருத்து முடிப்போனாய், உயிராய், உயிருக்குத் துணையாய், அனைத்து உயிர்களின் பிறப்பாய், இறப்பாய், உறவாய், பகையாய், அரியையாய், எளியையாய், கன்னலாய், கறந்த பாலாய், வித்தாய், விளைவாய், முத்திக்கான முதலாய், கற்ற அறிவாய், இனிக் கற்கும் உணர்வாய், எண்ணாய், எழுத்தாய், இசைந்த பண்ணாய், ஓசை ஒலியுமாய், சொல்லாய், பொருளாய், சொல்லின் தொடர்ச்சியாய், சொல்லினுள் வாய்மையாய், நாவில் நடுவுரையாய், மனத்திருந்த கருத்து முடிப் போனாய், கண்ணாய், மணியாய், கண்ணுக்குள் ஆடும் பாவையாய், காணும் காட்சியாய், காணார் காணாக் கள்வனாய், கண்ணுக்கு இனியனாய், உறக்கமாய், உணர்வாய், உட்கலந்த சோதியாய், அடியார்தம் சிந்தை மேவியவனாய், என இவ்வாறெல்லாம் உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடியுள்ளனர். பார்ப்போம் அவற்றை.

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ;

சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு,
அவையும் நீயே, அடு போர் அண்ணால்! . . . .
அவைஅவை கொள்ளும் கருவியும் நீயே;
முந்து யாம் கூறிய ஐந்தனுள்ளும்,
ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே;
இரண்டின் உணரும் வளியும் நீயே;
மூன்றின் உணரும் தீயும் நீயே; . .
நான்கின் உணரும் நீரும் நீயே; (20)

அறனும், ஆர்வலர்க்கு அளியும், நீ;
திறன் இலோர்த் திருத்திய தீது தீர் சிறப்பின்
மறனும், மாற்றலர்க்கு அணங்கும், நீ;
அம் கண் ஏர் வானத்து அணி நிலாத் திகழ்தரும்
திங்களும், தெறு கதிர்க் கனலியும், நீ;
(பரிபாடல் வரி 63 -68)

ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை யொருவனு மடங்கலு நீ
நலமுழு தளைஇய புகரறு காட்சிப்
புலமும் பூவனு நாற்றமு நீ
வலனுயர் எழிலி மாக விசும்பும்
நிலனு நீடிய இமயமு நீ.
(பரிபாடல் வரி 41 -51)

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரு மொண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே ***(நாவுக்கரசர் ஆறாம் திருமுறைமுறை)***

ஓசை ஒலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே

பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (1)

நோக்கரிய திருமேனி யுடையாய் நீயே
நோவாமே நோக்கருள வல்லாய் நீயே
காப்பரிய ஐம்புலனுங் காத்தாய் நீயே
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தாய் நீயே
ஆர்ப்பரிய மாநாக மார்த்தாய் நீயே
அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (2)

கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே
கடல்வரைவான் ஆகாய மானாய் நீயே
தனத்தகத்துத் தலைகலனாக் கொண்டாய் நீயே
சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய் நீயே
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
மலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
சினத்திருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (3)

வானுற்ற மாமலைக ளானாய் நீயே
வடகயிலை மன்னி யிருந்தாய் நீயே
ஊனுற்ற ஒளிமழுவாட் படையாய் நீயே
ஒளிமதியோ டரவுபுனல் வைத்தாய் நீயே
ஆனுற்ற ஐந்து மமர்ந்தாய் நீயே
அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொன்மடவாள் பங்கன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (4)

பெண்ணாண் பிறப்பிலியாய் நின்றாய் நீயே
பெரியார்கட் கெல்லாம் பெரியாய் நீயே
உண்ணா வருநஞ்ச முண்டாய் நீயே
ஊழி முதல்வனாய் நின்றாய் நீயே
கண்ணா யுலகெலாங் காத்தாய் நீயே
கழற்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்ணார் மழுவாட் படையாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (5)

உற்றிருந்த உணர்வெலா மானாய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (6)

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (7)

ஆவினில் ஐந்து மமர்ந்தாய் நீயே
அளவில் பெருமை யுடையாய் நீயே
பூவினில் நாற்றமாய் நின்றாய் நீயே
போர்க்கோலங் கொண்டெயி லெய்தாய் நீயே
நாவில் நடுவுரையாய் நின்றாய் நீயே
நண்ணி யடியென்மேல் வைத்தாய் நீயே
தேவ ரறியாத தேவன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (8)

எண்டிசைக்கும் ஒண்சுடராய் நின்றாய் நீயே
ஏகம்பமேய இறைவன் நீயே
வண்டிசைக்கும் நறுங்கொன்றைத் தாராய் நீயே
வாரா வுலகருள வல்லாய் நீயே
தொண்டிசைத்துன் னடிபரவ நின்றாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (9)

விண்டார் புரமூன்று மெய்தாய் நீயே
விண்ணவர்க்கும் மேலாகி நின்றாய் நீயே

கண்டாரைக் கொல்லும்நஞ் சுண்டாய் நீயே
காலங்கள் ஊழியாய் நின்றாய் நீயே
தொண்டாய் அடியேனை ஆண்டாய் நீயே
தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்டோ ள்விட் டெரியாட லுகந்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (10)

ஆரு மறியா இடத்தாய் நீயே
ஆகாயந் தேரூர வல்லாய் நீயே
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
பெரிய முடிபத் திறுத்தாய் நீயே
ஊரும் புரமூன்று மட்டாய் நீயே
ஒண்டா மரையானும் மாலுங் கூடித்
தேரும் அடியென்மேல் வைத்தாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. (6.3.8.11)

வகை எலாம் உடையாயும் நீயே என்றும், வான் கயிலை மேவினாய் நீயே என்றும்,
மிகை எலாம் மிக்காயும் நீயே என்றும், வெண்காடு மேவினாய் நீயே என்றும்,
பகை எலாம் தீர்த்து ஆண்டாய் நீயே என்றும், பாசூர் அமர்ந்தாயும் நீயே என்றும்,
திகை எலாம் தொழச் செல்வாய் நீயே என்றும், நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (1)

ஆர்த்த எனக்கு அன்பன் நீயே என்றும், ஆதிக்கயிலாயன் நீயே என்றும்,
கூர்த்த நடம் ஆடி நீயே என்றும், கோடிகா மேய குழகா! என்றும்,
பார்த்தற்கு அருள் செய்தாய் நீயே என்றும், பழையனூர் மேவிய பண்பா! என்றும்,
தீர்த்தன் சிவலோகன் நீயே என்றும், நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு க் நீயே என்றும், நடம் ஆடி நள்ளாறன் நீயே என்றும்,
பந்திப்ப(அ)ரியாயும் நீயே என்றும், பைஞ்ஞீலி மேவினாய் நீயே என்றும்,
சித்திப்ப(அ)ரியாயும் நீயே என்றும், நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (2)

அல் ஆய்ப் பகல் ஆனாய் நீயே என்றும், ஆதிக் கயிலாயன் நீயே என்றும்,
கல்லால் அமர்ந்தாயும் நீயே என்றும், காளத்திக் கற்பகமும் நீயே என்றும்,
சொல் ஆய்ப் பொருள் ஆனாய் நீயே என்றும், சோற்றுத்துறை உறைவாய் நீயே என்றும்,

செல் வாய்த் திரு ஆனாய் நீயே என்றும், நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (3)

மின் நேர் இடைபங்கன் நீயே என்றும், வெண் கயிலை மேவினாய் நீயே என்றும்,
பொன் நேர் சடை முடியாய் நீயே என்றும், பூதகண நாதன் நீயே என்றும்,
என் நா இரதத்தாய் நீயே என்றும், ஏகம்பத்து என் ஈசன் நீயே என்றும்,
தென்னூர்ப்பதி உளாய் நீயே என்றும், நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (4)

முந்தி இருந்தாயும் நீயே என்றும், முன் கயிலை மேவினாய் நீயே என்றும்,
நந்திக்கு அருள்செய்தாய் நீயே என்றும், நடம் ஆடி நள்ளாறன் நீயே என்றும்,
பந்திப்ப(அ)ரியாயும் நீயே என்றும், பைஞ்ஞீலி மேவினாய் நீயே என்றும்,
சித்திப் யாயும் நீயே யென்றும் நின்ற நெய்த்தானாவென் நெஞ்சு ளாயே. (5)

தக்கார் அடியார்க்கு நீயே என்றும், தலை ஆர் கயிலாயன் நீயே என்றும்,
அக்கு ஆரம் பூண்டாயும் நீயே என்றும், ஆக்கூரில்- தான் தோன்றி நீயே என்றும்,
புக்கு ஆய ஏழ் உலகும் நீயே என்றும், புள்ளிருக்கு வேளூராய் நீயே என்றும்,
தெக்கு ஆரும் மாகோணத்தானே என்றும், நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (6)

புகழும் பெருமையாய் நீயே என்றும், பூங் கயிலை மேவினாய் நீயே என்றும்,
இகழும் தலை ஏந்தி நீயே என்றும், இராமேச்சுரத்து இன்பன் நீயே என்றும்,
அகழும் மதில் உடையாய் நீயே என்றும், ஆலவாய் மேவினாய் நீயே என்றும்,
திகழும் மதிசூடி நீயே என்றும், நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (7)

வானவர்க்கு மூத்து இளையாய் நீயே என்றும்,
வானக் கவ என் நெஞ்சு உளாயே யிலாயன் நீயே என்றும்,
கானம் நடம் ஆடி நீயே என்றும், கடவூரில் வீரட்டன் நீயே என்றும்,
ஊன் ஆர் முடி அறுத்தாய் நீயே என்றும், ஒற்றியூர் ஆரூராய் நீயே என்றும்,
தேன் ஆய் அமுது ஆனாய் நீயே என்றும், நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (8)

தந்தை தாய் இல்லாதாய் நீயே என்றும், தலை
ஆர் கயிலாயன் நீயே என்றும்,
எம் தாய் எம்பிரான் ஆனாய் நீயே என்றும்,
ஏகம்பத்து என் ஈசன் நீயே என்றும்,
முந்திய முக்கணாய் நீயே என்றும், மூவலூர்
மேவினாய் நீயே என்றும்,
சிந்தையாய், தேனூராய் நீயே என்றும், நின்ற
நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (9)

மறித்தான் வலி செற்றாய் நீயே என்றும்; வான் கயிலை மேவினாய் நீயே என்றும்;
வெறுத்தார் பிறப்பு அறுப்பாய் நீயே என்றும்; வீழிமிழலையாய் நீயே என்றும்;
அறத்தாய், அமுது ஈந்தாய் நீயே என்றும்; யாவர்க்கும் தாங்க ஒணா நஞ்சம் உண்டு,
பொறுத்தாய், புலன் ஐந்தும், நீயே என்றும்; நின்ற நெய்த்தானா! என் நெஞ்சு உளாயே. (10)

குற்றம் நீ குணங்கள் நீ கூடல் ஆலவாயிலாய்
சுற்றம் நீ பிரானும் நீ தொடர்ந்திலங்கு சோதி நீ
கற்ற நூல் கருத்தும் நீ அருத்தம் இன்பம் என்று இவை
முற்றும் நீ புகந்து முன் உரைப்பது என் முகம்மனே.
சம்பந்தர் திருமுறை (3. 052.3)

முதிரும் நீர்ச் சடைமுடி முதல்வ நீ முழங்கழல்
அதிர வீசி ஆடுவாய் அழகன் நீ புயங்கன் நீ
மதுரன் நீ மணாளன் நீ மதுரை ஆலவாயிலாய்
சதுரன் நீ சதுர்முகன் கபாலம் ஏந்து சம்புவே.
(சம்பந்தர் 3.052.4)

தாயும் நீயே! தந்தை நீயே! சங்கரனே! அடியேன்
ஆயும் நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது, உள்ளம்;
ஆயம் ஆய காயம் தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்;
மாயமே என்று அஞ்சுகின்றேன்-வலிவலம் மேயவனே!
(சம்பந்தர்)

ஆதிப் பிரமனும் நீ!
ஆதிப் பரமனும் நீ!
ஆதி எனும் பொருளுக்கு அப்பால்

உண்டாகிலும் நீ!
''சோதிச் சுடர்ப் பிழம்பு நீ!
என்று சொல்லுகின்ற
வேதம் முறைசெய்தால், வெள்காரோ
வேறு உள்ளார்?
(இராமாயணம்-3685)

வேண்டதக்கது அறிவோய் நீ ! வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ! வேண்டி என்னைப் பணி கொண்டாய்!
வேண்டி நீ யாது அருள்செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில், அதுவும் உந்தன் விருப்பன்றே!
(திருவாசகம் குழைத்த பத்து. 6)

கூறும் நாவே முதலாகக்
கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ
தீமை நன்மை முழுதும்நீ
(திருவாசகம் குழைத்த பத்து -5)

சொல்லினால் தொடர்ச்சி நீ, சொலப்படும் பொருளும் நீ
சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ
சொல்லினால் படைக்க நீ படைக்க வந்து தோன்றினாய்
சொல்லினால் சுருங்கநின் குணங்கள் சொல்ல வல்லரே?
(நாலாயிர திவ்ய பிரபந்தம் திருச்சந்தவிருத்தம் ,11)

நானால் அமர்முயன்ற வல்லரக்கன், இன்னுயிரை,
வாழா வகைவலிதல் நின்வலியே,-ஆழாத
பாரும்நீ வானும்நீ காலும்நீ தீயும்நீ,
நீரும்நீ யாய்நின்ற நீ.
(நம்மாழ்வார் திருவாசிரியம் -11)

இனி அறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் இனி அறிந்தேன் எம் பெருமான் உன்னை இனி அறிந்தேன் காரணன் நீ கற்றவை நீ கற்பவை நீ நல் கிரிசை நாரணன் நீ நன்கு அறிந்தேன் நான்''
(திருமழிசை ஆழ்வார். நான்முகன் திருவந்ததி-2)

ஊனில்மேயஆவிநீ உறக்கமோடுணர்ச்சிநீ
ஆனில்மேயவைந்தும்நீ அவற்றுள்நின்றதூய்மைநீ

வானினோடுமண்ணும்நீ வளங்கடற்பயனும்நீ
யானும்நீஅதன்றி எம்பிரானும்நீஇராமனே!
(திருமழிசைப் பிரான் நான்முகன் திருவந்தாதி- 96)

இறந்ததும் நீயே, எதிர்ந்ததும் நீயே,
நிகழ்வதோ நீ, இன்னே ஆனால்
சிறந்த நின் தன்மை அது, இது, உது என்ற
அறிவு ஒன்றும் சங்கிப்பன் வினையேன்,
கறந்தபால் நெய்யே, நெய்யின் இன் சுவையே,
கடலினுள் அமுதமே, அமுதில்
பிறந்த இன் சுவையே, சுவையது பயனே,
பின்னை தோள்
மணந்த பேராயா.
(நம்மாழ்வார்)

38) எங்குவந் துறுகோ என்னையாள் வானே.
ஏழுல கங்களும் நீயே,
அங்கவர்க் கமைத்த தெய்வமும் நீயே
அவற்றவை கருமமும் நீயே,
பொங்கிய புறம்பால் பொருளுள வேலும்
அவையுமோ நீயின்னே யானால்
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே
வான்புலம் இறந்ததும் நீயே.
(திருவாய்மொழி 8-ஆம் பத்து பாடல். 6)

எங்கு வந்துறுகோ !என்னை யாள்வானே ! ஏழு லகங்களும் நீயே
அங்கவர்க்கமைத்த தெய்வமும் நீயே அவற்றவை கருமமும் நீயே
பொங்கிய புறம் பாற் பொருளுளவேலும் அவையுமோ நீ யின்னே யானால்
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே வான் புலன் இறந்ததும் நீயே–
(திருவாய்மொழி 8-1-6)

ஆதிப் பிரமனும் நீ!
ஆதிப் பரமனும் நீ!
ஆதி எனும் பொருளுக்கு அப்பால்
உண்டாகிலும் நீ!
“சோதிச் சுடர்ப் பிழம்பு நீ!
என்று சொல்லுகின்ற
வேதம் முறைசெய்தால், வெள்காரோ

வேறு உள்ளார்?

(இராமாயணம் கவந்தப்படலம்)

ஏவு கூர் வாளியால்
எய்து, நாய் அடியனேன்
ஆவி போம் வேலைவாய்,
அறிவு தந்து அருளினாய்;
மூவர் நீ! முதல்வன் நீ!
முற்றும் நீ! மற்றும் நீ!
பாவம் நீ! தருமம் நீ!
பகையும் நீ! உறவும் நீ!

(இராமாயணம் வாலிவதைப் படலம்)

வையம் நீ! வானும் நீ!
மற்றும் நீ! மலரின்மேல்
ஐயன் நீ! ஆழிமேல் ஆழி
வாழ் கையன் நீ!
செய்ய தீ அனைய அத்
தேவும் நீ! நாயினேன்,
உய்ய வந்து உதவினாய்,
உலகம் முந்து உதவினாய்!

(இராமாயணம் மராரப்படலம்)

தாயோ நீயே; தந்தையு நீயே; தவ நீயே;
சேயோ நீயே; தம்பியு நீயே; திரு நீயே;
போயோ நின்றாயெ ன்னை இகழ்ந்தாய் புகழ் பாராய் நீயோ யானோ
நின்னினு நெஞ்சம் வலியனே. ***(இராமாயணம் பிரமாத்திரபாபடலம்)***

அன்னை நீ அத்தன் நீயே அல்லவை எல்லாம் நீயே பின்னும் நீ முன்னும்
நீயே பேறுநீ இகழ்வும் நீயே என்னை நீ இகழ்ந்ததென்றது எங்கனே
ஈசன் ஆய
உன்னை நீ உணராய் நாயேன் எங்ஙனம் உணர்வேன் உன்னை.

(இராமாயணம் வருணனை வழி வேண்டு படலம்)

கண்ணினும் உளை நீ; தையல் கருத்தினும் உளை நீ; வாயின்
எண்ணிலும் உளை நீ; கொங்கை இணைக் குவைத் தன்னின் ஒவ்வா
தண்ணல் வெங்காமனெய்தி அலரம்பு தொளைத்த ஆறாப் புண்ணினும்
உளை நீ; உன்னைப் பிரிந்தமை பொருந்திற்றாமோ.

(இராமாயணம் அனுமன் இராமனிடம் உரைத்தது)

அணிதவத் தவர்களுக்
கதிகவித் தகனும்நீ
தணிமனத் தருளுடைத்
தவநெறிக் கமிர்தம்நீ
அமணரைக் கழுநுதிக்
கணைவுறுத் தவனும்நீ
தமிழ்நலத் தொகையினில்
தகுசுவைப் பவனும்நீ

மறையவர்க் கொருவன் நீ
மருவலர்க் குருமு நீ
நிறைகுணத் தொருவன் நீ
நிகரில்உத் தமனும் நீ

அரியை நீ. எளியை நீ.
அறவன் நீ. துறவன் நீ.
பெரியை நீ உரியை நீ.
பிள்ளை நீ. வள்ளல் நீ.
(ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம். நம்பியாண்டார் நம்பி.) 7

ஆதி வேதம் பயந்தோய்நீ யலர்பெய்ம் மாரி யமைந்தோய்நீ
நீதி நெறியை யுணர்ந்தோய்நீ நிகரில் காட்சிக் கிறையோய்நீ
நாத னென்னப் படுவோய்நீ நவைசெய் பிறவிக் கடலகத்துன்
பாத கமலந் தொழுவேங்கன் பசையாப் பவிழப் பணியாயே. (1242)

50) இன்னாப் பிறவி யிகந்தோய்நீ
யிணையி லின்ப முடையோய்நீ
மன்னா வுலக மறுத்தோய்நீ
வரம்பில் காட்சிக் கிறையோய்நீ - (1243)

51) உலக மூன்று முடையோய்நீ
யொண்பொ னிஞ்சி யெயிலோய்நீ
திலக மாய திறலோய்நீ
தேவரேத்தப் படுவோய்நீ
யலகை யில்லாக் குணக்கடலே
யாரு மறியப் படாயாதி
கொலையி லாழி வலனுயர்த்த

குளிர்முக் குடையி னிழலோய்நீ
பொன்னா ரிஞ்சிப் புகழ்வேந்தே
பொறியின் வேட்கைக் கடலழுந்தி
யொன்னா வினையி னுழல்வேங்க
ளுயப்போம் வண்ண முரையாயே.
{சீவக சிந்தாமணி -1244(1242,1243,1244) அருகன் துதி)}

அருளாழி பயந்தோய் நீ; அறவாழி நயந்தோய் நீ; மருளாழி துரந்தோய் நீ ;
மறையாழி புரிந்தோய் நீ; மாதவரின் மாதவன் நீ;
வானவருள் வானவன் நீ; போதனருட் போதனன் நீ; புண்ணியருள் புண்ணியன் நீ ;
ஆதிநீ; அமலன்நீ; அயனும்நீ; அரியும்நீ ;
சோதிநீ; நாதன்நீ; துறைவன்நீ; இறைவன் நீ; அருளும்நீ; பொருளும்நீ;
அறவன்நீ; அனகன் நீ;
தெருளும்நீ; திருவும்நீ; செறிவு நீ; செம்மல் நீ.
(வீரசோழியம் புத்தர் துதி)

அனைத்துலகிற் பிறப்பும் நீ
அனைத்துலகில் இறப்பும் நீ
அனைத்துலகிற் துன்பமும் நீ
அனைத்துலகில் இன்பமும் நீ
வானோர்க்குத் தாதையும் நீ
வந்தோர்க்குத் தந்தையும் நீ
ஏனோர்க்குத் தலைவனும் நீ
எவ்வுயிர்க்கும் இறைவனும் நீ
ஊழிநீ, உலகு நீ உருவுநீ அருவு நீ
ஆழிநீ, அமுதம் நீ அறமுநீ மறமு நீ ***(நந்திக் கலம்பகம் -5)***

எந்தையும் நீயே தாயும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனஞ் செய்தவன் நீயே
சத்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே புராந்தகன் நீயே
பத்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேவனும் நீயே ***(விநாயகர் அகவல் நக்கீரர்)***

அண்டம் நீ அகண்டம் நீ ஆதிமூல மானோன் நீ
கண்டம் நீ கருத்தும் நீ காவியங்கள் ஆனோன் நீ
புண்டரீக மன்றுளே புனருகின்ற புண்ணியர்
கொண்ட கோலமான நேர்மை கூர்மை என்ன கூர்மையே.
(சிவவாக்கியர்- 61)

தந்தையாய் தருமம் நீ ;சகல தேவதையும் நீ ;
சிந்து நீ; தெளிவும் நீ சித்தி முத்தி தானும் நீ;
விந்து நீ; விளைவு நீ; மேலதாய் வேதம் நீ;
எந்தை நீ; இறைவன் நீ என்னை ஆண்ட ஈசனே
(சிவவாக்கியர் - 415

மண்ணும் நீ, அவ் விண்ணும் நீ, மறிகடல்கள் ஏழும் நீ
எண்ணும் நீ, எழுத்தும் நீ, இசைந்த பண் எழுத்தும் நீ,
கண்ணும் நீ, அண்டம் நீ அகண்டம் நீ ஆதிமூல மானோன் நீ
கண்டம் நீ கருத்தும் நீ காவியங்கள் ஆனோன் நீ
புண்டரீக மன்றுளே புனருகின்ற புண்ணியர்
கொண்ட கோலமான நேர்மை கூர்மை என்ன கூர்மையே.
நீ, கண்ணுள் ஆடும் பாவை நீ,
நண்ணும் நீர்மை நின்றபாதம் நண்ணுமாறு அருளிடாய்.
(சிவவாக்கியர் - 8)

அறத்திறங்களுக்கும் நீ அகண்டம் என்திசைக்கும் நீ
திறதிறங்களுக்கும் நீ தேடுவார்கள் சிந்தை நீ
உறக்கம் நீ உணர்வு நீ உட்கலந்த சோதி நீ
மறக்கொணாத நின் கழல் மறப்பினும் குடிகொளே
(சிவவாக்கியர்- 61)

சத்தி நீ; தயவு நீ; தயங்கு சங்கின் ஓசை நீ ;
சித்தி நீ; சிவனும் நீ; சிவாயமாம் எழுத்து நீ;
முத்தி நீ; முதலும் நீ; மூவரான தேவர் நீ;
அத்திபூரம் உம்முளே அறிந்துணர்ந்து கொள்ளுமே
(சிவவாக்கியர்- 247)

60) ஆதார ஆதேயம் முழுதும் நீ யாதலால் அகிலமீதெ ன்னை ஆட்டி
ஆடல் கண்டவனு நீ ஆடுகின்றவனு நீ அருளு நீ மௌன ஞான
தாதாவு நீ பெற்ற தாய் தந்தை தமரு நீ யாவுநீ காண்
(தாயுமானவர் சச்சிதானந்த சிவம் -10)

61) பத்திநீ பத்திக் கான பலனுநீ பலவாச் சொல்லுஞ்
சித்திநீ சித்தர் சித்தித் திறமுநீ திறமார் மோன
முத்திநீ முத்திக் கான முதலுநீ முதன்மை யான
புத்திநீ எனக்கொன் றுண்டோ பூரணா னந்த வாழ்வே.
(தாயுமானவர் கற்புறு சிந்தை - 6)

கண்டார் கண்ட காட்சியும் நீ
காணார் காணாக் கள்வனும் நீ
பண்டார் உயிர் நீ யாக்கையும் நீ
பலவாம் சமயப் பகுதியும் நீ
எண்டோள் முக்கண் செம்மேனி
எந்தாய் நினக்கே எவ்வாறு
தொண்டாய்ப் பணிவர் அவர்பணி நீ
சூட்டிக்கொள்வது எவ்வாறே?
(தாயுமானவர் சொல்லற்கரிய 9)

கொழுந்து திகழ்வெண் பிறைச்சடிலக்கோவே மன்றிற் கூத்தாடற்
கெழுந்த சுடரே இமயவரை
என்தாய் கண்ணுக் கினியானே
தொழும்தெய் வமும்நீ குருவும்நீ துணைநீ தந்தை தாயும்நீ
அழுந்தும் பவம்நீ நன்மையும்நீ
ஆவி யாக்கை நீதானே. 5.

தந்தை தாயும் நீ;என் உயிர்த் துணையும் நீ; சஞ்சலம் அது தீர்க்க
வந்த தேசிக வடிவு நீ; உனை அலால் மற்று ஒரு துணை காணேன்;
அந்தம் ஆதியும் அளப்பரும் சோதியே! ஆதியே! அடியார் தம்
சிந்தை மேவிய தாயுமானவன் எனும் சிரகிரிப் பெருமானே!
(தாயுமானவர் ஆசை எனும்)

பத்திநீ பத்திக் கான பலனுநீ பலவாச் சொல்லுஞ்
சித்திநீ சித்தர் சித்தித் திறமுநீ திறமார் மோன
முத்திநீ முத்திக் கான முதலுநீ முதன்மை யான
புத்திநீ எனக்கொன் றுண்டோ பூரணா னந்த வாழ்வே.
(தாயுமானவர் கற்புறு சிந்தை 6.)

என்னுயிர்நீ என்னுயிர்க்கோர் உயிரும் நீ என்
இன்னுயிர்க்குத் துணைவனீ என்னை ஈன்ற

அன்னைநீ என்னுடைய அப்ப னீஎன்
அரும்பொருள்நீ என்னிதயத் தன்பு நீஎன்
நன்னெறிநீ எனக்குரிய உறவு நீஎன்
நற்குருநீ எனைக்கலந்த நட்பு நீஎன்
தன்னுடைய வாழ்வுநீ என்னைக் காக்குந்
தலைவன்நீ கண்மூன்று தழைத்த தேவே.
(வள்ளலார் மகாதேவ மாலை - 69)

தேசனும் நீ,சுற்றமும் நீ, நேர் நின் றளித்து வரும்
ஈசனும் நீ, ஈன்றாளும் எந்தையும் நீ, என்றேநின் தேசுறுசீர்
ஐந்தெழுத்தும் செப்புகின்ற நாயேனை
ஆசகலும் வண்ணம் அருள் புரிந்தால் ஆகாதோ இராமலிங்க அடிகள்
(திருவருட்பா -25 73)

முத்தொழிலின் வினைமுதல்வன் நீ; மூவர்க்கு முழுமுதல் நீ;
எத்தொழிலு மிறந்தோய் நீ; இறவாத தொழிலினை நீ;
இருவிசும்பின் மேயாய் நீ; எழின்மலரின் மிசையோய்நீ;
அரவணையிற் றுயின்றோய் நீ; ஆலின்கீ ழமர்ந்தோய் நீ.

தந்தை நீ ;தாயு நீ; தமரு நீ; பிறரு நீ சிந்தை நீ ; உணர்வு நீ ;சீவன் நீ ;
யாவு நீ.
(குமரகுருபரர் சிதம்பர செய்யட் கோவை)

70) போகமாய் விளைந்தோய் நீ; புவனமாய்ப் பொலிந்தோய் நீ; ஏகமா
இருந்தோய் நீ ; பெண்ணிறந்து நின்றோய் நீ; வானு நீ; நிலனு நீ; மதியு நீ;
கதிரு நீ; ஊனு நீ; உயிரு நீ; உளது நீ; இலது நீ.

71) பெரியை நீ; சிறியை நீ; பெண்ணு நீ| ஆணு நீ;
அரியை நீ; எளியை நீ; அறமு நீ; மறமு நீ;
விண்ணு நீ; மண்ணு நீ; வித்து நீ; விளைவு நீ;
பண்ணு நீ; பயனு நீ; பகையு நீ; உறவு நீ.
(குமரகுருபரர் மதுரைக் கலம்பகம்)

நேசனும் நீ சுற்றமும் நீ நேர்
நின்று அளித்துவரும் ஈசனும் நீ ஈன்று அருளும்
எந்தையும் நீ என்றே நின் தேசுறு சீர்
ஐந்தெழுத்தும் செப்புகின்ற நாயேனை
ஆசு அகலும் வண்ணம் அருள் புரிந்தால் ஆகாதோ
(திருவருட்பா : 2573)

தமிழகத்தின் நவ கைலாயங்கள் (Nava Kailasams of Tamil Nadu)

பொதிகை குடும்பன் சண்முகக் குமார்

தென் பொதிகை ஆவணக் காப்பகம், தென்காசி

முன்னுரை

நவகைலாயங்கள் என்பவை தமிழ் நாட்டின் தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ள ஒன்பது சிவாலயங்கள் உள்ள ஊர்களைக் குறிப்பதாகும். இவை திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் அமைந்துள்ளன. இத் தலங்களைத் தரிசித்தால் மக்கள் தாம் செய்த பாவங்களிலிருந்து விடுபட்டு முக்தி அடையலாம் என்று நம்பப்படுகிறது.

நவகைலாயங்களின் வரலாறு: (History of Nava Kailasam)

அகத்திய முனிவரின் சீடர்களில் முக்கியமானவரான உரோமச முனிவர் தன் குருவான அகத்தியரின் உதவியுடன் சிவபெருமானை நேரில் தரிசித்து அதன் மூலம் முக்தி அடைய வேண்டும் என்று விரும்பி தனது குருவிடம் அதற்கான வழிமுறைகளைக் கேட்டதாகவும் அதற்கு அகத்திய முனிவரும் தாமிரபரணி ஆற்றில் ஒன்பது தாமரை மலர்களை மிதக்க விட்டு அவை ஒவ்வொன்றாக கரை ஒதுங்கும் இடங்களில் லிங்கம் ஒன்றைத் திருநிலைப்படுத்தி சங்கு மூலம் நீராட்டி நவக்கிரகங்களின் வரிசையில் சிவபெருமானை வழிபட்டால் சிவனின் திருக்காட்சி கிடைக்கும் என்றும் அதன் மூலம் முக்தி அடையலாம் என்றும் கூறி ஒன்பது தாமரை மலர்களைத் தாமிரபரணி ஆற்றில் மிதக்க விட்டார். அந்த மலர்களைத் தொடர்ந்து சென்ற உரோமச முனிவரும் தனது குரு கூறியபடி நவ கைலாயங்களை உருவாக்கி சிவபெருமானை வழிபட்டு முக்தி அடைந்தார். அம்மலர்கள் கரை ஒதுங்கிய இடங்கள்தான் இப்போது நவகைலாயங்கள் என்று. அழைக்கப்படுவதாகவும் இத்திருத்தலங்களின் வரலாறுகள் குறிப்பிடப்படுகின்றன.

நவகைலாயங்கள்:

பாபநாசம், சேரன் மகாதேவி, கோடக நல்லூர், குன்னத்தூர், முறப்பநாடு, திருவைகுண்டம், தென்திருப்பேரை, ராஜபதி, சேந்தபூமங்கலம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள சிவாலயங்கள் நவகைலாயங்கள் ஆகும்.

இவற்றில் முதல் மூன்று தலங்களை மேல் கைலாயங்கள் என்றும், அடுத்த மூன்று தலங்களை நடுக் கைலாயங்கள் என்றும் இறுதி மூன்றினை கீழ்க் கைலாயங்கள் என்றும் வகைப்படுத்துவர். நவகைலாயச் சிவத்தலங்களில் நவக்கிரகங்களின் வழிபாடுகளும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இத் திருத்தலங்களில் நவக்கிரகங்கள் சிவனை வழிபட்டதாகக் தலபுராணங்கள் இயற்றப்பட்டுள்ளன.

முதல் கைலாயம்- பாபநாசம்:

பாபநாசத்தில் வீற்றிருக்கும் இறைவனுடைய தலமே முதல் கைலாயமாகும். இத்தலம் சூரியன் தலமாகும். இங்கு உலகம்மையுடன் உடனுறை பாபநாசர் என்ற கைலாயநாதர் முதன்மைத் தெய்வம் ஆவார்.. ரிக், யஜூர், சாம வேதங்களாகிய மூன்று வேதங்கள் களா மரங்களாக உருவெடுத்து முதல் கைலாயமாகிய பாபநாசத்தில் சிவபெருமானை வழிபட்ட காரணத்தினால் இவர் முக்களாலிங்கர் என்றும் அழைக்கப்படுகிறார். நான்காவதாகிய அதர்வண வேதம் மேகமாக நின்று குடை பிடித்தது என்பர். திருக்கைலாயத்தில் நடைபெற்ற சிவன், பார்வதி திருமணக் காட்சியை சித்திரை மாதம் முதல் நாளன்று பாபநாசத்தில் பொருநை ஆறு ஓடி வரும் கல்யாண தீர்த்தம் எனும் இடத்தில் அகத்தியருக்கு இறைவன் வெளிப்படுத்தினார். தெற்கு வடக்காக இங்கே பாயும் தாமிரபரணி இக்கோயிலின் முன்பு கிழக்கு நோக்கி திரும்புவது கோயிலின் தனிச் சிறப்பு ஆகும்.

பாபநாசம் கோயில்

வழிபாட்டின் சிறப்பு:

ஒருவர் தனது பாவத்தைப் போக்க காசிக்குப் போக வேண்டும் என்று கூறுவர். ஆனால் காசியில் வாழும் ஒருவர் செய்த பாவம் தொலைய எங்கே போவது?. அவர் பாபநாசம் வந்து தாமிரபரணி ஆற்றில் நீராடி பாபநாசரை வணங்கினால் காசியில் செய்த பாவம் தீரும் என்று தலபுராணம் குறிப்பிடுகின்றது. சூரியத் தலமான இக்கோயிலுக்கு வந்து வழிபட்டால் கண் நோய், தோல் வியாதிகள் நீங்கி உடல் ஆரோக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. பாபநாசம் கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் கும்பகோணம் அருகே உள்ள சூரியனார் கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் ஒன்றாகும் என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் நம்பிக்கையாகும்

இரண்டாம் கைலாயம் -சேரன்மகாதேவி:

சேரன்மகாதேவியில் அருள்மிகு அம்மைநாதர் என்ற கைலாயநாதர் அருள்தரு ஆவுடைநாயகியுடன் உடனுறைந்து காட்சி அளிக்கிறார். இத்திருத்தலம் சந்திரன் தலமாக வணங்கப்படுகிறது. உரோமச முனிவர் பொருநையாற்றின் கரையிலிருந்த ஆலமரம் ஒன்றின் அடியில் சிவலிங்கத்தை நிறுவி வழிபட்டதால் இங்கு ஆலமரம் தல விருட்சமாகப் போற்றப்படுகிறது.

நெல்குத்தி பிழைப்பு நடத்தி வந்த இரு சகோதரிகள் இந்த கோயிலைப் பெரிதாக கட்ட பேராவல் கொண்டு பெருமுயற்சி செய்தனர். சிவபெருமான் அவர்களுக்கு அருள்புரிய அவர்களது எண்ணம் நிறைவேறியது. சந்திரன் தலமான சேரன்மகாதேவியில் பாயும் தாமிரபரணியிலுள்ள வியாசர் தீர்த்தக்கட்டம் மிகவும் சிறப்புடையதாகும். இந்த இடத்தில் மார்கழி மாதம் வளர்பிறைக் காலத்தில் சப்தமி திதி அன்று புகழ் வாய்ந்த புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்றும் சங்கமம் ஆகின்றன. அந்த நல்வேளையில் சேரன்மகாதேவிக்கு வந்து தாமிரபரணியில் மூழ்கி இறைவனைத் தரிசனம் செய்பவர்களுக்கு உலகில் உள்ள அத்தனை புண்ணிய நதிகளுக்கும் சென்று நீராடிய பலன் கிட்டும் என்பது நம்பிக்கை. மூன்று நதிகள் சேரும் மகாவதிபாதம் என்று இத்திருத்தலத்தில் பெருவிழா கொண்டாடப்படுகிறது.

சேரன்மாதவி, அம்மைநாதர் திருக்கோவில்

நோய் தீர்க்கும் பாறை:

ஆற்றங்கரையில் இரனவிமோசனப் பாறை என்ற பெயரில் ஒரு பாறை உள்ளது. இந்தப் பாறைக் கோயிலுக்கும், வியாச தீர்த்தத்திற்கும் சென்று வழிபட்டால் தீரா வியாதி மற்றும் உடல் ஊனம் குணமாகும்.

வழிபாட்டின் பலன்:

சேரன் மகாதேவியில் இறைவனை வழிபட உழவுத் தொழில் சிறக்கும். நல்ல உடல் ஆரோக்கியம் கிடைக்கும். இத்தலம் சந்திரன் தலமாக அமைந்திருப்பதால் பக்தர்களின் உடல் மேலும் மேலும் அழகும் பொலிவும் பெறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும். இத்தலத்திற்குச் சென்று வழிபடுவதும் தஞ்சாவூர் அருகில் உள்ள சந்திரஸ்தலமான திங்களூர் சென்று வழிபடுவதும் ஒரே பலனை வழங்கும்.

மூன்றாம் கைலாயம் - கோடகநல்லூர்

கோடகநல்லூர் திருக்கோயில்

கோடகநல்லூரில் அருள்மிகு கயிலாசநாதர் அருள்தரும் சிவகாமி அம்மையுடன் உடனுறைந்து காட்சி அளிக்கிறார். இத் தலம் செவ்வாய் தலமாகும். கார்க்கோடகன் என்னும் பாம்பு தனது பாவம் நீங்க இத்திருத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு சாபவிமோசனம் பெற்றதால் இவ்வூருக்கு வரும் யாரையும் நாகம் தீண்டக்கூடாது என்று இறைவன் ஆணையிட்டார் எனவே இவ்வூர் கோடகநல்லூர் என்று பெயர் பெற்றதுடன் இவ்வூரில் பாம்புகள் மிகுதியாக உள்ள போதிலும் யாரையும் இதுவரை தீண்டியதில்லை என்பது வரலாறு.

அன்றாடம் திருக்கல்யாணம்:

செவ்வாய் தோஷம் நீங்கிட கோடாகநல்லூர் ஆலயத்துக்கு வரவேண்டும் என்பது சிவனடியார்களின் நம்பிக்கை..

பொதுவாகவே திருக்கல்யாணம் என்பது பெண் தெய்வங்களுக்கே நடைபெறும். ஆனால் இந்த ஆலயத்தில் நந்தி தேவருக்கு தினமும் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. திருமணத் தடைகள் நீங்கி விரைவில் திருமணம் நிகழ்வதற்காக நந்தி தேவருக்கு திருமணம் செய்து வைக்கும் அன்பர்களுக்குத் தம் கோரிக்கை நிறைவேறியதும் நந்தி தேவருக்கு மணிக்கட்டி அழகு பார்ப்பதும் இத்திருத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.

கோடகநல்லூர், சிவகாமி உடனுறை கோடகநாதர்

கோடகநல்லூர் இறைவனை வணங்குவது சீர்காழி அருகே உள்ள செவாய் ஸ்தலமான வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்று வணங்குவதற்கு ஒப்பானதாகும்.

நான்காம் கைலாயம் - குன்னத்தூர்

திருநெல்வேலியிலிருந்து ஆறு கி.மீ தொலைவில் அருள்மிகு கோதைபரமேஸ்வரர் அருள்தரு சிவகாமசுந்தரியுடன் உடனுறைந்து காட்சி அளிக்கிறார். இத்தலம் இராகு தலம் என்றும் அழைக்கப்படுகிறது. இராகுவின் தோஷம் நீங்க ஒருவர் பரிகாரம் செய்யவேண்டிய திருத்தலம் தாமிரபரணி கரையில் அமைந்துள்ள நான்காம் கைலாயமாகிய குன்னத்தூர் சங்கணி ஆகும்.

குன்னத்தூர் கோத பரமேசுவரர் கோயில்

வழிபாட்டின் பலன்:

குன்னத்தூர் சங்கணி தலத்தின் இறைவனை தரிசிப்பதின் மூலம் வயிற்றுக் கோளாறு, மனநோய், மூல நோய் போன்ற நோய்கள் நீங்கிவிடும் என்பது சிவனடியார்களின் நம்பிக்கை ஆகும். இக்கோவில் மூலவராகிய கயிலாசநாதரின் நெஞ்சில் சர்ப்பம் ஒன்று உள்ளது போல வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை அபிசேகம் நடைபெறும்போது மட்டுமே பார்க்க இயலும். இராகுவுக்கே அதிபதியான இவர்தனது உடலில் சர்ப்பத்தினைத் தாங்கி நிற்பது போல் சிவலிங்கத்தின் அமைப்பு உள்ளது.

ஒரே கல்லில் செதுக்கப்பட்ட பிரம்மாண்டமான ஆறுமுக நயினார் சந்நிதியும், எழுந்திருப்பதைப் போலவும் அமைக்கப்பட்டுள்ள நந்தியின் திருவுருவச்சிலையும் பக்தர்களுக்கு பெரும் விருந்தாக அமைகின்றன.

கல்வெட்டுச் சிறப்பு:

வரலாற்றுச் சிறப்புமிக்க செய்திகள் பல குன்னத்தூர் சங்கணி கோயிலில் உள்ளன கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு இவை சிறப்பு விருந்தாகும். இத்தலத்திற்கே சென்று வழிபடுவதும் கும்பகோணம் அருகில் உள்ள திருநாகேசுவரத்திற்கே சென்று வழிபட்ட பலனைத் தரும்.

அன்னை சிவகாம சுந்தரி

ஐந்தாம் கைலாயம்: முறப்பநாடு

முறப்பநாட்டில் அருள்மிகு கயிலாசநாதர் அருள்தரு சிவகாமியம்மையுடன் உடன் உறைந்து காட்சி தருகிறார். இத்தலம் குரு தலம் ஆகும். முறப்பநாட்டுக்கு வந்து கயிலாசநாதரை வணங்கிட கல்வி, செல்வம், பட்டம், பதவி போன்ற சகல உயர்வுகளும் கிடைக்கும்.

முறப்பநாடு கைலாச நாதர் கோயில்

இந்தியாவில் இரண்டு நதிகள் தான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி பாய்கின்றன. ஒன்று காசியில் ஓடும் கங்கை மற்றொன்று முறப்பநாட்டில் ஓடும் தாமிரபரணி. இதனால் முறப்பநாட்டில் ஓடும் தாமிரபரணி தட்சிண கங்கை என்று சிறப்பிக்கப்படுகிறது. இந்தத் தட்சிண கங்கையில் ஆடி மற்றும் தை அமாவாசை தினங்களிலும், மாதந்தோறும் கடைசி வெள்ளிக் கிழமைகளிலும் நீராடி கயிலாசநாதரை வணங்கினால் காசியில் குளித்த புண்ணியம் கிட்டுவதுடன் வேண்டிய வரமும் கிடைக்கும் என்பது சிவனடியார்களின் நம்பிக்கையாகும்.

ஸ்தல விருட்சம்

ஆறாம் கைலாயம்- திருவைகுண்டம்:

திருவைகுண்டத்தில் அருள்மிகு கயிலாசநாதர் அருள்தரு சிவகாமியம்பிகையுடன் காட்சி தருகிறார். இத்திருத்தலம் சனி தலம், பூலோக கைலாயம் என்று போற்றப்படுகிறது. இங்குக் கயிலாசநாதர் தாமே தோன்றிய சுயம்பு மூர்த்தி ஆவார்.

வழிபாட்டின் பலன்:

திருவைகுண்டத்தில் சனிப் பரிகாரம் செய்தால் தடைபட்ட திருமணம் நடைபெறும், இழந்த சொத்துக்கள் மீண்டும் கைக்கு வரும் என்பது நீண்ட கால நம்பிக்கை ஆகும்.

முன்பு கோயில் அர்ச்சகர்கள் கோயில் நடை சாத்திவிட்டு சாவியை வீட்டுக்கு எடுத்துச் செல்வதில்லை. கோயில் வாசலில் உள்ள அக்னிபுத்திரர் மற்றும் வீரபத்திரர் ஆகிய இரு காவல் தெய்வங்களின் காலடியில் வைத்து விட்டு செல்வார்கள். மறுநாள் வந்து சாவியை எடுத்து கோயில் நடை திறப்பார்கள்.

திருவைகுண்டம்

குமரகுருபர சுவாமிகள் அவதரித்த திருத்தலம் ஆகும். இத்தலத்துக்கு வந்து வழிபடுவதும் காரைக்கால் அருகில் உள்ள திருநள்ளாறு சனீசுவரன் கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் ஒரே பலனைத் தரும்.

ஏழாம் கைலாயம் - தென்திருப்பேரை:

தென்திருப்பேரையில் அருள்மிகு கயிலாசநாதர் அருள்தரு அழகிய பொன்னம்மையுடன் காட்சி தருகிறார். இத்தலம் புதன் தலமாக போற்றப்படுகிறது.

வழிபாட்டின் பலன்:

தென்திருப்பேரை கயிலாசநாதரை வணங்கினால் பேச்சுத்திறன் வளரும். நூலறிவும் நுண்ணறிவும் பெருகும். வாதம் மற்றும் பித்த நோய்கள் தீரும்., ஏவல், செய்வினை போன்றவற்றால் ஏற்படும் தீமைகளும், பில்லி சூனியங்களும் விலகும். நீண்ட நாள் பிரச்சனைகள் அனைத்தும் தாமாகவே தீர்ந்து விடும். இக்கோயிலுக்கு வருவோர்க்கு சிவ ஞானம் கிட்டும்.

மழைக்கு அதிபதியான வருணன் மற்றும் நவக்கிரகங்களில் மழைக்குரிய சுக்ரன் ஆகியோர் இங்கு வந்து தவம் இயற்றி சிவனருள் பெற்ற காரணத்தால் இத்தலம் வருண சேத்திரம் என்று அழைக்கப்படுகிறது.

தென்திருப்பேரை கோயிலுக்கு வந்த வெள்ளைக்கார ஆட்சித் தலைவர்க்கு இறைவன் தன் மகிமையைக் காட்ட கொம்பு முளைத்த தேங்காயை அளித்தார். அத்தேங்காய் இன்றும் கோயிலில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தென்திருப்பேரை

தலத்துக்கு வந்து இங்குள்ள இறைவனை வழிபடுவதும், சீர்காழி அருகில் உள்ள புதன் தலமாகிய திருவெண்காடு சென்று வழிபடுவதும் சம பலனைத் தரும்

எட்டாம் கைலாயம்- இராசபதி:

இராசபதியில் அருள்மிகு கயிலாசநாதர் அருள்தரு சௌந்தரநாயகியுடன் காட்சி தருகிறார். இத்தலம் கேது தலமாக வணங்கப்படுகிறது. எட்டாம் கைலாயமான இராசபதியில் முற்காலத்தில் நிறுவப்பட்ட கோயில் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. தற்போது புதிதாக அந்த இடத்தில் கம்பீரமாக ஒரு கோயிலை சிவனடியார்கள் அமைத்துள்ளனர்.

வழிபாட்டின் பலன்:

கேது தலமான இராசபதி கோயிலில் வந்து வணங்கி வழிபட்டால் கேதுவால் ஏற்படும் நோய் நொடிகள் நீங்கிவிடும். திருமணத் தடைகள் நீங்கும். அரசர்கள் அக்காலத்தில் கேது அம்சமான இத்தல சிவபெருமானை வணங்கி போரில் வெற்றி பெற்றதாகவும், வாழ்க்கையில் இத்தகைய வெற்றி வேண்டுவோர் இக்கோயிலுக்கு வந்து வணங்கினால் வெற்றி பெறுவர் என்பதும் நம்பிக்கை.

இராசபதியின் இறைவனை வழிபட குடும்பத்தில் இருந்து வந்த சண்டை, சச்சரவு நீங்கும். நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் குணமாவதுடன் மரண பயம் நீங்கி ஞானம்

கிட்டும். சர்க்கரை நோய் உள்ளவர்கள் பதினோரு பிரதோஷங்கள் வந்து வணங்கினால் நோய் தீர்ந்து நல்லருள் பெறுவர். இரத்தம் சம்பந்தப்பட்ட நோய்களும் தீரும்.

இராசபதி இறைவனை வழிபடுவதும் ஆந்திர மாநிலம் காளஹஸ்திக்குச் சென்று வழிபடுவதும் ஒன்றாகும்

ஒன்பதாம் கைலாயம்: சேந்தபூ மங்கலம்

சேர்ந்தபூ மங்கலத்தில் அருள்மிகு கயிலாசநாதர் அருள்தரு சௌந்தரநாயகியுடன் காட்சி அளிக்கிறார். இத்திருத்தலம் சுக்கிரன் தலமாக போற்றப்படுகிறது.

வழிபாட்டின் பலன்:

சேர்ந்தபூ மங்கலத்தின் இறைவனை வழிபட சுக்ர யோகம் கிட்டும். புகழ், செல்வம் நற்பெயர் இறையருள் கிட்டும். தொழிலில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் இக்கோயிலுக்கு வந்து சுக்ர ஓலையை எழுதிவைத்து சிறப்பு பூசை செய்தால் தொழிலில் விருத்தி ஏற்படும். இதற்காக இத்தலத்தில் வெள்ளி தோறும் சிறப்புப் பூசை நடைபெறுகிறது. மேலும் இக்கோயிலில் நீரஞ்சனப் பூசை செய்தால் குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பேறு கிடைக்கும். திருமணம் மற்றும் இல்லற வாழ்க்கை சிறப்பாக அமைய இத்திருத்தல இறைவனை வழிபடுவதும் கும்பகோணம் அருகே கஞ்சனூரில் உள்ள சுக்கிரன் தலத்துக்குச் சென்று வழிபடுவதும் ஒரே பலனைத் தரும்

சேந்த பூ மங்களம், நவ கிரக சந்நிதி

அம்மன் கோயில்களில் பௌத்தத் தடயங்கள்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

தமிழ்நாடு குமரிக்கண்டமாக இருந்த காலத்திலிருந்து பெண் தெய்வ வழிபாடு இருந்து வருகின்றது. ஆதியில் பெண்ணை மூத்தவளாகவும் தலைவியாகவும் கருதி அக்கா வழிபாடு இருந்தது. பின்பு அவளுடைய பிள்ளைப்பேற்று சக்தியைக் கண்டு வியந்ததால் தாய்த் தெய்வ வழிபாடு தோன்றியது. அதன் பின்பு ஆண் தெய்வ வழிபாடாக குமரன் வழிபாடு தோன்றியது.

கொடுங்கொள்ளூர் பகவதி பரணி தொழல்

அம்மன் வழிபாட்டு வரலாறு

தாய்/ அம்மன் வழிபாடு படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைச் செய்பவளாக வளர்ந்தது. நாகர்கள் இனமாக பழங்காலத்து மக்கள் வாழ்ந்த காலத்தில் நாகத்தை ஆட்டி வைக்கும் பிடாரி நாகர் குலத்தின் பெண் தெய்வமாகப் போற்றப்பட்டாள். அக்காலகட்டத்தில் 'ஊருக்கு ஒரு பிடாரி' இருப்பது மரபாயிற்று. அதன் பின்பு கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழகம் வந்த பௌத்த சமயம் பெண் தெய்வ வழிபாட்டை முறைப்படுத்தியது. பெண் புத்தர் என்ற நிலையில் தாரா தேவிக்கு தங்கள் மடாலயங்களில் வழிபடு தகுதியை வழங்கியது. இவள் பிள்ளை வரம் தருபவள் ஆகவும் நோயிலிருந்து மக்களைக் காக்கின்றவளாகவும் வேளாண் கடவுளாகவும் பல வகையில் பல உருவங்களில் போற்றப்பட்டாள். பௌத்த சமயம் பெண் தெய்வ வழிபாட்டை வகைப்படு விரிவாக்கியது இருந்தது. சைவ, வைணவ சமயங்கள் தவ்வை, பிடாரி, தாரா, பின்னரே பெண்தெய்வங்களின்பெயர்மற்றும்கதைகளைசம்ஸ்கிருதமயமாக்கி தன்வயப்படுத்தின. *(Sanskritised and Synchronised)*

பௌத்தத்தில் பெண் தெய்வ வழிபாடு

பௌத்த சமயத்தில் இருந்த அம்மன் வழிபாடு இந்து சமயத்தில் இரண்டு வகையாக மாறியது. ஒன்று லலிதாசனத்தில் அமர்ந்திருக்கும் மாரியம்மன் மற்றொன்று வீராசனத்தில் அமர்ந்து தலையை ஒருபுறம் சாய்த்தபடி காணப்படும் காளியம்மன்.

பெண் மருத்துவ புத்தர் பர்னஷ்வரி

பௌத்த சமயத்தில் பர்னஷ்வரி என்ற பெண் புத்தர் தொற்று நோய்களைத் தீர்க்கும் தேவதையாக நீல நிறத்தில் /கருப்பு நிறத்தில் வணங்கப்பட்டார். மருத்துவ புத்தர் சிம்மாசனத்தில் எழுந்தருளி இருந்தார். பௌத்த சமயத்தில் மருத்துவ சேவை மடாலயங்களில் முக்கியப் பணியாக நடைபெற்றது. ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனியாக அவர்கள் ஒரு புத்தரை வைத்து வழிபட்டனர்.

விஷக்கடி சுகமாக்கும் தாரா

தாராவைப் பெண் புத்தராகக் கருதி அவளைப் பல நிறங்களில் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் பச்சை என்று பல பயன்களுக்காக வழிபட்டனர். பச்சை தாராவை (ஜங்குலி தாரா)

ஷியாம் தாரா என்ற பெயரில் பச்சை, நீலம், கருப்பு நிறம் கொண்டவளாக வணங்கினர். இவள் பாம்பு, தேள் போன்ற விஷக்கடியின் தீமைகளைப் போக்குவாள். இந்தத் தாராவுக்கு ஆறு கரங்கள் அல்லது எட்டுக் கரங்கள் உண்டு. ஜங்குலி தாரா இலைகளாலான (இங்கு வேம்பு) அரையாடை உடுத்தி இருந்தாள். வலது பக்கக் கரங்களில் வஜ்ராயுதம், மழு, அம்பு, ஆகியவற்றையும் இடது பக்கக் கரங்களில் வில், மலர், கிளை ஆகியவற்றையும் கொண்டிருந்தாள். இவள் காலப்போக்கில் தென் மாவட்டங்களில் மாரியம்மன் எனப்பட்டாள். வட மாவட்டங்களில் ரேணுகா தேவி ஆனாள்.

மீனாட்சி மாதங்கி

பிடாரியை பௌத்த சமயம் தனது விஷக்கடி போக்கும் பச்சை தாரா அல்லது ஜாங்குலி தாராவுடன் இணைத்தது. ஆனால் சைவ சமயப் பேரெழுச்சிக்குப் பின்பு பௌத்தர்களின் சாமி பெயர்கள் நீக்கப்பட்டன. பச்சை தாரா பல இடங்களில் சிவன் கோயில்களில் அம்மன், மாரியம்மன், திரவுபதியம்மன், ரேணுகா பரமேஸ்வரி, என்று பெயர் மாற்றம் பெற்றாள். பழந்தமிழர்களான நாகர்களின் பூர்விக தெய்வமான பிடாரிக்கு காளியம்மன் என்ற பெயர் நிலைத்தது. .சில ஊர்களில் துர்கா பரமேஸ்வரி, உஜ்ஜினி மாகாளி, பேச்சியம்மன், பெரியாச்சி அம்மன் என்று பெயர் பெற்றாள்.

தனி அம்மன்

பௌத்த மருத்துவத் தெய்வமான பரனஷ்வரி உருவத்தில் சமயபுரம் மாரியம்மன், சிறுவாச்சூர் மதுர காளியம்மன் போல் லலிதாசனத்தில் அமர்ந்திருப்பாள். ஒரு காலை மடித்து ஒரு காலைத் தொங்கவிட்டு இருக்கும் இவர்களுக்கு ஆறு கைகள் அல்லது எட்டுக் கைகள் இருக்கும். காலடியில் அசுரன் சிலை இருக்கும். ஆதியில் இவர்களுக்கு கண்வன் (சிவன்) கிடையாது. ஆதி சங்கரர் காலத்தில் சில கோயில்களில் அருகில் ஒரு சிவனையும்

பிரதிஷ்டை செயத்தனர். இப்பெண் தெய்வங்களின் வீரியத்தைக் குறைக்க மேருமலை ஸ்ரீ சக்கரம் தாடங்கம் போன்றவற்றைச் சேர்த்தனர்

நோய் தீர்க்கும் அமிர்தம்

மாரியம்மன் என்று பெயர் சூட்டப்பட்ட பௌத்த மருத்துவப் பெண் தெய்வங்களின் வலது கையில் ஒரு மருந்து கிண்ணம் இருக்கும். இவர்களின் நோய் தீர்க்கும் சக்தியை இக்கிண்ணம் புலப்படுத்தும். இதனை நோய் தீர்க்கும் அமிர்தம் என்றே பௌத்தர்கள் அழைத்தனர். ஆனால் வைதீக மரபினர் இதனை கபாலம் என்றனர்.

பச்சை தாரா - மாரியம்மன்

தாரா பௌத்த சமயத்தில் அமோக சித்தி எனப்படும் சுயம்பு புத்தரின் பெண் இணை ஆவாள். தாராவை வேறு பல நிறங்களில் நேபாளத்தில் இளவரசியாகக் கருதி வணங்குகின்றனர். காலம் செல்ல செல்ல தாரா வழிபாடு விரிவடைந்து பல உயரங்களைத் தொட்டது.

பௌத்தர் காலத்தில் இருந்த தாரா வழிபாடு இந்து சமயத்தில் இரண்டு வகையாக மாறியது. பச்சைதாரா வழிபாடு லலிதாசனத்தில் அமர்ந்திருக்கும் மாரியம்மன் வழிபாடாக மாறிற்று. இவள் வேளாண் தெய்வம்.. மக்களை நோய்களில் இருந்து காக்கும் காவல் தெய்வம். நோய் தீர்ப்பாள். குழந்தை வரம் தருவாள். இவள் கோயில்களில் தோல் நோய் தீர, மறு, பரு கரைய மிளகு, உப்பு, வெல்லம் காணிக்கையாக செலுத்துவர்

ருத்ர தாரா + பிடாரி= காளியம்மன்

இரண்டாவது வகையான ருத்ர தாரா வழிபாடு வீராசனத்தில் அமர்ந்து தலையை ஒருபுறம் சாய்த்தபடி சூலாயுதத்தைக் கொண்டிருக்கும் காளியம்மன் வழிபாடாக மாறியது. சபெரிய சூலாயுதங்கள் பிற்காலத்தில் அம்மன் அருகில் வைக்கப்பட்டன. இவர்களின் காலடியில் ஒரு ஆண் (அசுரன் அல்லது சிவன்) இப்பெண் தெய்வகளிடம் வதை பட்டுக் கிடப்பான். இவ் வழிபாட்டில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்த முன்பிருந்த பிடாரி வழிபாடும் இணைந்தது. மயானத்தின் அருகே கோவில் கொண்டுள்ள வக்ரகாளி, கோலவிழி அம்மன் ஆகியோர் இவ்வகை காளியம்மன் ஆவர். இவர்கள் கொலைத் தெய்வங்கள். தவறு செய்தவரைக் கருவறுப்பர். கொடூரமாகக் கொலை செய்வர். பெண்களையும் கொல்வர். வயிற்றைக் கிழித்துக் குடலை உருவிக் கொல்வர்.

ருத்ரம் என்றால் கோபம் மற்றும் ஆங்காரம். காளியம்மன் தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் நீதி தேவதை. காளியம்மனிடம் கருணையை எதிர்பார்க்க இயலாது. வெட்டுடையார் காளி, மடப்புரத்துக் காளி, வெக்காளி போன்றோர் தண்டனை வழங்கும் தெய்வங்கள். நீதிமன்றங்களில் சாட்சியின்றி தப்பித்த குற்றவாளிகள் கூட காளியம்மனிடம் இருந்து தப்பிக்க முடியாது.

மருத்துவ புத்தர் - பாய்சாஜ்யா குரு

மகாயான பௌத்தத்தில் பாய்சாஜ்யா குரு *(Bhaisajyagiru)* என்பவர் மருந்துக்குரிய புத்தர் ஆவார். *(Medicine Buddha)* என்பவர் யாக்குஷி நியோரா என்பவர் சுகமாக்கும் புத்தர் *(Healing Buddha)*. ஆவார்.பௌத்தர்கள் மருத்துவத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினர். தங்கள் மடாலயங்களில் மக்களுக்கும் கால்நடை மற்றும் பறவைகளுக்கும் இலவச மருத்துவ சேவை செய்தனர். காத்து, கருப்பு, கண் திருஷ்டி, ஏவல், பில்லி, சூன்யங்களையும் சரி செய்தனர். இதனால் மக்கள் இவர்களின் தெய்வங்களை தொடர்ந்து வேறு பெயர்களில் இன்று வரை வழிபட்டு வருகின்றனர். மாரியம்மன், காளியம்மன் கோயில்களில் மக்களின் இக்குறைகள் பல்வேறு நேர்த்திக்கடன்களால் தீர்க்கப்படுகின்றன.

மேச்சேரி பத்ரகாளி அம்மன்

எளிய முறையில் யாப்பறிவோம்

நெருப்பலையார்.இராம இளங்கோவன்
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூர்

பாடம் -41.
தரவிணைக் கொச்சகக் கலிப்பா.

கலிப்பா வகைகளில் **தரவிணைக் கொச்சகக் கலிப்பா** என்ற பா வகையும் ஒன்று. இரண்டு தரவுகள் இணையாக வந்ததால் இது **தரவிணைக் கொச்சகக் கலிப்பா** என்று பெயர் பெற்றது. தரவுகளுக்கு இடையிடையே தனிச்சொற்கள் பெற்று வந்த தரவிணைக் கொச்சகக் கலிப்பா இதுவாகும். முதலில் மூன்றடித் தரவு பாடல் வரும். மூன்றடித் தரவுக்கடுத்துத் தனிச்சொல் பெற்று வரும். தனிச்சொல்லைத் தொடர்ந்து மீண்டும் இரண்டாவதாக மூன்றடித் தரவு ஒன்று வரும். பின்னர் தனிச்சொல் வரும். இறுதியாக இரண்டடிச் சுரிதகம் வந்து பாடல் நிறைவு பெறும். இரண்டு தரவுகளின் ஒவ்வோரடியும் நான்கு சீர்கள் கொண்ட அளவடியாகவே வரும்.

மூன்றடிக்கோர் எதுகைப் பெற்று வரும். தரவு முடியும் போது ஈற்றுச் சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடியும். ஒவ்வோரடியிலும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை பெற்று வரும். இதேபோல், ஆசிரியச் சுரிதகம் இரண்டடிக்கும் ஓர் எதுகைப் பெற்று வரும். இரண்டடிச் சுரிதகத்தில் முதலடி சிந்தடியாக வந்து, ஈற்றடி அளவடியாக வரும். முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமையும். சுரிதகம் முடியும் போது ஈற்றுச் சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடியும். இனி,

எடுத்துக் காட்டுப் பாடலைக் காண்போம்.

இயல்பு நிலையில் இறங்கி நிற்பாய்!
(தரவிணைக் கொச்சகக் கலிப்பா)

மூன்றடித் தரவு -1.

இருப்பவரை எப்பொழுதும் ஏற்றிவைத்துப் பாடுவதால்

இருப்பில்லா ஏழையரை இழிவாக பழிப்பதால்,
இருவருக்கும் எந்தவொரு எளியமாற்றம் வாராதே!

தனிச்சொல்: அதனால்,

மூன்றடித் தரவு-2.

வளமாக வானளாவி வாழ்ந்தும் அவர்க்குமட்டும்
இளகிடுமோ எப்பொழுதும் இயற்கையின் அறமெல்லாம்?
களத்தினிலே உயர்வுதாழ்வு கனிவதுவே வாழ்வாகும்!

தனிச்சொல்: இதையுணர்ந்து,

இரண்டடிச் சுரிதகம்:

நலங்களே எங்கும் நாட்டில்
உலவிட வேண்டியே ஓங்கிச் சொல்கவே!

நெருப்பலையார்.

இப் பாடத்தில் **தரவிணைக் கொச்சகக் கலிப்பா** என்னும் யாப்பிலக்கணத்தை எடுத்துக் காட்டுப் பாடலுடன் பயின்றோம். அடுத்த பாடத்தில் **சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா** என்னும் பா வகையைப் பற்றிக் கற்றிடுவோம்.

யாப்பிலக்கணம் வளரும்.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

Translator, Publisher, Madurai

Chapter 15

Sumeria 12,407 B.C.

This is a story told by a man who swam in the east.

Those people went and settled in different places and formed cities. They had stone weapons. Another thousand years after the next deluge, another group called Iruks also joined them. They knew to make bricks. They built houses and forts with bricks. At that time, few came to demolish the forts. They didn't like people to build forts and protect them. He was called Indra.

Indrans' army thought it was against nature to build forts. Their lifestyle was based on cattle rearing and hunting. They kept on moving. Indra traveled on a horse. They ate the meat of horses. They wore the hide of the horse. They relied upon the position of stars in the sky. They were guided by astronomy. They didn't know anything about the land and they didn't want that too. They were not interested in agriculture. If they found some grains, they took them. They were different in attitude and activities.

They learned the language of the places where they made their tents. They had their own language, and they called it the language of the Gods. They didn't frame a script for their language as it is God's language. They worshipped Agni and Indra as their prime deities.

Thiramidas who swam from the east built their own cities. They called them as Kiilur, maelur, kaavur, paavur, mullai, Kurinji and so on. They lived in the delta regions and coasts. They were good at cattle rearing, agriculture, worship of phallus and vulva, manufacture of hunting and agricultural tools and weapons, sailing in the sea, building huge ships, and others. They were in a more developed position than the other nomadic group. Thiramidas preferred highlands and called them Maerku. The people who came from the east called themselves Iruks and settled between two perennial rivers called Euphrates and Tigris. Pearls, pepper, and peacock feather came from Thiramida. From Musiri to Sumeri, there were many sea ports for the naval trade.

The cities in the highlands were called Maettuur. They buried their dead ones and built Peru maedus [Pyramids]. They named their city Maathurai. This city was the headquarters of their motherland.

There were binary oppositions. Knowledge about the sky and knowledge about the earth confronted. Horse and Bull challenged. Transience and permanence stood against each other. Traveling on land and sea journeys was different. Moreover, they traveled on and on and never came back to any place they had left earlier. But the Thiramidas came back to their towns and cities after long sea journeys and trade and settled with their families, happily forever.



Indras came with Agni to burn the paddy fields of Thiramidas. They killed the cows, goats, and bulls of the Thiramidas. They came on horses carrying their javelins at a high speed. They planned to abolish the Kiilur seaport. Meanwhile, there happened another incident. The ships from the seas could not reach the port because the sea water was drawn inside the oceans. Boats cannot sail to the ships in the deep sea and unload the imported goods. There could be no more seaports and sea trade. The Iruks waited for hundred years but no change in the sea; so they started moving gradually in groups back to their motherland.

This place is called Iraq nowadays and the people believe that their forefathers swam from the east and settled there. Their great-grandfathers had passed on this story to their younger generations. There are places called Kurinji and Kunru, which refer to the hilly region as told in Sankam poems. He told that twenty years back he visited that place.

Dev recorded everything in his All Tab.

புதிய வெளியீடுகள்









சந்திரோதயம் பதிப்பகம், மதுரை-18.
போன் 7010997639